# தமிழரசு

திங்கள் இருமுறை

ஜூன் 1 1971 35 காசு



# கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி

## கலைஞர் ஆட்சியில்

அறிஞர் அண்ணாவின் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ்
உழவர் பெருமக்களே!
ரொக்கம், உரம், விதை, பூச்சி மருந்து ஆகியவைகளை
வைத்துக்கொண்டு உங்கள் ஊர் கூட்டுறவுச் சங்கம்
உங்களுக்காகக் காத்திருக்கிறது....

நஞ்சைப்பயிராயினும், புஞ்சைப்பயிராயினும் வேளாண்மைக்கு
ஊட்டமளித்து உற்பத்தியைப்பெருக்கத் தேவையான
பொருள்களையெல்லாம் கொடுத்து உதவிவருவது

## கூட்டுறவுச் சங்கமும் மத்தியவங்கியுமே ஆகும்

ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய
குத்தகைதாரர்களுக்கும் கடன் அளவு ரூ
275, வரை உயர்த்தப்பட்டுள்ளது....

| | |
|---|---|
| நெல் சாகுபடியானால் | ரூ. 300 |
| கரும்பு சாகுபடியானால் | ரூ. 850 |
| பருத்தி பயிரிடுவதானால் | ரூ. 400 |
| வாழை சாகுபடியானால் | ரூ. 500 |
| மணிலா கடலையானால் | ரூ. 250 |
| வெற்றிலை கொடிக்கால் என்றால் | ரூ. 1500 |

தரப்படுகிறது...

தானியத்தை வைத்துக்கொண்டும் கடன்
வழங்கப்படுகிறது உங்கள்தேவைகள்
எல்லாவற்றிற்கும் கிராம விவசாயக்
கூட்டுறவுச் சங்கத்தை அணுகுங்கள்!

---

உறுப்பினர்கள் வளர்ச்சிக்குச்
சங்கமும், சங்கத்தின் வளர்ச்சிக்கு
மத்திய வங்கியும் உறுதுணை
செய்கின்றன!

தலைவர்:
**கோ.சி.மணி** எம்.எல்.சி
செயலாளர்:
**மு.பார்த்தசாரதி**

நீங்கள் சங்கத்தில் சேர்ந்துவிட்டீர்களா ?
கடன் மனு கொடுத்து விட்டீர்களா ?
இல்லையேல் இன்றே உங்கள் ஊர்
விவசாயக்கூட்டுறவுசங்கத்தை அணுகுங்கள்...

## மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம்



# தமிழரசு

மலர் 1    1971, சூன் 1    இதழ் 23

## இந்த இதழில்

ஐந்தறைப் பெட்டியில் அருமை அமிழ்தம்

சிற்றூர்

மோகவிளைச்சல்

தமிழ் நாட்டில் மின் வளர்ச்சி

பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி

கேளுங்கள் கொடுக்கப்படும்


மக்களை நாடிவரும் மருத்துவமனை

மாணவர் அரங்கம்

வெண்பாப்போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இருபது



# நான் கேட்கும் பிச்சை

உடன் பிறப்பே,

ஜூன் மூன்றும் நாள் என் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு அந்த விழாவுக்கு நானும் வர வேண்டுமென்று மடல்கள் தீட்டிக் கொண்டேயிருக்கிறாய். என் பிறந்த நாளன்று நான் விழா அரங்குகளுக்கு வருவதை வழக்கமாகவே கொள்ளவில்லை என்பது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஒரு நிபந்தனையுடன் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்வதுண்டு.

என் பிறந்த நாளையொட்டி நான் தொடங்கிவைத்த அண்ணா அறக்கட்டளைக்குப் பெருந்தொகையொன்றினை அன்பளிப்பாகத் தருவதாக இருந்தால் மட்டுமே விழாக்களில் நான் பங்குகொள்ள முடியும் என்பதுதான் அந்த நிபந்தனை. அண்ணா அறக்கட்டளையைத் துவக்கி வைத்ததுதான் என் பொறுப்பு!

ஏனைய பணிகளை அதன் பொறுப்பாளர்கள் கவனித்து வருகிறார்கள். ஒரு கணிசமான தொகை சென்ற ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் என் பிறந்தநாளில் வழங்கப் பெற்று அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை அண்ணா குடும்பத்தாருக்கு அளித்து, மிச்சத்தை அறக்கட்டளையில் சேர்த்துவிட்டேன். வங்கியில் போடப்பட்டுள்ள அந்தப் பணத்திற்கு வரும் வட்டியைக் கொண்டு, ஆண்டுதோறும் பள்ளி இறுதி வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் முதல் எண்கள் எடுத்துத் தேர்ச்சி பெறும் மாணவ மாணவிகளுக்கு மாவட்ட வாரியாக ஒரு தொகை பரிசாக வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் மேற்கொண்டும் பல அறச்செயல்கள் புரிந்திட அண்ணா அறக்கட்டளையினர் முனைந்துள்ளனர். தென்னிந்திய திரைப் படத்துறையினர் சென்ற ஆண்டு என் பிறந்தநாள் விழாவில் அளித்த பெருந்தொகையில் நான் பிறந்த ஊரில் கட்டப்படும் உயர் நிலைப்பள்ளிக்கு இருபத்தையாயிரம் ரூபாய் அளித்தேன்.

மிச்சத்தொகையை வாழ்வில் இன்னலுறும் கலையுலகப் பெருமக்களுக்கு உதவி அளிக்கும் திட்டமொன்றைத் தொடங்குமாறு வேண்டி, கலையுலகத்து நண்பர்களிடமே அளித்து விட்டேன். அவர்கள் என் பெயரால் ஒரு அறக்கட்டளை உருவாக்கி இந்த ஆண்டு அத்தகைய கலைஞர்களுக்கு உதவிப் பணம் தந்திடத் திட்டம் தீட்டியுள்ளனர். ஜூன் இறுதி வாரத்திலிருந்து அந்தக் காரியம் தொடர்ந்து நடக்க இருக்கிறது.

நமது கழக அரசு, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பணியாற்றி வருகிறது என்பதை அனைவரும் அறிவர். அதற்காக விடுதிகள் அமைக்கப்பட்டு ஆங்கு பிச்சைக்காரர்களுக்குத் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப் பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக இந்த ஆண்டு, தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைத்து அவர்களை வீதியில் அலையவிடாமல் அந்த விடுதிகளில் சேர்த்து, வியாதிக்குச் சிகிச்சை அளிப்பதோடு வேலைகள் கற்றுக் கொடுக்கும் பயிற்சியும் தரப்பட இருக்கிறது. அந்த விடுதிகளிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதற்கெனத் திரட்டப்படும் நிதிதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணத் துடித்த அண்ணனுக்குத் தம்பிகள் அல்லவா நாம்! அந்த ஆவலை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

ஜூன் மூன்றும் நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைப் புதிய கவர்னர் முன்னிலையில் தமிழக அரசு தொடங்குகிறது. என் பிறந்தநாள் விழா, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட விழாவாக இருப்பதைவிட எனக்கு வேறொரு மகிழ்ச்சி இருக்க முடியுமா?

உத்தமர் காந்தியடிகள் தொழுநோய்க்காரன் உடலைத் தொட்டுச் சிகிச்சை அளிப்பது போன்ற படம் பொறித்த ஒரு அட்டையை, அன்று தமிழக அரசு விற்பனைக்குக் கொண்டு வருகிறது. ஜூன் திங்கள் முழுவதும் அந்த அட்டை விற்பனையாகும். அதன் விலை ஐம்பது காசு தான்!

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகத் தமிழக அரசுப் பரிசுச் சீட்டு சிறப்புப் பரிசுகளைப் பிரகடனப் படுத்தியிருப்பதையும் நாடு அறியும்.

ஆகவே, ஜூன் மூன்றும் நாள் என்னைப் பார்க்க, பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல, மாலைச் செலவு, ரயில் செலவு இவைகளையெல்லாம் வீணாகச் செய்து கொண்




டிராமல் அந்தச் செலவில் பாதிப் பணத்தைக்கொண்டு ஐம்பது காசு அட்டைகள் பலவற்றைப் பெற்றிட வேண்டுகிறேன். பரிசுச் சீட்டுகள் வாங்கிட வேண்டுகிறேன்.

“ஆவல் அடங்கவில்லை. வந்து தான் தீருவேன்” என்று அடம் பிடித்தால், ஒவ்வொரு மாலை போடும் போதும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குப் பத்து ரூபாய் என்னிடம் கொடுத்தால்தான் ஜூன் மூன்றும் தேதியன்று நான் மாலை போட்டுக் கொள்வேன் என்பதை மட்டும் கண்டிப்பாகச் சொல்லி விடுகிறேன். பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு அரசு எடுக்கும் அரிய முயற்சிக்குத் தமிழகத்தார் அனைவரின் பங்கும் இருந்திடல் வேண்டும். அது ஒன்றே இந்த ஆண்டுப் பிறந்த நாளில், என் உடன் பிறப்பே! நான் உன்னிடம் கேட்கும் பிச்சையாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி.


முதல்வர் எழுதும்
பயணக் கட்டுரை
இனியவை
இருபது

# 17. கடல் விழுங்கிய நாடு

டஸ்ஸல்டார்ஃபிலிருந்து புறப்பட்டு ஹாலந்து நாட்டின் முக்கிய நகரான ஆம்ஸ்டர்டாமை அடையும்பொழுது நண்பகல் 12-45 மணி, அங்கு ஹாலந்து நாட்டில் ஹேக் (The Hague) நகரில் தங்கியிருக்கும் இந்திய தூதுவர் எங்களைவரவேற்க ஆம்ஸ்டர்டாம் நகருக்கு வந்திருந்தார். தன் தாய் நாட்டின் ஒரு மாநில முதல்வரைத் தூதுவர் என்ற முறையில் வரவேற்கும் கடமை உணர்ச்சியை விட அன்புணர்ச்சியே மிகுதியாக அவரிடம் இருக்கக் கண்டேன். பிலிப்ஸ் ஸ்தாபனத்தாரின் உயர்தர அதிகாரிகளும் விமான நிலயத்திற்கு எங்களை வரவேற்க வந்திருந்தனர்.

மேலைநாட்டு விமான நிலயங்கள் யாவும் நவீன வசதிகளுடன் மிகச் சிறந்து விளங்குகின்றன. ஆம்ஸ்டர்டாமும் குறிப்பிடத்தக்க சிறந்ததோர் விமான நிலயமாகும். அங்கிருந்து ''அப்பலோ'' என்ற விடுதிக்குச் சென்றோம். விடுதியிலிருந்த வண்ணம் ஆம்ஸ்டர்டாம் நகரின் தோற்றத்தின் ஒரு பகுதியைக் காணமுடிந்தது. அந்த நகரின் பெரும்பகுதி நீர்மயமாகத் தெரிந்தது. ஒரு மாபெரும் கப்பல் மாளிகையாகத் தண்ணீரின் நடுவே ஆம்ஸ்டர்டாம் விளங்கிக் கொண்டிருந்தது.

ஹாலந்து நாட்டை நெதர்லாந்து என்றும் அழைப்பர். நெதர்லாந்து என்றால் இங்கு வாழ்கின்ற டச்சு மக்களின் தாய் மொழியில் 'தாழ்வான பூமி' என்று பொருள். நாட்டின் பெரும்பகுதி கடல் மட்டத்திற்குத் தாழ்வாகவே இருக்கிறது.

1170-ஆம் ஆண்டில் வடகடல் நெதர்லாந்தின் உட்புகுந்து நூற்றுக்கணக்கான கிராமங்களையும் நகரங்களையும் விழுங்கியது. நாட்டின் தெற்குப்பகுதியில் பல நூறு மைல் பரப்பளவில் பன்னிரண்டு அடி ஆழத்திற்கு 'சூடர் சீ' ( Zuider Zee ) எனப்படும் சிறியதொரு கடலாக வடிவெடுத்தது. 1421-ஆம் ஆண்டில்மீண்டும் கடல் பொங்கி எழுந்து பதினயிரவரைப் பலிகொண்டது. 1953-ல் வேனிற் காலத்து வெள்ளம் மேற்குப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இரையாகப் பெற்றது. ஆனல் டச்சுக்காரர்கள் நெஞ்சம் அயர்ந்தார்களில்லை. மாபெரும் சுவர்களை எழுப்பிக் கடல் நீரை வடித்து விளைநிலமாக்கி வருகின்றனர்.

தாழ்வான நிலத்தில் நீர் புகாமல் கடலோரத்தில் இயற்கையான மணல் திட்டுகள் தடுத்து வருகின்றன. அவை இல்லாத இடங்களில் டச்சுக்காரர்கள் வலிமையான செயற்கைச் சுவர்களை (dykes) எழுப்பியுள்ளனர். இத்தகைய வருமுன் காக்கும் பணிகள் ஒருபுறமிருக்க, கடல் நீரை வற்றச்செய்து அவற்றை வளமிக்க நிலமாக்கும் மகத்தான பணியும் மறுபுறம் நடந்துகொண்டிருக்கிறது. அவற்றை போல்டர்கள் ( Polders ) என்று அவர்கள் அழைக்கின்றனர். அவ்வாறு கடலிடமிருந்து மீட்கப்பட்ட நிலம் ஹாலந்து மண்ணில் இன்று மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டதாகும் என்பது கடலையேவென்றிகொண்ட அந்தக் கடல் மறவர்களின் ஆற்றலுக்கு அரியதொரு சான்றாகும். இதனல் ''கடவுள் உலகைப் படைத்தார்; ஹாலந்தை டச்சுக்காரர்கள் படைத்தார்கள்'' என்ற ஒரு பழமொழி அங்கு வழங்கி வருகிறது. காலமெல்லாம் கடலோடு போராடிய காரணத்தால் கப்பல்கள் கட்டுவதிலும், இயக்குவதிலும் சிறந்து விளங்கும் இவர்கள் அலைகடல்மீதும் ஆணை செலுத்தி 'காலணி' களை அமைத்தவர்கள் என்னும் வீரவரலாற்றினையும் பெற்றிருக்கின்றனர்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்<br>தாழா(து) உஞற்று பவர்

என்பதற்கோர் உதாரணம் நெதர்லாந்து நாடு.

இவைகளையெல்லாம் கண்டும் கேட்டும் உணர்ந்த பொழுது

'பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்<br>குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'

என்னும் சிலப்பதிகார அடிகள் என் நினைவிற்கு வரத் தவறவில்லை. குமரி ஆற்றினையும் மலையினையும் அவற்றை ஒட்டிய கொடுந்தமிழ் வழங்கிய பன்னிரு நாடுகளையும் உள்ளிட்ட ஏழேழு நாற்பத்தொன்பது நாடுகளையும் இமிழ் கடல் தனக்கு இரையாக்கிக் கொள்ளாமல் இருந்திருந்தால், கன்னித் தமிழ் வளர்த்த கபாடபுரமும் தென்னவர் தலைநகராம் தென் மதுரையும் கடலில் மூழ்காமல் இருந்திருந்தால், நமது இன்பத் தமிழகம் எத்தனை பெரிதாகவும் வலிவும் வனப்பும் மிக்கதாகவும் இருந்திருக்கும் என்று எண்ணி ஏங்கினேன். ''வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்'' என்று குறுகியிருக்காதே எனவும் வருந்தினேன். கடல்கொண்ட பூம்புகாரை ஹாலந்து நாட்டின் உதவி கொண்டாவது மீட்க முடியுமா என்று பெருமூச்சு விட்டேன்.

ஹாலந்து நாடெங்கும் எண்ணற்ற காற்றுப் பொறிகள் (Wind Mills) காணப்படுகின்றன. தாழ்வான நிலங்களிலிருந்து தண்ணீரை இவை அல்லும்

பகலும் இறைத்தவண்ணம் இருக்கின்றன. கடலுக்கு அருகே, அதனினும் தாழ்வான மட்டத்தில் உள்ள ஒரு நாடு கடலோடு போராடிக்கொண்டு வாழ்ந்து வருகிறது. பாலென்றும், வெண்ணெய்யென்றும், பனிமலர்ப் பூக்களென்றும், பாலடைக் கட்டியென்றும், சீனியென்றும், சிறந்த துணிகளென்றும், உரம்மிகு நிலக்கரி என்றும், உணர்ந்த காலணிகளென்றும், வானொலிப் பெட்டியென்றும் வகைவகையாய் இயந்திரங்களென்றும் உலகமெங்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது அந்நாடு.

பூந்துகில்களுக்கும், புதுப்புது இரசாயனப் பொருள்களுக்கும், காகிதங்களுக்கும், கண்ணாடிகளுக்கும், அழகிய நல்ல வெள்ளித் தட்டுகளுக்கும், ஆகாய விமானங்களுக்கும், சாக்கலேட்டுகளுக்கும் கரும்புத் தொழிலுக்கும் புகழ் மிக்க ஆம்ஸ்டர்டாம் நகரம், வைரத்தைப் பட்டை தீட்டுவதிலும் பெரும் பெயர் பெற்றிருக்கிறது. டச்சுக்காரர்கள் தங்கள் இணையற்ற ஆற்றலைக் காட்டிடும் மற்றொரு தொழிலும் இங்கு உண்டு. அதுதான் அச்சுத் தொழில்.


ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து டச்சு மக்களுக்கு விடுதலை அளித்து 1581-ல் அதற்குக் குடியரசு வாழ்வுப் பிரகடனம் செய்த பெருமை ''வில்லியம்'' என்பவனுடையதாகும். மத வாழ்வில் மாற்றத்திற்கு உரிமை கோரும் மக்களை ஈவு இரக்கமின்றி நசுக்கிட வேண்டும் என்னும் திட்டத்தினை மன்னன் கூறக் கேட்டு அவன் அருகில் அரசின் அந்தரங்க ஆலோசகனாக இருந்த வில்லியம் மனம் கொதித்தான் என்றாலும் மவுனியாக இருந்தானும் சூழ்நிலையைக் கருதி! அதனால் மவுனி வில்லியம் (WILLIAM the Silent) என்ற பெயரே அவனுக்கு வரலாற்றில் நிலைத்து விட்டது. பின்னாளில் 'இரண்டாம் பிலிப்' என்னும் ஸ்பெயின் மன்னனின் அரசாட்சியில் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட பொழுது மக்களுக்குத் தலைவனாகி மாபெரும் போர் நிகழ்த்தினான் வில்லியம். போர் முகத்தில் அவனைச் சந்திக்க இயலாத பிலிப், வில்லியத்தின் தலைக்கு விலை பேசினான். அடிவருடிகள் அம்முயற்சியில் இறங்கிப் பன்முறை தோற்றனர்.

இறுதியில் 1584-ல் பொற்காசுகளுக்கு ஆசைப்பட்ட பொல்லாத கொலை வெறியன் ஒருவனின் துப்பாக்கியால் வில்லியம் தாக்குண்டு மாண்டான். ஆனால் அவன் விட்டுச்சென்ற வீர காவியத்தைத் தொடர்ந்து எழுத அவனுடைய இரு மைந்தர்களும் முன்வந்தனர். ''மாரிஸ்'', ''பிரடரிக் ஹென்றி'' என்ற அந்த மாவீரன் பெற்ற இரு கண்மணிகள் களத்தில் இறங்கினர். 1609-ல் டச்சுக் குடியரசு உருவாகியது.

ஹாலந்தின் வீரத்திற்கு ஒரு விளக்கம் வில்லியம் என்றால், கலைக்கு ஒரு வடிவமாகத் திகழ்ந்தவன் ரெம்ப்ராண்ட் (Rembrandt) என்பவன். வறுமையில் பிறந்து, வளமையில் சின்னாள் வாழ்ந்து, பின்னர் மீண்டும் வறுமையில் உழன்று, இறுதியில் கவனிப்பார் யாருமின்றிக் காலத்தை முடித்துக் கொண்ட ரெம்ப்ராண்ட், ஓவியத் துறையில் ஓர் ஒப்பற்ற மேதை. இல்லாமைத் தொல்லையால் அவன் இடுக்கண்களுற்றதைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் வருந்துவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவனுடைய எழில்மிகு சித்திரங்களுள் மிகவும் சிறந்தவை அவன் ஏழ்மையில் வாழ்ந்தபோது தீட்டியவைதானாம். ஹாலந்து நாட்டு மக்கள் அவனை மறக்காமல் அவன் புகழ் கூறிடக் கேட்டேன்.

ஆம்ஸ்டர்டாம் நகரில் வரிசை வரிசையாக வீடுகள். அவை நீரில் மிதக்கின்றனவோ என்று எண்ணிடத்தக்க வகையில் அவற்றின் ஓரத்தே கால்வாய்கள் ஓடுகின்றன. சாலைகளையும், மரங்களையும் காண்கிறேன். அவை மருங்கே ''கருங்கயற் கண் விழித்து ஒல்கி'' நடக்கும் கால்வாய்களையும் காண்கிறேன். ''இத்தனை கால்வாய்கள் ஏன் இப்படிப் பின்னிப் பிணைந்திருக்கின்றன?'' என்று அந்நாட்டினர் ஒருவரைக் கேட்டேன்.

ஜெர்மனியில் ரைன் நதியின் மீதுள்ள பாலம்



'தண்ணீரைக் கடலின்பால் வடிக்கும் பொருட்டு'' என்ருர் அவர். அவைகள் நகரின் ஒரு பகுதியிலிருந்து மற்றெரு பகுதிக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லவும் உல்லாசப் பயணிகள் படகுகளில் சென்று நகரின் தோற்றத்தைக் கண்டு களித்திட வும் பயன்படுகின்றன.

நம்முடைய தமிழகத்தின் தலை நகரில் ஒரு தீவுக் திடலைத் தானே காணமுடிகிறது! ஆம்ஸ்டர்டாம், நகரைக் கால்வாய்கள் 90 சின்னஞ்சிறு தீவுகளாகப் பிரித்திருக்கின்றன. அவற்றின் மேல் நகரெங்கும் காணப்படும் பாலங்களின் மொத்த எண்ணிக்கை நானூறு.

வட ஐரோப்பாவின் அழகு மிக்க நகரமாக விளங்கும் ஆம்ஸ்டர்டாம் நெதர்லாந்தின் வணிகத்தலமாகும். 1240-ஆம் ஆண்டில் ஆம்ஸ்டல் நதிக் கரையின்மீது அணை எழுப்பிய போது தோன்றிய இந்நகரம் அதனுலேயே ஆம்ஸ்டர்டாம் என்னும் பெயரைப் பெற்றதாம். இது ஓர் எழில்மிகும் துறைமுகப் பட்டினமாகும்.


இறுக்கமில்லாத மண்ணின் மீது மரப் பலகைகளை அடுக்கி மாளிகைகள் எழுப்பப்பட்டிருக் கும். இம்மாநகரைக் கால்வாயில் சிறு படகில் அமர்ந்த வண்ணம் சுற்றிப் பார்ப்பது எங்களுக்கு இன்பம் மிக்கதொரு பொழுது போக்காக இருந்தது. சிறிய படகு மெல்லென்று அசையச் சீதளக் காற்று சில்லென்று வீச, ஆம்ஸ்டர்டாமை நாங்கள் பார்வையிட்டபோது, அழகான ஆங்கிலப்பேச்சு அடிக்கடி காதில் வந்து பாய்ந்தது. வழிகாட்டி யாக அந்தப் படகிலே பணி யாற்றிய கல்லூரி மாணவியின் விளக்க உரைகள்தாம் அவை. கழுத்தில் கருப்பு ரிப்பன்; மஞ்சள் நிற மேல் சட்டை, கரிய வண்ணத்தில் முழங்கால் வரை



ஒப்பற்ற ஓவிய மேதை ரெம்பிராண்ட்

கால்சட்டை அணிந்து கனிவுடன் விளங்கினுள். ஆங்கிலம், டச்சு ஜெர்மன் ஆகிய மூன்று மொழி களில் அழகாக விளக்கம் தந்து கொண்டு வந்தாள். படகு ஒவ்வொரு இடத்தைக் கடக்கும் பொழுதும் ''இதோ இடது பக்கம் தெரிகிறதே, சிவப்பு நிறக் கட்டடம், இங்குதான் ஆம்ஸ்டர்டாம் நகரின் சிறந்த கவிஞன் வாழ்ந்தான்; அதோ சற்று முன்னுல் வலது கரையில் தெரிகிறதே மஞ்சள் நிறக் கட்டடம், அது தான், ஆம்ஸ்டர்டாம் நகரின் முதல் வங்கி என்றும் அந்தந்த இடங்களின் முக்கியத்துவம் பற்றிச் சலிக்கா மல் இனிய குரலில் விளக்கம் தந்து கொண்டே வந்தாள். கல்லூரிப் படிப்பையும் படித்துக் கொண்டு ஓய்வு நேரங்களில் கைடு (Guide) தொழிலையும் செய்து ஓரளவு ஊதியம் ஈட்டு கிருள் அந்தப் பெண்மணி.

காற்றுப் பொறி




இந்தக்கால்வாய்களில் படகுப் பயணம் செய்யும் ஒவ்வொரு வரும் ஒரு சுவையான நிகழ்ச்சி யைக் காண நேரும். நாங்கள் படகில் ஏறும்பொழுது யாரோ ஓர் இளைஞன் தன் விருப்பத் திற்கு ஒவ்வொருவரையும் புகைப்பட மெடுத்துக் கொண் டிருந்தான். அவன் என்ன பொழுது போக்கிற்காக எடுக் கிருனே அல்லது அவனுக்குப் பைத்தியமோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனல் படகுப் பயணம் முடிந்து நாங்கள் மீண்டும் அதே இடத் திற்கு வந்தபொழுது எங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டான். எடுத்த அத்தனை படங்களையும் அழகாக அச்சிட்டு மாட்டியிருந்தான். பயணம் செய்தவர்களில் பெரும் பகுதி யினர் அவன் கூறிய விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். நம் அனுமதியின்றி நம்மைப் படமெடுத்து நம் அனுமதியுடன் நமக்கே விற்கும் விந்தையை— வியாபாரத் தந்திரத்தைப்— போற்ருமல் இருக்க முடியுமா?

படகு ஓட்டுபவர் குறுகலான இடங்களிலும், சிறுபாலங்களின் வளைவுகளுக்குள்ளேயும் வெகு திறமையாக ஓட்டிச் சென்ருர். சுமார் ஒரு மணி நேரத்தில் நகரின் பெரும் பகுதியைச்சுற்றிப் பார்க்க முடிந்தது. இம்மாதிரி உல்லாசப்படகு விடும் தொழிலில் இந்த நகரில் பலர் ஈடுபட்டுள்ள னர். நகரில் இடமின்மை காரணமாகச் சிலர் படகு வீடு

களில் கால்வாய் ஓரங்களில் வாழ்கின்றனர். இப்படகு வீடுகள் வாடகைக்கும் விடப்படுகின்றனவாம்.

இந்நகரின் கால்வாய்கள் கண்ணுக்கு விருந்தாகும். கவிஞரின் பண்ணுக்கு ஊற்றாகும். முதியோரும், இளையோரும் காதலரும் களித்திருக்கும் உல்லாச இடங்களாகும்.

அழகுநீர் அலையாய் அசைந்து வர, அன்னம்போல் படகுகள் அதன்மேல் மிதந்துவர, இரு புறத்திலும் ஓங்கி உயர்ந்த கட்டடங்கள் எழில் தர, நகரின் இடையே செல்லும் கால்வாய்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து 'ஹிப்பிகள்' உட்பட உல்லாசப் பயணிகள் பலரை ஈர்க்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அடங்கிய ''ஹிப்பிகள்'' கூட்டம் ஒன்று நகரின் மத்தியில் உள்ள எழில் மிக்க சதுக்கம் ஒன்றினைத் தங்கள் வாழுமிடமாக்கிக் கொண்டதையும் கண்டேன்.



ஹாலந்து நாட்டில் ஓர் அழகிய காட்சி.

நெதர்லாந்தில் அன்னம்போல் மிதந்துவரும் படகுகள்



மணம் மிக்க பூமி நெதர்லாந்து. டுலிப், ஹயாசிந்த் எனப்படும் நறுமண மலர்கள் நம் நாசிக்கு நல்விருந்து. எழில் மணக்கும் ஆம்ஸ்டர்டாம் எங்களுக்கு 7-30 மணிக்கு விடை தந்தது.

வழி நெடுகிலும் பசும்புல் நிலங்களையும், வளமான மாடுகளையுடைய பால் பண்ணைகளையும் நிறையக் காணமுடிந்தது. விளை நிலங்கள் மிகக் குறைவாகவே தென்பட்டன. இரவு சுமார் ஒன்பது மணிக்கு உலகம் முழுதும் பரந்து விரிந்துள்ள பிலிப்ஸ் நிறுவனத்தாரின் தலைநகரும், நெதர்லாந்தின் எல்லைப்புறத்தில் அமைந்திருப்பதுமான ''எய்ந்தோவன்'' நகரை வந்தடைந்தோம்.

(தொடரும்)





# மக்களை நாடிவரும் மருத்துவமனை

கும்மிடிப்பூண்டி கிராமம் அன்று குதூகலத்தில் மூழ்கியிருந்தது. எங்கும் சுறுசுறுப்பு-மகிழ்ச்சியின் பிரதிபலிப்பு.

ஊரையடுத்து, 'சாரணர் தங்குமிடமா?, அல்லது ராணுவத்தினர் முகாமிட்டிருக்கின்றனரா?' என்று எண்ணவைக்கும் வகையில் ஏராளமான கூடாரங்கள்!

அருகில் சென்று பார்த்தால் அங்கு காக்கி உடைகள் இல்லை. கழிகளும், துப்பாக்கிகளும், காணப்படவில்லை. மாறாக வெள்ளை உடை பூண்ட டாக்டர்கள், செவிலியர்கள் அங்கும் இங்கும் சென்று நோயாளிகளைக் கவனிக்கலாயினர்.

ஆம்! அது ஒரு நடமாடும் மருத்துவமனை! ஊர்திகளில் சென்று கவனிக்கும் மருத்துவமனை போன்றது மட்டும் அல்ல! இது அதைவிடத் தனிச்சிறப்பு வாய்ந்தது. மருத்துவ வசதியில்லாத கிராமப்புறங்களில் டாக்டர்களும், நர்சுகளும் தங்கியிருந்து நாள்தோறும் நோயாளிகளைப் பார்வையிட்டு மருந்துகள் தந்து பேணிக் காத்திடும் பெரும்பணி, இது.

கிராம மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நேரடியாக மருத்துவ வசதியைச் செய்து தரும் வண்ணம், மத்திய மாநில அரசுகளின் துணையுடன், மறைந்த தேச பக்தர் சித்தரஞ்சன் தாஸ் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் விதத்தில் இந்த நடமாடும் மருத்துவ மனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைச் செங்கை மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் 8—1—1971 அன்று நல்வாழ்த்துறை அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார்.

ஏழைக் கிராமவாசிகளுக்கு உதவுவதோடன்றி, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர் கட்டும், மற்றும் இளம் டாக்டர்களுக்கும் கிராமத்திலே உள்ள சுகாதாரச் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி எதிர்காலத்தில் அந்த வகையில் பணியாற்றப் பயிற்சி அளிப்பதும் இந்த மருத்துவ மனையின் குறிப்பிடத்தக்க நோக்கமாகும். அதுபோல், செவிலியர் மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த பல்வேறு பிரிவினருக்கும் கிராமியச் சூழ்நிலையை உணர்த்துகின்ற வாய்ப்பினையும் இந்த நடமாடும் மருத்துவமனை அளிக்கின்றது. இதன் விளைவாகக் கிராம மக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே சிறந்த மருத்துவ வல்லுநர்களின் சேவைகளைப் பெற ஏதுவாய் உள்ளது. மருத்துவச் சிகிச்சை மட்டுமின்றிப் பொதுச் சுகாதாரம், தொற்றுநோய் பரவும் விதங்களைத் தடுப்பது, சத்துள்ள உணவுகளை உண்பதன் அவசியம்முதலியவற்றைக் கிராம மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கவும் இத்திட்டம் உதவியாக உள்ளது.

கடந்த சனவரித்திங்கள் ஏழாம் நாள்காலை மருத்துவஅதிகாரியின் தலைமையில் ஏழுபேர் கொண்ட முன்னேற்பாட்டுக் குழு, கும்மிடிப்பூண்டி வந்தடைந்தது. மறுநாள் அதாவது 8—1—71 காலை முதற்கொண்டே (Out Patient) எனும் புறநோய்ப் பகுதியை ஊராட்சி ஒன்றிய அவைக்கூட்டத்திலே துவக்கினார்கள். முதல் நாளன்று 32 பேர்கள் மட்டுமே சிகிச்சைக்கு வந்தாலும், நாளடைவில் நூற்றுக்கணக்கான பேர் சிகிச்சை பெற ஆர்வத்துடன் திரண்டு வந்தனர். தினந்தோறும் ஏறத்தாழ 500 பேர் சிகிச்சைக்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். 10—3—71 அன்று புறநோய்ப் பகுதிக்கு வந்தவர் எண்ணிக்கை 620 ஆகும்.

இம் மருத்துவ மனையை வெற்றிகரமாக நடத்தும் பொறுப்பு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவமனை திரு. கே. எம். காதர் மஸ்தான் என்ற மருத்துவ அதிகாரியின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பயிற்சி டாக்டர்கள் உதவி புரிகின்றனர். இவர்கள் வாரத்திற்கு ஒருமுறை மாற்றப்படுகின்றனர். இந்த மருத்துவமனையில் 3 செவிலியர்கள் அங்கேயே தங்கி இருந்து பணிபுரிகின்றனர். இவர்களுக்கு உதவியாக வாரத்திற்கு இருமுறை, பயிற்சி செவிலி


பரும் பணிபுரிகின்றனர். வாரத்திற்கு 4 தடவை ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பத்திரியிலிருந்து பெண் டாக்டர்களும் வரவழைக்கப்படுகிறார்கள். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எம். ஜி. பிரபு அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள் பலர் இம் மருத்துவ மனைக்குச்சென்று தங்கள் துறையை நாடிவரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இந்த நடமாடும் மருத்துவ மனை மொத்தம் 62 கூடாரங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் மொத்தம் 8 வார்டுகள் இருக்கின்றன.

ளது. அதேபோல், ஊசி போடுவதற்கும், புண்களுக்கு மருந்து கட்டுவதற்கும், எக்ஸ்ரே படம் எடுப்பதற்கும், தனித்தனிக்கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல அறுவை அரங்கக் கூடாரமும் உள்ளது. இங்கு சிறு சிறு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. மிகப்பெரிய அறுவைச் சிகிச்சையானால் அவர்களைச் சென்னைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. இங்கு நோயாளிகளுக்கு மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு, இலவசமாகச் சத்துள்ள உணவும் வழங்கப்படுகிறது.

யும் மற்றும் இளம் டாக்டர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். குடும்ப நலத்திட்டப் பிரிவினரின் ஆதரவில் திரைப்படக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. 12—4—71 முதல் 18—4—71 வரை ஒரு சிறிய பொருட்காட்சியும் சிறப்பான முறையில் நடந்தது. மருத்துவ மனையில் குடும்பநலத் திட்ட விளக்கங்களும் தெரிவிக்கப்படுகின்றன. இங்கு இதுவரை டுபெக்டமிஅறுவைச் சிகிச்சைகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 25—3—71 காலை 8 மணிக்கு இங்கு அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு பெண்





சிகிச்சைக்கு வந்துள்ள பெண்கள், ஆண்கள் கூட்டம்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக 25 படுக்கைகள் உள்ளன. இந்த மருத்துவ மனை அழகான சூழ்நிலையில் கூடாரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனிக் கூடாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் நோயாளிகளை விசாரணை செய்வதற்கென்றே ஒருதனிக்கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாகப் புறநோய்ப் பகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சிகிச்சை காலை 8 மணி அளவில் தொடங்கி 11-30 மணி வரை இயங்குகிறது. மிக அவசரமாக வரும் நோயாளிகளை எந்த நேரத்திலும் சோதிக்க வசதியுள்ளது. மருந்தகத்திற்காக, ஒரு தனிக்கூடாரம் ஒதுக்கப்பட்டுள்

இங்கேயே தங்கிப் பணிபுரியும் பயிற்சி டாக்டர்கள், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதோடன்றி, கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களுக்கு நோய்த்தடுப்பு முறைகளையும் நல்வாழ்வு வழிகளையும் அவ்வப்போது போதித்து வருகின்றனர். இந்த இளம் மருத்துவர்கள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சமூக மற்றும் தடுப்பு மருந்து பேராசிரியர்களின் துணையுடன் தண்டலச்சேரி கிராமத்தில் ஏறத்தாழ நூறு குடும்பங்களைச் சந்தித்து ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

கடந்த குடும்பநலத் திட்ட இரு வார விழாவினையொட்டி இங்கிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ள தேர்வாய் கிராமத்தில், ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் மருத்துவ அதிகாரி

குழந்தை பிறந்தது. அதற்கு சித்தரஞ்சனி என்று பெயரிட்டு மூன்றே நாளில் தாயும் சேயும் நலமுடன் வீடு திரும்பினர்.

இந்த மருத்துவமனைத் துவக்கத்திலே இது ஒரு புது அனுபவம்.

இத்தகைய புதுமையான மருத்துவ மனை தமிழகத்திலேயே இதுவே முதலாவதாகும். இந்தியாவிலேயே இதுதான் சிறந்த சில நடமாடும் மருத்துவ மனைகளில் ஒன்றாகும் என்று டெல்லி அதிகாரிகளே, இப்பணியினைப் போற்றியுள்ளனர். இந்த நடமாடும் மருத்துவமனை வெற்றிகரமாகப் பணிபுரிய கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து யூனியனும், கும்மிடிப்பூண்டி நகரப்பஞ்சாயத்தும் பெரிதும் உதவி செய்து வருகின்றன. இத் திட்டம் மக்களிடம் அமோக



மருத்துவ அதிகாரிகளும் .. .. ..



.. .. .. மக்கள் கூட்டமும்

வரவேற்பையும், பாராட்டு தலையும் பெற்றுள்ளது. கடந்த 4 மாதங்கள் வெற்றிகரமாகப் பணி புரிந்தும், இத் திட்டம் கும்மிடிப் பூண்டியில் மேலும் சில மாதங்கள் இருக்க விரும்பி, மனுச் செய்த வண்ணம் இருக்கிறார்கள் கிராம மக்கள். இந்த நடமாடும் மருத்துவமனை, தனது பணியை முடித்துக்கொண்டு சில நாட்களில் வேறு ஓர் ஊருக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளது.

இதுவரை இந்த மருத்துவ மனையில் புறநோய்க்கு வந்து சேர்ந்து சிகிச்சை பெற்றவர் எண்ணிக்கை 15,135. அதே போல் வார்டுகளில் அனுமதிக்கப் பட்டுச் சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கை 244 ஆகும்.

கும்மிடிப்பூண்டியில் வெற்றி யுடன் தனது பணியைச் செய்து வரும் இந்த மருத்துவ மனை தமிழகத்தின் பல பகுதிகளுக்கு முன்னோடியாகவும் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறதென்பதில் ஐயம் இல்லை.

அதனால்தான் ''இதுபோன்ற மருத்துவமனைகள் கிராமப்பகுதிகளில் நிரந்தரமாக இருந்தால் நல்லதுதான்'' என்று கூறியுள்ளார் தமிழக முதல்வர் அவர்கள். மக்களை நாடிவரும் இந்த மருத்துவமனை பொது மக்களின் இதயங்களில் இடம்பெற்றுவிட்டது.

கூடாரங்களுக்குள்ளே மருத்துவப் பரிசோதனை நடைபெறுகிறது





"அமுதா. இன்றிரவு அவர் என்னை விருந்துக்கு அழைத்துள்ளார்; போகவேண்டும்."

"எவர் அழைத்திருக்கிறார்?"

"அவர்தான்; வேலப்பர்."

"என்ன, வேலப்பரா? அவர் நஞ்சப்பராயிற்றே! அவர் ஏன் உங்களுக்கு விருந்து வைக்க வேண்டும்? உங்களுக்கு நீண்டகாலப் பகைவர் விருந்து வைக்கிறார் என்றால் நீங்கள் போகவேண்டுமா என்ன?"

"ஆம். செல்லப்போகிறேன். அவர் விருந்தையும் அச்சமின்றி உண்ணத்தான் போகிறேன். அழைக்கும்போது எவ்வாறு மறுப்பது? அது நாகரீகமாகாது."

"வேண்டாம்; செல்லவேண்டாம். அவர் விருந்தில் நஞ்சு வைத்தாலும் வைப்பார்."

"நஞ்சு வைத்தால் என்ன? பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர், என்ற குறளுக்கு இலக்கியமாகிவிடலாம் அன்றோ?"

"நீங்கள் இலக்கியமாவீர்கள்; நம் குடும்பம் கலக்கியமாகிவிடும்"

"அமுதா இங்கே பார். எனது மேல் துண்டின் முனையிலுள்ள முடிச்சைப் பார்."

"என்ன அந்த முடிச்சில் உள்ளது?"

"பத்து மிளகு இருக்கிறது."

"இருந்தால் என்ன?"

"உனக்குத் தெரியாதா, ஒரு மருத்துவப் பழமொழி? 'பத்து மிளகிருக்கப் பகைவன் வீட்டுண்ணலாம்' என்ற பழமொழியை அறிந்துகொள்"

கணவன் மனைவிக்கிடையே நிகழ்ந்த உரையாடல் இது. கணவன் எடுத்துக் காட்டிய பழமொழி மிக உண்மை பொதிந்தது. பத்து மிளகு உணவில் சேர்ந்தால் நஞ்சையும் முறிக்கும் என்பது உண்மை. மிளகுக்கு அத்துணை வல்லமை உண்டு. அந்த மிளகின் வல்லமைகள் நினைக்கத்தக்கன; நினைந்து போற்றத்தக்கன. போற்றிக் கைக்கொள்ளத்தக்கன.

மிளகு அத்துணை பெருமையுடையதா என்றால், ஆம் என்று சான்று சொல்கிறது இருக்கு என்னும் நான்மறையில் ஒன்று. இருக்கு மறையில் காரத்திற்கு மிளகாய் எங்கும் குறிக்கப்படவில்லை. மிளகுதான் சிறப்போடு ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளது.

அருமறையாம் உயர்ந்த நூலில் மட்டுமன்று, நிலத்தில் உயர்ந்த இடமாம் மலைப்பாங்கான இடத்தில் இடம்பெற்றது மிளகு. அதற்குரிய பெயர்களுள் மலையாளி என்பதும் ஒன்று. நம்நாட்டு மேற்கு மலைச்சாரலில் விளையும் அது, செல்வம் கொழிக்கும் மேலை நாடுகளில் முற்காலம் முதல் முடைமுடையாய் விரும்பிக் கலங்கள் மூலம் ஏற்கப்பட்டது. அங்கையில் நம் சங்க இலக்கியங்களில் நல்லிடம் பெற்றது. அவ்வேற்றுமதியால் நம் நாட்டுப் பொருளியலுக்குத் துணை நிற்பது.

அருமறையிலும், அரும் மலையிலும் விளங்கும் மிளகு அடுக்களையிலும் தனி இடம் பெற்றது என்பதையும் அறிவோம். உணவுக்குத் துணை உணவாய் அமைவதைக் கறி என்கிறோம். அப்பெயரே இந்த மிளகினால் வந்ததோ என்று கருதும் அளவில் மிளகுக்குக் கறி என்ற பெயர் உள்ளது.

மிளகின் இப்பெருமைகளோடு அதன் தன்மையும், விளைவும், திறனும், பயனும் நோக்கத்தக்கன. அவற்றைக் காண்பது நமக்கு நற்றுணையாகும். அந்த மிளகினைக் கண்ணால் காண்பதே ஒரு நன்மை என்பதை,

**"—மிளகாய் கண்டவர்க்கும் இன்பமாம் காரிகையே"**


என்கிறது பதார்த்த குண சிந்தாமணி என்னும் மருத்துவ நூல்.

காட்சிக்கு இன்பம் நல்கும் மிளகு, கொடியில் விளைவது. அக்கொடியின் காய் முற்றிப் பழுத்தால் அது பச்சை மிளகு. காய்ந்தால் மிளகு. மிளகு வகைக் கொடி வேறொன்றில் காய்த்து முற்றிப் பழுத்து மேல்தோல் உரிந்தால் வெள்ளை மிளகு. மற்றொருவகைக் கொடியில்

# ஐந்தறைப் பெட்டியிலே

## அருமை அமிழ்தம்

—நாகை மருத்துவர் நாராயணசாமி



காய்த்துப் பழுத்துக் காம்புடன் காய்ந்தது வால்மிளகு. இது மேல்தோல் சுருக்கமில்லாதது.

பச்சை மிளகு ஊறுகாயாக்கவும், பச்சைக் கறிக்கிடவும் பயன்பட்டு உடல் நலம் பயக்கும். வெள்ளைமிளகு உணவுப்பண்டத்திற்கு ஓரளவான துணைப் பொருளாகவும் பெருமளவில் மருந்துப் பொருளாகவும் பயன்படும். வால்மிளகு மணப் பொருளாகவும் மருந்துப் பொருளாகவும் பயன்படும்; நலம் பயக்கும். வெற்றிலை பாக்குடன் சேர்த்துண்ணுதலால் கோழை போகும். கோழையகற்றி என்பது அதற்குப் பெயர்.

மிளகு பல்வகையாலும் மக்கட்கு நிறைவாகப் பயன்பட்டு நிறைவான நலம் வழங்கும் தனிப்பெருமையுடையது. நாம் அந்த நிறைவைக் காண்போம் :

## மிளகு ஓர் உணவுப்பொருள்

மிளகின் பெயராம் கறி என்னும் சொல்லாலே அது உணவில் நிற்பதை அறிந்தோம். அது தனியாக உணவுப் பொருளாவதில்லை. அதன் காரச் சுவை அறுசுவைகளில் ஒன்றாயினும் காரம் தனியாகச் சுவைக்க இயலாத ஒன்று ஆகையால் பிறவற்றுடன் கலந்தே உணவுப்பொருளாகின்றது.

மிளகுச்சாறு சுவையுடைய ஒன்று. வெள்ளைப் பூண்டுடன் சேர்த்து இரசம் என்னும் சாற்றில் நின்று சுவைப்பொருளாகிறது. தனியே மிளகைப் பொடி செய்து சோற்றிலிட்டு நெய் பெய்து நல்லுணவாகிறது. பல்வகைச் சிற்றுண்டிகளிலும் மிளகு அமைந்து மிளகு வடை, மிளகுச் சோறு, மிளகுப் பொங்கல், மிளகு அடை எனத் தன்பெயர் நிறுத்துகிறது. இவ்வகை உணவுகளிலெல்லாம் அமைந்து சுவை பயப்பதோடு அவை செரித்துக் குருதியாகி உடல் ஊட்டத்திற்கும் பயன்படுகின்றது. மிளகுப் பொங்கல் தனிப் பொங்கலை விடவும் பிற பொங்கல்களைவிடவும் எத்துணை பயனுடையது என்பதனைப் பின்வரும் வெண்பா குறிக்கின்றது :

மிளகோ தனமருந்த விம்முகின்ற வாதம்
இளகும் பசியும் எழும்பும்—கலகலெனக்
கூவும் வயிற்றின் குடலிரைச்ச லுங்கபமும்
தாதுபித்த முந்தணியுஞ் சாற்று.

இவ்வெண்பா கொண்டு, மிளகு உணவைச் செரிக்கவைத்துப் பசியைத் தூண்டும் என்பதையும், குடலின் இரைச்சலைப் போக்கும் என்பதையும் அறிகிறோம். அத்துடன் வாதம் இளகவும், தாது பித்தம் தணியவும் மருந்தாவதையும் காண்கிறோம். இலக்கண நூல் உரையாசிரியர்கள் ''உணவு மருந்து மாயிற்று'' எனக் குறித்துள்ளமையும், மார்கோபோலோ நம்நாட்டார் உணவைப் பார்த்துத் தமிழர்தம் உணவிலேயே மருந்துண்டு என்று குறித்தமையும் இம்மிளகையும் கருத்தில் கொண்டே என அறிய முடிகின்றது.

## மிளகு ஒரு மருந்துப் பொருள்

உணவோடு மிளகு மருந்தாவதைக் கண்டோம். முன் கண்ட ஒருவரியோடு இணைந்த மற்றொன்றைக் காண்போம்.

மிளகாய்

கண்டவர்க்கும் இன்பமாம் காரிகையே
—சிறுமூலம்
கொண்டவர்க்கு நன்மருந்தாம் கூறு.

என்னும் வெண்பாவில் மிளகு நன்மருந்தாவதைக்காண்கிறோம். இம்மிளகு தனியாகவும் பிற பொருள்களோடும் கூடியும் மருந்தாகும்.

மிளகுக்கு வீக்கங்கரைச்சி என்றொரு மருத்துவப் பெயர் உண்டு. இப்பெயர் கொண்டே இதனை நீரிலிட்டு வீக்கத்திற்குப் பூச, வீக்கம் வடியும் என்பதை அறியலாம். தேள்கடிக்கு ஒவ்வொரு மிளகாக வாயிலிட்டு மெல்லக் கடுப்பு படிப்படியாகக் குறையும். மிளகு ஒன்றைச் சந்தனக் கல்லில் உரைத்துக் கண் புருவத்தில் இடக் கண் கூச்சம் போகும்.

## மிளகு, பிணித்தடை

வந்தபின் காக்கும் மிளகு வருமுன் காக்கும் பிணித்தடையுமாகும். சுற்றுப்புறத்தில் ஒட்டும் காய்ச்சல், பரவும் காய்ச்சல், அம்மை முதலியன இருக்குங்கால் பெரியவர்க்கு முப்பதும் சிறியோர்க்குப் பதினைந்துமாக நீர்விட்டு நன்கு அரைத்து ஒவ்வொரு வாய் நீர் அளவு விட்டுக் கரைத்துத் தெளியவைத்து ஒரு வாயும் அரை வாயுமாகக் கொடுக்க மேற்கண்ட பிணி அணுகாது. முன்னரே தொட்டிருப்பின் பெருகித் தாக்காது. இவ்வகையில் மிளகு தனித்து நின்று, வந்த நோயைப் போக்கி, வரும் முன் காப்பதனால், மனிதனின் அறிவை ஒத்ததாகின்றது. வள்ளுவப் பெருந்தகை அறிவு துன்பத்தைப் போக்கும் கருவி என்றும்

பகைவராலும் தாக்கி அழிக்க முடியாத உள் கோட்டை என்றும் கருவியாகவும் கோட்டை யாகவும் அறிவைக் குறித்தார். அது போன்றே மிளகும் வந்த நோயைப் போக்கி, வரும் நோயையும் தடுப்பதால் வள்ளுவர் தம் குறளாம்,

அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

என்பதனை இரு சொல்லளவில் மாற்றி,

மிளகற்றங் காக்கும் கருவி செறுபிணிக்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

என்று குறிக்கத் தோன்றுகின்றது.

இவ்வாறு மருந்தாகும் மிளகு எத்துணை நோய்களுக்குப் பகை என்பதை மருத்துவ நூல்கள் பலவும் விரிவாகக் கூறுகின்றன. தமிழ் மருத்துவர் சித்த மருத்துவத்தில், மிளகு நல்லிடம் பெற்றதாகும். சித்தர்கள் மிளகை ஒரு கைம் மருந்தாகக் கண்டனர். மிளகுக்காய் கையில் இருந்தால் உடலைக் கோணலாக்கும் பக்க வலி ஏது? சூன்ய ரோகம் ஏது? வாதம் வருமோ? கழுத்திற் குள் தோன்றும் புண் நிற்குமோ? காது நோய் ஏது? மாதர் குன்மம், மஞ்சட் காமாலை வருமோ? மந்தம் ஏது? என்று சித்தர் வினவுகிறுர். இதனைப் பதார்த்த குண சிந்தாமணி,

கோணுகின்ற பக்கவலி, குய்யரோகம், வாதம்,
சோணிதம். கழுத்திற்குட் டோன்றுநோய்—காணரிய
காதுநோய், மாதர்குன்மம் காமாலை, மந்தமென்றீ
தேதுநோய் காய்இருக்கில் ஈங்கு.

என்று எடுத்துக் காட்டுகின்றது. இவைமட்டுமோ,

சீதசுரம், பாண்டு, சிலேத்துமம், கிராணி, குன்மம்
வாத மருகிபித்தம் மாமூலம்—ஓதுசன்னி
யாசம் பசுமார மடன்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி ஞல்

எனவும் அந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. நோயின் பெயர் களே நினைவில் நிற்காத நிலையில் இம்மருந்து கையில் நிற்கக் காண்கிறோம்.

இனி, மிளகு, பிற பொருள்களோடு சேர்ந்து மருந்துப் பக்குவமாகி சிறு நோய்களையும் பெருநோய்களையும் தீர்க்கவல்லது என்பதைக் காண்போம்.

## பல் நோய் பறக்கும்

ஓர் அளவு மிளகுக்கு இரு அளவு வெல்லச் சருக்கரை சேர்த்துப் பொடியாக்கிப் பல்வலி உள்ள இடத்தில் வலி வருங்கால் வைக்க, விரைவில் பல்வலி போகும். இது மரபுவழி முறை.

## காய்ச்சல் கலங்கும்

புதிய மண்சட்டியில் 200 மிளகைப்போட் டுக் கருகாமல் வறுத்து, சட்டியில் வைத்தே மெதுவாகக் கடைந்து பொடியாக்கி, ஒரு படி நீர் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி அரைப்படி சுண்டியபின் வடிகட்டி, நாளுக்கு இரண்டு வேளையாக மூன்று நாள் கொடுக்க, கடுங்காய்ச்சல் கடுகி ஓடும். இது தேரையர் என்னும் சித்தர் முறை.

## நீண்டநாள் மந்தம் நீங்கும்

காக்கரட்டான் எனப்படும் காக்கணம் கொடி உண்டு. அதில் வெள்ளையாகப் பூக்கும் கொடி வேரில் ஒரு பிடி அளவு சேர்த்து அரைப்பிடியளவு மிளகு கூட்டி அம்மியில் அரைத்து வெந்நீரில் கரைத்து நாளுக்கு 4 வேளை கொடுக்க மூன்று நாட் களில் நீண்டநாள் வருத்தி வந்த வயிற்று மந்தம் நீங்கும். இதனை மருத்துவக் குறள்,

மேலுமே காக்கணம் வேர்மிளகு வெந்நீரில்
நாலுவே ளையும் அருந்து

எனப்பேசுகிறது.

## வெள்ளை—வெட்டை விலகும்

ஆண்களின் வீரியம் வெள்ளையாய் வெளி வரலும், பெண்களுக்கு வெட்டை வெளி வரலும் உடலை உருக்கி நோயாளியாக்கி வாழ்வில் வெறுப்பை ஊட்டுவன. இவை விலக வெள்ளை அறுகம்புல் ஒரு பிடி சேர்த்து மிளகு அரைப்பிடி கூட்டி, வெள்ளைப்பூண்டு பெரிது இரண்டு, தோல் நீக்கிச் சேர்த்து அரைத்து, நீர்விடாமல் கெட்டியாக அரைத்துச் சுண்டைக்காய் அளவு நாளுக்கு இரண்டு வேளை மூன்று நாள் உண்ணவேண்டும். இந்நாள்களில் புணர்ச்சி கூடாது. புளி, எண்ணெய், கடுகு, உப்பு நீக்க வேண்டும். இதனையும் மருத்துவக் குறள் பின்வருமாறு குறிக்கிறது:

வெள்வறுகு டன்மிளகு வென்ருள் விகழற்சி
கொள்ளரைத்து வெள்ளையிற் குண்.

## தலைப் பொடுகும் புழுவெட்டும் போகும்

மிளகு முப்பது, வெங்காயம் மூன்று, உப்பு ஒரு பிடி சேர்த்துச் சிறிதளவு நீரோ, பாலோ விட்டு அரைத்துத் தலையில் தேய்த்து அரை மணி நேரம் வைத்திருந்து நீராடிவர (வாரத்திற்கு மூன்றுநாள்) பொடுகு போகும்; புழுவெட்டு நீங்கும்; உடல் நிலைக்கேற்ப மயிர் முளைக்கும். இது ஒரு சித்தர் முறை.


## கண் பார்வை கவின்பெறும்

உடல் வெப்பத்தாலும், நெறியில்லாத கண் விழிப்பாலும், மீறிய புணர்ச்சியாலும், பகற் புணர்ச்சியாலும், கண் பார்வை மங்குவதுண்டு. அம்மங்கல் நீங்கிப் பார்வையில் தெளிவு பெற வைப்பதில் மிதிபாகல் இலைச்சாறு மிளகுடன் சேர்ந்து கொள்ளுகிறது. மிதிபாகல் இலைத் தனிச் சாறு எடுத்து வைத்துக்கொண்டு சந்தனக்

கல்லில் இரண்டு துளி விட்டு ஒரு மிளகு முழுவதையும் உரைத்து மையாக்கிக் கண் இமையின் மேலும் கீழும் 40 நாள் இட்டு வர, கண் ஒளி பெறும். இஃதும் சித்தர்முறை.

## பல பிணிக்கும் பகை

மேலே சில முறைகளே குறிக்கப்பட்டன. இம்மிளகின் குணங்கள் தொடப் பெருகும் அளவினதாகும். பல சிறு பிணிகளுக்கும் பெரும்பிணிகளுக்கும் தனியாகவும் பிற வற்றுடன் பக்குவமாகியும் மிளகு தரும் பயன் பலவாம்.



மிளகு உயிரைப் படைக்கும் வல்லமையை யும் கொண்டது எனச் சித்தர்கள் நம்பினர். அதற்கு முறையும் கண்டனர். பெண்களது கருப்பையில் பூச்சி காரணமாகவோ பிற குறையாலோ கருத்தரிக்காமல் தடை ஏற்படுவதுண்டு. அத்தடையை நீக்கும் மருந்து உண்டு எனக் கண்டனர். அம்மருந் தில் மிளகு இடம் பெற்றது. கழற்சிக் காய் இலை ஒரு பிடியுடன் மிளகு முப்பது, பெரும்பூண்டு ஒன்று (தோல் நீக்கி) சேர்த்து அரைத்துக் குழம்பாக்கி ஆமணக்கு எண் ணெய் அளவாக இட்டுக்குழப்பி ஒரு நாளுக்கு ஒரு முறை மூன்று நாள் குடிக்க, கருத்தரிக்கும் பக்குவத்தைக் கருப்பை பெறும். இவ்வகை யால் மிளகு உயிரைப் படைக்கும் தொழிலி லும் இடம்பெறுகிறது. இதனை, மருத்துவக் குறள் பின்வருமாறு அறிவிக்கிறது:

**தெளிவுடன்க ருப்பமாம் சேரெண்ணெய்க் கெச்சையிலை**

**மிளகுவெள் ளுள்ளியுடன் உண் (கெச்சை—கழற்சி)**

## நிலமிசை நீடு வாழ நிலவும் அமுதம்

நீண்ட நாள் வாழ்வு இயற்கையாகவும் அமையும். நல்ல நெறியான வாழ்வாலும் உயிரூட்ட மருந்துகளாலும் அமையும். இடையே நச்சுத் தாக்குதல் இன்மையும் நெடுவாணுளுக்கு வேண்டும். மிளகு நஞ்சுத் தாக்குதலின் வல்லமையைக் குறைப்பதிலும் போக்குவதிலும், உயிரூட்ட மருந்தாகி உயிரை வளர்ப்பதிலும் இடம்பெறுகிறது. முதலில் நச்சுக்குத் தடையாவதைக் காண் போம்.

பூரான், நட்டுவாய்க்காலி கடிப்பின் நஞ்சு உடலில் ஏறும். பூரான் கடிக்குரிய மருந்தை முன்கூட்டியே உருவாக்கி வைத் திருக்க வேண்டும். வெற்றிலைச்சாறு எடுத்து ஒரு பலம் மிளகு முழுகும் அளவில் ஊற்றி 4 அல்லது 5 மணி நேரம் ஊறவைத்துப் பின் காயவைக்கவும். இதுபோல் இரண்டு முறை ஊறவைத்து இருமுறை காய வைத்துக்கொள்ளலாம். பூரான் கடிக் குப்பின் காலை மாலை மூன்று நாள் கொடுக்க அந் நஞ்சு நகர்ந்து அழியும்.

நண்டுத் தெறுக்கால் என்னும் நட்டுவாய்க் காலி நஞ்சுக்கு, மிளகு எடுத்துப்பெரும் பூண்டில் பாதி தோலுரித்து மை போல் அரைத்து விழுங்கச் செய்ய கடுப்பு நீங்கி நஞ்சு நீங்கும்.

பாம்பு முதலிய கடும் நஞ்சேறி நினைவிழந் தோர்க்கு நினைவேற்படுத்த இம்மிளகு துணை யாகும். இதற்கும் முன் கூட்டியே உரு வாக்கி வைத்திருத்தல் வேண்டும். நன்கு பழுத்து நிறையச் சாறு உள்ளதும் மெல்லிய மேல்தோலை உடையதுமான ஓர் எலுமிச்சம் பழத்தை எடுத்து ஒரு மிளகு கொள்ளும் அளவில் மேல் தோலை எடுத்துவிட்டு ஒவ் வொரு மிளகாக உள்ளே செலுத்தி, பழம் கொள்ளும் அளவில் அடைத்து, எடுத்த பழத்தோலின் சிறு வில்லையை வைத்து அவ்விடத்தை மூடி அது அகலாமல் மேலே ஏதேனும் ஒட்டிவிடவும். பின் அடுப்பின் புகைபடுமாறு நூலில் கட்டித் தொங்குமாறோ கம்பித் தாங்கலாகவோ அமைக்கவும். பழத் தின் சாறு வற்றும் வரை இவ்வாறு அமைத்து சாறு வற்றி மிளகு உள்ளே உருளும் அளவில் பழத்தோலைப் பிளந்து மிளகுகளை எடுத்து வெய்யிலில் காயவைத்து எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். நச்சுக்கடியால் நினை விழந்தபோது ஒரு மிளகை எடுத்துச்சந்தனக் கல்லில் உரைத்து, இரு துளியைக் கண்ணில் இட, நினைவு மீளும். அல்லது அம்மிளகை ஊசியில் குத்தி எரியும் நெருப்பிலோ, விளக்கெண்ணெய் விளக்கிலோ காட்டிப் புகையை மூக்கில் பிடிக்க, நினைவு மீளும்.

## உடம்பை வைரமாக்கும் ஊட்டம்.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'' என்பது திருமந்திரம். உடம்பாரை வைரத்தார் ஆக்கினல் அழியார். குடி கொண்ட உயிராரும் நகரார். அதற்கு மிளகு நல்ல துணையார்.

நோயற்ற கட்டிளைஞரின் சிறு நீரில் 216 மிளகு தேரும் அளவு மிளகை எடுத்து ஊறவைத்துக் காயவைத்து இவ்வாறு 4 முறை ஊறவும் காயவும் வைத்து முதல் நாள் ஒன்று, அடுத்த நாள் இரண்டு, அடுத்த நாள் மூன்று, என நாளுக்கு நாள் ஒவ்வொன்று

கூட்டி 108 நாள்கள் தின்னவேண்டும். 109 ஆம் நாள் 107 மிளகாகவும் அடுத்த நாள் ஒன்று குறைத்தும் இவ்வாறு நாளுக்கு நாள் ஒவ்வொன்று குறைத்தும் தின்றுவர உடல் வைரமாம். உயிர் நிலைப்பாம். நீண்டநாள் வாழ்வு கிட்டும். இதற்கு மனக்கட்டுப்பாடும் வேண்டும். இதனை மருத்துவக் குறள்,

**மிளகைச் சிறுநீரின் மேலிட்டு மண்டலங்கொள்**
**ளளவிலாச் சூடும் அறும்.**

என்று உள்ளே அமைந்து பெருஞ் சூடு அற்றுப்போகும் நிலையை அறிவிக்கிறது. இச் சூட்டுத் தணிப்பு எத்தகையது என்பது சித்தர் அறிவர். அவ்வறிவால் மிளகு கர்ப்பம் என்னும் இம் முறை வாணாளை நீடிக்கும் என்னும் உளவை அறிந்தவன் சித்தன் என்னும் கருத்தமைய மருத்துவப் பழமொழி பேசுகிறது. ''மிளகுக் கருப்பத்தில் உளவறிவான்'' சித்தன் என்பது அது.

### தாயின் பெருமை



பச்சிளங் குழந்தைக்கு வந்துற்ற பயமூட்டும் நோயினை நீக்குதற்கு, மருத்துவர் கேட்கும் மூலிகை, வேங்கை உலவும் காடதனில் பாம்புப் புற்றுக்கருகினிலே கிடைக்கும் என்று தாய் அறிந்தால், தயக்கம் காட்டி நிற்பாளோ, தடுத்தாலும் போகாதிருப்பாளோ ?

இவ்வாறு மிளகு உணவுப் பொருளாய், கறியின் கூட்டுப் பொருளாய், பிணித் தடையாய், நோய் நீக்கியாய், அரு மருந்தாய் நிறைந்து நிற்பது. நஞ்சை நீக்கி, உயிரை வளர்க்கும் இதனை அமிழ்தம் என்பதில் உண்மை திகழ்கிறது. இவ் வமுதைப் பெறப் பாற்கடலைக் காண வேண்டாம். மத்தும் கயிறும் கொள்ள வேண்டாம். கடையும் இருபடைக் கூட்டம் கூட்ட வேண்டாம். இடையில் நஞ்சு பெற்று வருந்தவேண்டாம். இறுதியில் ஒரு கூட்டம் ஏமாற மற்றொரு கூட்டம் மட்டும் உண்டது என்ற நேர்மையற்ற நிலையும் வர வேண்டாம். அடுக்களையில் ஒரு பெட்டி உண்டு. அதனில் ஐந்து அறை இருக்கும். ஐந்தறையில் ஓர் அறையில் இந்த அமுதமாம் மிளகு எப்போதும் கிடைக்கும். ஐந்தறைப் பெட்டியை (அஞ்சாரப்பெட்டி என்று மரூஉமொழியாக வழங்குவதை அறிவோம்) அணுகினால் அருமை அமிழ்தம் கிடைக்கும். அவ்வமுதத்தை முறையாகப் பயன்படுத்தி நீண்ட நாள் வாழ்வோமாக!


## நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்**
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath



## தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்




Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.


வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.
போன்: 16 தந்தி: சித்தர்
சென்னை கிளை ஆபீஸ்:
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன்: 21448

# சிற்றூர்

ஆற்றலரசு







வளைவுகள் பலவுங் கொண்ட
வளமிலாப் பாதை யோரம்
விளைந்துள செடிகள் தன்னை
விழியினாற் கண்டே சென்றேன்!
களைப்பிலா உள்ளந் தன்னில்
கண்டஅப் பக்க மெல்லாம்
முளைத்தநெற் கதிர்கள் மீதே
முற்றிய மணிகள் கண்டேன்!

வானத்தை முட்டும் கோயில்
வையத்தை அளக்கும் வாவி!
ஞானத்தை வியக்கச் செய்யும்
நாடக அரங்கம் கண்டேன்!
தேனிசை பாடும் சிட்டு;
திசையெலாம் பறவைக் கூட்டம்!
நானங்குக் கண்ட போது
நாளெல்லாம் இன்பம் கொண்டேன்!






தென்னையும் பனையு முண்டு
தெள்ளெனப் பாயும் நல்ல
சின்னதோர் வாய்க் காலுண்டு
சிற்சில குடிசை யுண்டு!
பொன்னப்பன் மாடு மேய்க்கப்
பொலிவுடை நிலங்க ளுண்டு!
இன்சுவைக் கரும்பு வாழை
இவைகளும் ஆங்கே யுண்டு!

பள்ளியும் பாட்டு முண்டு
பைந்தமிழ்ப் பெரியோ ருண்டு!
துள்ளியே ஆடு(ம்) அந்தத்
துணிவுடை சிறுவர்க் கெல்லாம்
அள்ளியே பருகும் பாலும்
அருந்தயிர் முதலா முண்டு!
தள்ளியே நடக்கு மந்தத்
தாத்தாவின் கதைக ளுண்டு!





மண்ணுக்குப் பிறப்பே யான
மலரெலாம் விழித்தே எம்மை
அண்மையில் அழைக்கு மந்த
அழகிய காட்சி என்னே!
பண்ணிசை பலவும் பாடும்
பறவையின் இன்பம் என்னே!
வண்ணநற் சிற்றூர் தந்த
வனப்பிலே மயங்கி நின்றேன்!



உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி எண்கள்: 20461. 20462. 20463. 20464. 20465.
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்



# தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு,” “செல்வம் எத்தனை யுண்டு புவி மீதே அவை யாவும் படைத்த தமிழ் நாடு-”, இப்பேர் பெற்ற தமிழ்த் திருநாடு, தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா என்று வணங்கப்படுகிறது. இப் பெரும் வள நாட்டில்; மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுச் சுரங்கத்தில் விளைந்த அற்புதங்கள் பலவற்றில் குறிப்பிடத் தக்கதொன்று சீரணி யாகும். அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்து பெற்ற வளங்களை உற்ற வகையில் பயன்படுத்தி வளர்க்கத், திட்டங்களை விரைவு படுத்த எண்ணினார் பெருந்தகை அண்ணா அவர்கள். பல்கிப் பெருகி நிற்கும் மனித சக்தியை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துவதால் விளையும் பயன்கள் அளவிட முடியாதது என்று கண்டார். இந்த அடிப் படையில், உறங்கிக் கிடக்கும் மனித சக்தியை விழித்தெழச் செய்து, நாட்டுப் பணிபுரியும் நல்ல திசையில் திருப்பி, ஊருக்கும். உலகுக்கும் செம்மை சேர்க்க உருவாக்கிய பேரணிதான் சீரணி. தமக்காகவும், தம் குடும்பத்துக்காகவும் செலவிட்ட நேரம் போக, எஞ்சியதில் ஒரு நேரமாகிலும் நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவோம் என்ற உறுதி கொண்ட சில ஆயிரமவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின் சமூகம் மேம் பாடு அடைந்திடுவது உறுதி. இந்த ஆர்வம் கொள்வோர்கள் பல்லாயிரம் உளர்.

சீரணியில் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியியல் வல்லுநர், ஆசிரியர்கள், மாணவர் கள், அரசு ஊழியர்கள் அனைவரும் உண்டு. பாட் டாளியும் உண்டு, பாமரனும் உண்டு. ஆகையால் தான் அண்ணா, “ஒளி படைத்த கண்ணினாய் வா வா, உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா, களிபடைத்த மொழியினாய் வா வா, கடமை கொண்ட தோளினாய் வா வா, என்று அழைத்தார், பல்லாயிரக் கணக்கில் தொண்டர்கள் திரண்டார் கள். இப் பெரும் சக்தி மாபெரும் சக்தி என்று உணர்த்தினர்.

சீரணி ஒன்றியந் தோறும் நடைபெற வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. இத் திட்டத்தில் விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் முன்னின்று நடத் தப்பட்டு வருகிறது. 1967-68-ஆம் ஆண்டி லிருந்து இதுவரை நடைபெற்றுள்ள வேலைகள் மிக வும் பாராட்டத் தகுந்தவைகளாகும். 1967-68ம் ஆண்டு இத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது ரூ. 2,136. விருதுநகர்-அழகாபுரி பிரதான ரோட் டில் இருந்து பாவாலி கிராமத்திற்குப் பிரிவு ரோட் டில் பாதை அமைத்திருந்தும், போக்குவரத்துக்கு மிகவும் பாதிக்கப்பட்டு, விவசாயப் பெருங்குடி மக்கள் பல துயர்கள் அடைந்தார்கள். இக் குறையை மக்கள் கூறினர்கள். சீரணித்தொண் டர்கள் கிராம மக்களின் மனித சக்தியையும் பயன்படுத்திச், சீரமைப்புச்சரள் பரப்பி நல்லதொரு சாலையாக உருவாக்கினர்கள். இதன் மதிப்பு ரூ. 2,400. ஒ. கோவில்பட்டி கிராமத்தில் கண்மாயில் குடி தண்ணீர் சீரான முறையில் தேங்காமல் இருந்தது. சீரணித் தொண்டர்கள் இதனை அறிந்து கண்மாயில் உள்ள மணல், களிமண் ஆகியவைகளை அப்புறப் படுத்தினர்கள். இதன் மதிப்பு ரூ. 72.

ஒன்றியத்தின் உள்ள பள்ளிகளில் பல வருடங் களாக வெள்ளை அடிக்காமல், பெயர்ப் பலகை மாற்றம் செய்யாமல் இருந்தது. உடன் ஒன்றி யத்தில் உள்ள 64 பள்ளிகளிலும் சீரணித் தொண்டர்கள் மூலம் வெள்ளையடிதது, பெயர் பலகை ஆர்ட் எழுத்துக்களில் தயார் செய்து சுவர்களில் திருக்குறள் எழுதி முடித்தார்கள். இவைகளின் மதிப்பு ரூ. 1,555

1968-69-ஆம் ஆண்டு அரசினர் ரூ. 1,834 மானியம் அனுமதியளித்தார்கள். விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி மாணவர்கள் மிகவும் உற்சாகமாகத் திரண்டு எழுந்தார்கள். தாங்கள் சீரணியில் சேர்ந்து திட்ட வேலைகள்செய்ய மிகவும் ஆர்வம் கொண்டார்கள். இவர்களது ஆர் வம் பயன் படுத்தப்பட்டது. ஆமத்தூர் கண்மாயில் தண்ணீர் வரும் கால்வாய் பல வரு டங்கள் செப்பனிடப்படாததால் சீரான முறையில் தண்ணீர் வராமல் கண்மாய்க்குத் தண்ணீர் வரத் தடங்கலாக இருந்தது. நான்குபர்லாங்கு தூரமுள்ள கால்வாயை 534 கல்லூரி மாணவர்கள், பொது மக்கள், சீரணித் தொண்டர்கள் சீரமைத்து மணல் எடுத்தார்கள். இந்த வேலைகளின் மதிப்பு ரூ. 1,936. வேலை முடிந்த கண்மாயில் தண் ணீர் தங்கு தடையின்றி வருகிறது.

ஆசிரியர் பெருமக்கள் தாங்கள் சீரணியில் சேர்ந்து பயனுற-கடமையாற்ற முன்வந்தார்கள். 1968-69-ஆம் ஆண்டு விருதுநகர்-வடமலைக் குறிச்சி ரோட்டில் பாப்பாக்குடி கிராமத்திற்குச் சாலை இல்லாமல் இருந்ததால் அவ் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்படி ஒன்றியத் தில் உள்ள எல்லா ஆசிரியர்களும், சின்னமூப்பன் பட்டி கிராமத்தில் முகாமிட்டு வேலை செய்தார்கள். நான்கு பர்லாங்கு தூரம் உள்ள


இக் கிராமத்திற்கு 1,036 பேர்கள் பணிபுரிந்து புதிய சாலை அமைத்தார்கள். வேலையின் மதிப்பு ரூ. 2,759.

உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு விழா மாவட்ட அளவில் விருதுநகரில் எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்தார். இச் சிறப்பு மகாநாடு நடத்தச் சீரணித் தொண்டர்கள் காட்டிய ஆர்வம் கணக்கில் அடங்காது. மாபெரும் ஊர்வலம் நடைபெற்றதில், எல்லா அணிகளுக்கும் முன்னால் சீரணியினர் சீருடையில் பீடுநடை போட்டு அணிவகுத்தார்கள். இப் பெரும் அணி ஒரு படைபோன்று காட்சி அளித்தது. அன்று இரவு சுமார் இருபத்தையாயிரம் மக்கள் கொண்ட பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அப்பெரும் கூட்டத்தை அமைதிப்படுத்திச் சீரணித் தொண்டர்கள் நடத்தினார்கள். பெரியவர்கள் 280 சீரணித் தொண்டர்கள் இவ் வேலைகளில் கலந்துகொண்டது பற்றி மிகவும் பாராட்டினார்கள்.

சீரணி கண்ட செம்மல் அண்ணாவின் 60-வது ஆண்டு நிறை விழாவின் போது அவருக்கு ஒரு அழியா நினைவுச் சின்னமாக விளங்கும்படி அண்ணா மணிவிழா பள்ளிக்கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. பள்ளிக் கட்டடம் இல்லாமல் இருந்த பாவாலி ஊராட்சி சந்திரகிரிபுரத்தில் ஒரு பள்ளிக் கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. துவக்க வேலையை செப்டம்பர் 15ஆம் நாள் விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் (தற்போதைய துணை சபாநாயகர்) திரு பெ. சீனிவாசன் அவர்கள் ஆரம்பித்து வைத்து, சீரணித் தொண்டர்களுக்குக் கடமை பற்றி விளக்கினார். பள்ளிக் கட்டடம் சீரணித் தொண்டர்களால் திட்டமிட்டபடி மிகவும் உற்சாகத்துடன் செய்து முடிக்கப்பட்டது. இக் கட்டடத்தைத் தொழில் அமைச்சர் திரு செ. மாதவன், பி.காம்., பி.எல்., திறந்து வைத்தார்கள். கட்டடத்தின் வேலையின் மதிப்பு ரூ. 5,583. இதில் சீரணி உழைப்பின் மதிப்பு ரூ. 2,283

பெரிய பேராளி கிராமம், பல விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்ந்து வரக்கூடியது. சின்னப் பேராளியில் இருந்து இக் கிராமத்திற்குச் சாலை அமைப்பு வேலை சீர்பெறாமல் கண்மாய்க் கரையில் செல்லும் சாலை மிகவும் ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவுக்கு இருந்தது. இதையறிந்து சீரணித் தொண்டர்கள் இந்தச் சாலை வேலையைச்சீரமைத்துக் கண்மாய்க் கரைகளில் செல்லும் இடத்தை விரிவுபடுத்திச் சுமார் முப்பது அடி உயரத்திற்குச் சரள் பரப்பிச் சீரமைத்துள்ளார்கள். இவைகளின் மதிப்பு ரூ. 1,878. இப்போது விவசாய வண்டிகள் தாராளமாகச் சென்று ர முடிகிறது.

சிரணியினரால் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடம்





சிவகெங்கையில் சாலை அமைக்கும் பெண்கள் !

சீரணி தாரக மந்திரம் அண்ணாவின் பத்துக் கோட்பாடுகளாகும். அக் கோட்பாடுகள் கொண்டு பைந் தமிழ்நாடு பல்வளம் பெறவும், சமூகம் நல் ஏற்றம் எய்தவும், சமூகம் எல்லாத் துறைகளிலும் மறு மலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப் பணிகள் ஆற்றவும், சீரணி நோக்கத்தில் நம்பிக்கையும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத் தூய்மையோடு காய்தல், உவத்தல் அகற்றிக் கைமாறு கருதாது கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும், கடமையாற்றுவேன் என்று உறுதி ஏற்று இவ் ஒன்றியத்தில் உள்ள 57 ஊராட்சிகளில் உள்ள சீரணித் தொண்டர்கள் ஒன்று திரட்டப்பட்டார்கள். திட்டமிட்டுச் செயல்கள் புரியப் பல துறைகளில் இவர்களுக்குப் பயிற்சி தேவை. காவல் பயிற்சி, முதலுதவி, தீத்தடுப்பு, கோழி வளர்ப்பு, விவசாயச் சீர்திருத்த முறை, முதியோர் கல்வி, குடும்ப நலம், நல்வழிப் பணிகள், பொதுப் பணிகள் பண்டைத் தமிழரின் வரலாறு மற்றும் பயிற்சிகள் ஒரு வாரம் இவ் ஒன்றியத்தில் கொடுக்கப்பட்டது.

விருதுநகர் ஒன்றியத்தில் பலபெரிய திட்டங்களைப் போற்றத் தகுந்த முறைகளில் சீரணித்தொண்டர்கள் செயலாற்றியுள்ளார்கள். 1970-71ஆம் ஆண்டிற்குச் சீரணித் திட்டத்தில் ஒரு பெரிய திட்டமாக எடுத்து நடத்த, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரைப்படி, சிவகாசி உதவி ஆட்சித் தலைவர் இக் கோட்டத்தில் அடங்கியுள்ள ஒன்றியங்களிலெல்லாம் ஒதுக்கீடு செய்துள்ள பணத்தை ஒன்று திரட்டி, விருதுநகர் ஒன்றியத்தில் நடத்த முடிவு செய்துள்ளார். இதன்படி இவ்வொன்றியத்தில் உள்ள அப்பநாயக்கன்பட்டி கிராமத்திலிருந்து மல்லநாயக்கன்பட்டி கிராமத்தில் மூன்று மைல் தூரத்திற்குப் புதிதாகச் சாலை அமைத்து, சரள் பரப்பு ரூ. 60,000 (அறுபதினாயிரம்) மதிப்பில் வேலை செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது.

**அ**ந்தக் கிராமத்துக்கு வந்த மூணு வருஷ சர்வீசில் தபால்காரர் சாமண்ணு ''டைப்'' செய்யப்பட்ட முகவரியோடு கூடிய கவரைப் பார்த்ததில்லையாதலால் இப்போது, முதல் முறையாக அவருடைய கண்கள் வியப்பால் விரிந்தன.

அ. வேலப்பன்,
அழகப்பர் மகன்,
தண்டேகுப்பம் அஞ்சல்,
கிருட்டிணகிரி (வழி),
தருமபுரி (மாவட்டம்).

என்று ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டிருந்த முகவரியைப்படித்தவுடன் ''ஓகோ நம்ம மைனர் தம்பிக்கு வந்திருக்கு'' என்று நினைத்துக் கொண்டார். அதே சமயம், ''என்ன சார் நமக்கு லெட்டர் வந்திருக்கா'' என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றான் வேலப்பன்.

அந்தக் கிராமத்தில் 'எஸ்.எஸ் எல்.சி' வரை படித்து, நாகரிகத்தோடு விளங்குபவனாக இருந்த ஒரே காரணத்தால் அந்தக்கிராமமே அவனை 'மைனர்' என்று கூப்பிடுவதில் ஒருவிதமான பெருமை கொண்டது. வேலப்பன் தங்களோடு நின்று பேசுவதைக்கூடப் பெருமையாகக் கருதியவர்களும் உண்டு.

கவரைப் பெற்றுக்கொண்டு தன் தந்தையிடம் செய்தியைச் சொல்ல வந்த வேலப்பன், எதிரில் டீக்கடையில் அவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, தூரத்திலிருந்தவாறே கூவினான். ''அப்பா, நாம கோயமுத்தூருக்கு மண்ணை அனுப்பிச்சோமில்லே? அவுங்க ஆராய்ச்சி பண்ணி பதில் போட்டிருக்காங்க இதோ கடுதாசி வந்திருக்கு''. அவர் மகனைப்பெருமிதத்தோடு பாத்தார். அவன் கடிதத்தின் வாசகங்களில் கண்ணை ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

''அப்படியா! நம்ம மண்ணுக்கு எது புடிக்குமாம்?''

''அதாம்பா—நெல்லுபோடற எடம் போக, தண்ணி பாயாத மேட்டு நிலத்துலே வீரியக் கம்பு போடலாமாம்.''

''என்னஅது வீரியக் கம்பு?''

'ஆராய்ச்சியிலே அதிக விளைச்சலைத் தர்ற பலவிதமான ரகங்களைக் கண்டு புடிச்சிருக்காங்க, 'அமோக விளைச்சல் திட்டம்னு' பேரு. அதுலே வீரியக் கம்பும் ஒரு வகை. இந்தக் கம்பு சாதாரண கம்பை விடக் குட்டையாக இருக்கும். ஆனா பூட்டே மட்டும், சாதாரணப் பூட்டே மாதிரி ரெண்டு, மூணு மடங்கு பெரிசா இருக்கும். விளைச்சல் செமக்கே இருக்கும்."

''சரி. உன் இஷ்டம்.''

''ஆனா அதுக்கும் அப்பப்ப தண்ணி பாச்சணும். அந்த வாய்க்காலெ கொஞ்சம் ரிப்பேர் பண்ணிக்கிறேன்.''




''சரி'' என்று கூறி விட்டு டீக்கடையில் இருந்தவர்களை ஒரு சுற்றுப் பெருமிதத்தோடு பார்த்து விட்டு, வேலுவுடன் புறப்பட்டார், அவர்.

* * *

''அப்பா''

''ஓய்! தோ வந்துட்டேன். என்னடா பையும் கையுமா?''

''பேட்டைக்குப் போயிட்டு வாரேன். கலப்பெ மழுங்கிப் போச்சு. மாத்தணும்—ஆயிலு எஞ்சினு கைப்பிடி லூசாயிருச்சி. அப்படியே ரிவிட் பண்ணி யாந்துடறேன்.''

''ஏன்? புதுசாவே ஒண்ணு வாங்கியாந்துடேன்.''

''எதுக்கப்பா? கவர்மெண்டுலே இன்னும் கொஞ்ச நாள்லே கரண்ட்வசதி செய்யப்போறாங்க. அதுக்குள்ளே ஏன் புதுசு வாங்கணும்? இதுலெயே ஒட்டிப்புடலாம்.''

''சரி.''

வாட்சை எடுத்து மணிக்கட்டுக்குமேல் ஐந்தங்குலம் தள்ளிக் கட்டிக்கொண்டு புறப்படுகின்றான் வேலப்பன். பஸ் வருகின்றது. கிராமத்தில் இருந்து டவுனுக்குப் போகிற சிலர் விரைந்து வருகின்றனர். டவுனிலே வேலை இருக்கிற சிலரும் வருகிறார்கள். வேலப்பனிடம் அவர்கள் நடைமுற்றுப்பெறுகின்றது.

''மைனர் தம்பி....பேட்டையிலெ உங்கண்ணன் கிட்டெ சைக்கிளை ரிப்பேருக்கு உட்டிருக்கிறேன். வாரப்ப அது ரிப்பேராயிருந்தா, அதுலெயேவந்துடேன்'' —கோவிந்த மூப்பனாரின் இந்த வேண்டுதலை அவன் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக, அவன் புருவங்கள் ஏறி இறங்கின.

''தம்பீ! நம்ம பொடியன் ஐஸ்கூலுக்குப் போறான். ஐஸ்கூலு பக்கத்திலே, கண்டக்டர் சாருகிட்டே சொல்லி எறக்கி வுட்டுடு''—புருவங்கள் மீண்டும் ஏறி இறங்கின; பொடியனின் கையைப் பிடித்து இழுத்து அருகில் நிறுத்திக் கொண்டான் வேலப்பன்.

''இந்தாப்பா வேலு! வர்றப்ப ஒரு பேப்பரு வாங்கியா? இன்னிக்கி மார்க்கட்டு நிலவரம் எப்பிடியிருக்குன்னு பார்க்கணும். நோம்பி சந்தெ வேறெ பக்கத்துலெ வருது'' என்று சொன்ன ஊர்க் கவுண்டரிடம் காசைப் பெற்றுக் கொண்டு, ''சரிங்க'' என்றான் வேலப்பன். ''வந்தப்புறம் படிச்சிக் காட்றதுக்கும் நான்தான்'' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டான் அவன்.

டிரைவர் ஹாரன் கொடுத்தார்; பஸ் உறும ஆரம்பித்தது. பொடியனைத் தூக்கி உள்ளே விட்டுவிட்டு, படிகளில் கால் வைத்த வேலப்பன், வலதுபக்கம்

திரும்பிப் பார்த்து விட்டு, ராசாத்தி வேகமாக வருவதைப் பார்த்ததும், "கண்டக்டர் கொஞ்சம் இருங்க" என்று கூறி விட்டுக் கீழே இறங்கினன். ராசாத்தி அவனுக்கு முறைப் பெண்.

"வந்து, ஒரு மை டப்பி வேணும்" என்று சொல்லிக் கொண்டே சில்லறைக் காசுகளை நீட்டினள்.

"கண்ல இருக்கிற கருப்பு போதாது? மை வேறியா?" என்று சொல்லிவிட்டு, "எங்கிட்டயும் காசு இருக்குது" என்று கூறியவன், கண்டக்டர் விசில் சத்தம் கேட்டதும், பஸ்ஸில் பாய்ந்து ஏறினன்.

* * *

வேலப்பனின் திறமையாலும், டவுனேடு அவன் கொண்டிருந்த தொடர்பினல் பெற்ற புதுப் புது அனுபவத்தாலும், விளைச்சல் அமோகமாகப் பெருகிக் கொண்டிருந்தது. அதோ—தாங்க முடியாமல் பழங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் இராட்சசப் பப்பாளி மரம், செடியில் காய்க்கும் துவரை, மரமாகக் காய்த்திருக்கும் அழகு; குட்டை மரமாய் நெட்டைத் தார் தரும் பச்சை வாழைத் தோட்டம்......என்றெல்லாம் பசுமை குலுங்கிக் கொண்டிருக்கும் அந்த வயலின் ஒரு மூலையில் இருந்த அரை ஏக்கரா நிலம் மட்டும் ஒன்றும் விளையாமல் சொட்டையைப் போல், திருஷ்டிப் பொட்டாய் நின்றது. அதற்கும் காரணம் வேலப்பன்தான்! உரம் போட்டால் பயிர் வளரும். உரத்தை அதிகமாக, அபரிமிதமாக, அளவுக்கு மேல் பத்து மடங்கு போட்டால் என்ன ஆகும் என்று அவன் செய்த சோதனை—இன்று உழவுக்குத் தகுதியில்லாத களராக மாறி விட்டது அந்தப் பண்ணை. நல்ல வேளை—அவன் சோதனை அரை ஏக்கரோடு நின்றது. அந்த மண்ணில் கொஞ்சத்தை எடுத்துக் கோயமுத்தூருக்கு அனுப்பி விட்டு, வேறு வேலைகளைக் கவனித்தான் அவன்.

* * *

காலச் சக்கரம் சுழல்கின்றது.....

வேலப்பனைப் பற்றிய நல்லெண்ணம் இப்பொழுதெல்லாம் அழகப்பருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்துவிட்டது. "அடிக்கடி டவுனுக்குப் போகிருன்—அதுவும் வார்த்தைக்கு வார்த்தை தன்னிடம் சொல்லி விட்டுப் போகிறவன் இப்பொழுதெல்லாம் வருவதும் போவதும் தெரியவில்லை" என்று நினைத்துப் பார்த்தார். தங்களுக்குப் பெரிய மகன் ஒருவன் (வேலப்பனின் அண்ணன் முத்தப்பன்) இருப்பது இப்பொழுது அவரது உள்ளுணர்வைத் தாக்கத் தொடங்கி விட்டது. இத்தனை நாள் முத்தப்பனை எதற்குமே கூப்பிட்டுக் கொள்ளாமல், வேலப்பனின் விருப்பத்திற்கே பண்ணையை விட்டு விட்ட எண்ணம் அவர் நெஞ்சை லேசாக வருடியது.

அன்றைக்கு அறுவடை வேலை மும்முரமாக நடைபெற்ருக வேண்டும். அழகப்பர், மனைவி காமாட்சியைக் கூப்பிட்டார். "ஏ புள்ளே! இன்னிக்கி அறுப்பாச்சே. ஆளுவகளுக்குச் சொல்லி அனுப்பியாச்சா? வேலு எங்கே? போயி ஒரு நடை சொல்லி வந்தான்னு பரவால்லே."

"வேலு என்னமோ அவசர சோலியா பேட்டைக்குப் போவனும்னு சொல்லிக்கிட்டிருந்துது."

"அறுப்பெ விட்டுட்டு என்னு அவசர சோலி? இருக்க இருக்க சுத்த மோசமாப் போயிட்டான் அவன். எல்லாம் நீ குடுக்கிற செல்லம்."

"ஆமா.... நான் தான் செல்லம் குடுத்தேன்? நான் தான் அவன் எது கேட்டாலும் பெருமா மாடு மாதிரி 'சரி-சரி' ன்னு தலையாட்டினேன்."

"என்னடி வாய் நீளுது? ஒழுங்கு மருவாதியாப் பேசு."

"ஆமா" என்று நீட்டி முழக்கினள் காமாச்சி. இந்த வேகமான உரையாடலில், முத்தப்பன் முதல்முதலாகத் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான். பல நாட்களாக அவன் நெஞ்சில் குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தது.

"அம்மா சொல்றதுலெ என்னப்பா தப்பு? தம்பிப்பய எதுக்குமே லாயக்கில்லாதவனுப் போயிட்டான். உங்களுக்கு அதெல்லாம் கண்ணிலேயும் படாது, காதுலேயும் ஏருது. சொன்னு கெட்ட பேரு. வாரத்துலே மூணு நாளு டவுனுக்கு சினிமா பாக்கப் போருன். கேட்டா, ஏதோ பெருசா சோலி இருக்குதுங்கிருன்.

"அது போவட்டும், வயலுக்கு வந்தாலும் ஒரு கராரு இருக்கறதில்லே. இவன் பெருமையெ அவுங்க கிட்ட பேசவே நேரம் போதலெ. அவுங்களுக்கென்ன? வேலை செய்யறதெ விட, 'ஊம்' கொட்றது லேசுதானே. நான் அதட்டினலும், 'சரிதான் போசாமி! சின்னத்தம்பியே ஒண்ணும் சொல்லலே'ன்னு எடுத்தெறிஞ்சி பேசுருங்க. அதுவும் பொம்பளெங்க கிட்டெ பேசறதுன்னு நேரம் போறதே தெரியாமப் போயிடிச்சி அவனுக்கு.. நீங்களும் அவனெ கட்டுப்படுத்தறதில்லே"—அண்ணந்து கொண்டு விட்டத்தைப் பார்த்தபடி, சொல்லி முடித்துவிட்டுக் கோபத்தினல் மூச்சிறைக்க, இன்னும் விட்டத்தையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் முத்தப்பன்.

"என் நேரே நிக்கக் கூடப் பயப்பட்டுக் கொண்டு ஒதுக்குப்புறமா நிக்கும் பெரிய மவன், எனக்கே புத்தி சொல்ற தோரணையிலே பேசறதுக்குக் காரணம் வேலுவின் நடத்தைதான்" என மனசுக்குள்ளே சொல்லிக் கொண்ட அழகப்பர், "சரி.. சரி.. இப்ப ஒண்ணும் குடி முழுகிப் போவுலே.. நீ அறுப்புக்கு வேண்டியதெப் பாரு" என்று முத்தப்பனுக்கு உத்தரவிட்டார்.

"நம்ம ஏத்தப் பரி நேத்து கிழிஞ்சு போச்சு; தைக்கணும்"

"ஏன்-பரி குத்தறவங்கிட்டெ போயி சொல்றதுதானே?"

"அறுப்புக்குப் போறதா? பரி குத்தறவனெ கூட்டியாறப் போறதா?" எனக் கேட்டான் முத்தப்பன்.

வேலுவும் இருந்தால், ஆளுக்கொரு வேலை செய்யலாம் என்பதை உணருகிருர் அழகப்பர். ஒன்றும் பேச முடியவில்லை அவரால்.

"தம்பீ! நீ முதல்லெ அறுப்புக்குப் போ" என்கிருள் காமாச்சி.

'' எனக்கென்ன ? மௌவாச் செடிக்குத் தண்ணி கட்டி நாளாவுது. இன்னிக்கும் பரி கிழிசல். இன்னிக்கிப் பரியைத் தச்சாத்தான் நாளைக்காவது தண்ணி கட்டலாம். பூத்திருக்கற பருவத்துலே தண்ணி கட்டலேன்னா, செடி வாடாமெப்போனாலும், பூ உதுந்துபோயிடும். அப்புறம் காய் எப்பிடிப் புடிக்கும் '' என்று முணகிக்கொண்டே நகருகிறான் முத்தப்பன்.





இந்த உரையாடல் அவர்கள் வீட்டில் நடந்துகொண்டு இருந்த பொழுது, வேலப்பன் வேகமாகப் வரப்புகளைத் தாண்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக, பஸ்ஸைப் பிடித்துவிட வேண்டும் என்று வந்து கொண்டிருந்தான். ''இன்னிக்கி மேட்னி, தங்கம் தியேட்டர்லே பாத்துட்டா, முதல் ஆட்டம் கீத்துக் கொட்டாயிலே பாக்கலாம். ராவோட ராவா வந்து திண்ணையிலே படுத்துக்கணும். இப்பிடி மறஞ்சி ஏதோ செய்யக் கூடாததெ செய்யற மாதிரி செய்ய வேண்டியிருக்கு...... ஐயையோ .. .. பஸ் ஸ்டாண்டிலே ஆளுக்கொரு வேலை குடுப்பாங்களே .. அதெல்லாம் ஏத்துக்கிட்டா மேட்னி பாத்த மாதிரிதான் .. .. அதனாலே இப்பிடிக் குறுக்காலே மேட்லெ ஏறி, பஸ்ஸை ஒண்ணாவது மைல்லெ புடிச்சிடலாம்'' என்று நினைத்துக்கொண்டு திசையை மாற்றினான். கல்லுக் கட்டைத் தாண்டி மேட்டில் ஏறும்போது, எதிரில் பரிகுத்தும் சின்னான் வந்து கொண்டிருந்தான்.

''என்னா சாமீ இந்தப் பக்கமா? என்னெக் கூப்புட வந்தீங்களா ? ஏதாச்சும் பரிகிரி குத்தணுமா ? குத்தணும்னா இப்பவே சொல்லிடுங்க. நான் பக்கத்துக் கிராமத்துக்கு ஒரம்பரயாப் போறேன் வர ரண்டு மூணு நாளாவும்.''

சின்னானின் வார்த்தைகள் வேலுவின் கருத்தை எட்டவில்லை.

'' பரியா ? எல்லாம் நல்லாத்தான் இருக்கும். உன் வேலையைப் பாத்துக்கிட்டு நீபோ''—மேலும் பேசிக்கொண்டு நேரத்தை

வீணுக்க விரும்பாமல் விரைந்தான் வேலப்பன்.

அங்கே—

தோட்டத்து வீட்டில் கிழிந்த பரி தொங்கிய வண்ணம் காற்றில் ஆடியது.

மேட்னி முடிந்தது. கூட்டத் தோடு கூட்டமாக வந்து கொண்டிருந்த வேலப்பனின் தோளை, யாரோ பிடித்து நிறுத்துவதை உணர்ந்தான் அவன். தோளோடு கழுத்தைத் திருப்பிப் பார்த்தான்.

'' யாரது.... மாணிக்கமா ?

'' ஏம்பா ? ஆளையே மறந்துட்டியா ? ''

'' நான் மறக்கல்லேப்பா ! நீ தான் ஆளே மாறிட்டெ''

அவர்களைத்தாண்டிக் கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. இருவரும் தனித்துவிடப்பட்டனர். மாணிக்கத்தை இப்பொழுது, முழுமையாக ஒரு தரம் ஏற இறங்கப்பார்த்தான் வேலப்பன்.

கால்களில் பூட்சு.... காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கும் அழகான கால் சட்டை.... கால்சட்டையின் இறுக்கத்திற்கு முற்றிலும் மாருக, தொள தொளவென்றிருந்த மேல் சட்டை..... அந்தச் சட்டை, மஞ்சள் சுவரில் சிகப்புச் சாந்தை விட்டெறிந்த மாதிரி கண்ணைக் கவர்ந்து உறுத்தியது ........இத்தனை ஆடம்பரத்திற்கும் முரணுக எண்ணெய் பூசாமல் திமிறிக் கொண்டிருந்த தலைமுடி........ மாணிக்கத்தைப்பற்றி மிகவும் நன்ருகத் தெரியும் வேலுவுக்கு. தன்னுடன் படித்துக்கொண்டிருக்கும் பொழுது '' அனுதை '' என்று எள்ளி நகையாடப்பட்டவன்; இன்று அதே அனுதைப் பட்டத்தைக் கவசமாகவும், அணிகலனுகவும் கொண்டு வளர்ந்து நிற்கிருன்.

'' எப்பிடியப்பா உன்னுலே இவ்வளவு ஜோரா இருக்க முடியுது ? '' —வேலுவின் உள்ளக்கிளர்ச்சி, பெருமூச்சோடு இணைந்து, கேள்வியாக வெடித்தது. இந்தக் கேள்விக்குப் பளீரென்று பதில் சொன்னுன் மாணிக்கம். '' எனக்குக் குடும்பமுங்கற கட்டுக் கிடையாது. நாலணு சம்பாரிச்சாலும், நாலாயிரம் சம்பாரிச்சாலும், அது எனக்கே சொந்தம்—என் இஷ்டம் போலவே அதைச் செலவு செய்யலாம்........'' இவ்வாறு சொல்லிவிட்டு, நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு மாணிக்கமே தொடர்ந்தான், '' ஆனு........கட்டுப்பாடும் இல்லாமெப் போயிடிச்சி. சம்பாரிக்கறதும், இஷ்டத்துக்குச் செலவழிக்கறதும் — பெட்ரோலைக் குடிச்சிட்டு ஓடற மெசின் மாதிரி ''...... பிறகு அவனே கைகளைத் தலைமுடிக்குள் பரப்பி நெட்டி முறித்துக்கொண்டு, பெருமிதத்தோடு '' என்ன இருந்தாலும், நான் இருக்கறவரைக்கும் நானே ராஜா '' என்ருன்.

தன்னைப் பற்றிய ஒரு முடிவுக்குத் தானே வரமுடியாமல் தவிக்கும் மாணிக்கத்தின் குழப்பத்தைத் தவிர்க்க, வேலு பேச்சை மாற்றினுன்.

'' இந்தப் படத்துலெ வர்ற கிளப் டான்சு எப்பிடி ? பிரமாதமில்லே ? ''

'' அட போப்பா—இது ஒரு டான்சா........ என்னமோ நிழலைப் பாத்துட்டுப் பெருமூச்சு விடறியே...... நான் நிஜமாவே பாத்தவன்........ பெங்களூர்லே இல்லாத கிளப் டான்சா ?''—இந்த உரையாடலுக்குப் பிறகு, மாணிக்கம் தனக்குத் தெரிந்த இனக் கவர்ச்சி நடனங்களைப் பற்றி மிக விரசமான முறையில் வருணித்து முடித்தான். தனக்குத் தெரியாமல் உலகம் எப்படி எப்படியோ சுகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற தவருன முடிவை ஒரே கணத்தில் எட்டிப் பிடித்துவிட்டான் வேலப்பன். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவிட்டவனைப்போல ஆவேசமாகக் கேட்டான்.

'' பெங்களூருக்கு ஒரு தடவை போய்வர எவ்வளவு செலவாகும் ? ''

'' நாற்பது ரூவா ''

* o *

பெங்களூரைப் பார்க்கப் போன வேலப்பன் பெங்களூரையே ஏற்றுக்கொண்டதில் வியப்பில்லை; பெங்களூர் அவனை ஏற்றுக்கொண்டது, அவனது திறமையினுல்தான் என்ருலும், அதை அவனுடைய அதிருஷ்டம் என்று சொல்லிவிட முடியாது. கிராமத்துச் செழிப்பை நகரத்துப் பூச்சில் மறைத்துக் கொண்டான் வேலப்பன்.

* * *

வேலப்பன் காணுமற் போன திலிருந்து குன்றிக் கூனிக்குறுகி மெலிந்து பசையற்றுப்போய் விரக்தியோடு சிரித்துக்கொண்டிருந்தார் அழகப்பர். வேலு எங்கு போனுன், என்ன ஆனுன் என்றே அவரால் அறிய முடியவில்லை. ஒரு நாள், கோவிந்த மூப்பனுரிடம், '' பயிர் நல்ல விளைச்சலைத் தராதுன்னு ஆரம்பத்துலெயெ தெரிஞ்சப்பறம், விளைச்சல் இல்லாமப் போனுலும், பயிராவது மாட்டுக்குத் தீவனம் ஆகும்னு மனசைத் தேத்திக்கலாம். ஆனு, கதிர் பூரிச்சு, மணி நெறஞ்சி, முத்தித் தலை குனிஞ்சி, அறுவடைக்குத் தயாரான பயிர் ஒரு நாள் மழை வெள்ளத்துலெ அடிச்சிக்கிட்டுப் போயிட்டா, மனசு பொறுக்குமா ? என்னுடை வேலுவும் அப்படிப் போயிட்டானே '' என்று சொல்லிக்கொண்டு கதறினுர். என்ருலும் என்றைக்காவது ஒரு நாள் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையிலேயே உயிரைப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தார்.

ராசாத்தியும் வேறு யாருக்கோ மணமுடித்து வைக்கப் பட்டாள். ஒருவேளை, வேலப்பன் கிராமத்திலேயே இருந்து, ராசாத்தியைத் திருமணம் செய்துகொண்டிருந்தால், அது '' காதல் திருமணம் '' என்று பாராட்டப்படும் அளவுக்குச் சிறப்புடையதாக இருந்திருக்கும். அப்படிப்பட்ட அன்புப் பிணைப்பு, அழிவது தெரியாமல் அழிந்தது.

நீண்ட நாட்களுக்கப்புறம் வேலப்பனிடமிருந்து, அழகப்பருக்கு ஒரு கடிதம் வந்தது.

'' அப்பாவுக்கு வணக்கம்.

நான் ஒரு மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு



# ஏர்-இந்தியா

## அறிவிக்கின்றனர்:

# கட்டணங்களிலே கணிசமான குறைப்பு!

'எமது (அ∴பினிடி க்ரூப்) இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ், தீவிரமான கட்டணக் குறைப்புகளை வழங்குகின்றனர் ஏர் - இந்தியா. பல துறைகளுக்கு இந்த இறக்கம் ரூ. 2000/-க்கு மேற்படும்.

### இன ஒருமைக் குழு (அ∴பிடினி க்ரூப்) என்பது என்ன?

பயணம் அல்லாத, பொதுவான பிற நோக்கங்களையோ, அலுவல்களையோ கொண்டதாய், பயணத்திற்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவரும் ஒரு சங்கம் அது. அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்வதானால், அச் சங்கம் குறைந்தபட்சம் இரு ஆண்டுகளாவது இயங்கிவந்திருக்க வேண்டும்.

உதாரணங்கள் : கலைத்துறை, இன்னிசை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், உணவியல் போன்ற கல்வி நிறுவனங்கள்; வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அறுவை சிகிச்சையாளர்கள், நோய்க் குறி ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்றோரின் தொழிற் குழுக்கள்; லயன்ஸ் க்ளப், ரோட்டரி கிளப் போன்றவை, விளையாட்டுக் கழகங்கள், ஜிம்கானக்கள், பாடகர் குழாக்கள், நாடக இன்னிசை மன்றங்கள் முதலானவை.

### குறைந்த பட்சத் தேவைகள் :

மேற்கூறிய எந்த ஒரு இன ஒருமைக் குழுவிலும், பயணத்திற்கு முன் குறைந்த பட்சம் 6 மாதங்களாவது உறுப்பினராக இருந்தால்தான், இந்தக் கட்டணக் குறைப்பைப் பெற உரித்தாவீர்கள். பயணமுழுதுமே நீங்கள் உங்கள் குழுவுடன் சேர்ந்துசெல்லத் தேவை; அக் குழுவோ 15 பேருக்குக் குறையாதிருக்கவேண்டும்.

இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ் பெருமளவான கட்டணக் குறைப்பைத் தருவதோடு மட்டுமல்ல; கடந்த 3 ஆண்டுகள் நீங்கள் வெளிநாடு செல்லாதவராக இருப்பின், தமக்கே உரித்தான உயர்தனிப்பெரும் நலன்களை உங்களுக்குத் தருகின்றனர் ஏர்-இந்தியா.

| செல்லுமிடம் | அ∴பினிடி க்ரூப் கட்டணங்கள் (எல்லாக் கட்டணங்களும் இந்திய ரூபாய்களிலே) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பம்பாய் | | கல்கத்தா | | டெல்லி | | சென்னை | |
| | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அ∴பினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அ∴பினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அ∴பினிடி ரிடர்ன் கட்டணம் | சாதாரண ரிடர்ன் கட்டணம் | அ∴பினிடி ரிடர்ன் கட்டணம் |
| ஆம்ஸ்டர்டாம் ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ∴ப்ரான்க்∴பர்ட்.. ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| பாரிஸ் ... ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ப்ரேக் ... ... ... | 5984 | 4189 | 6732 | 4713 | 5984 | 4189 | 6650 | 4655 |
| ஜெனீவா/ஜுரிச் ... ... | 5895 | 4127 | 6646 | 4653 | 5895 | 4127 | 6561 | 4593 |
| ரோம் ... ... ... | 5233 | 3664 | 6027 | 4219 | 5233 | 3664 | 5899 | 4130 |
| மாஸ்கோ-நேராக டெல்லி வழி | 4986 | 3491 | 5633 | 3944 | 4938 | 3457 | 5652 | 3957 |
| " மத்தியகிழக்கு/ஐரோப்பா வழி | 7704 | 5393 | 8498 | 5949 | 7704 | 5393 | 8370 | 5859 |
| லண்டன் ... ... ... | 6070 | 4249 | 6821 | 4775 | 6070 | 4249 | 6736 | 4716 |
| நியூ யார்க் ... ... ... | 9210 | 5603 | 9615 | 5963 | 9210 | 5603 | 9615 | 5963 |
| கோலாலம்பூர் ... ... | 2915 | 2041 | 2207 | 1545 | 2736 | 1916 | 2339 | 1638 |
| நாந்தி ... ... ... | 8649 | 6055 | 8073 | 5652 | 8649 | 6055 | 7987 | 5591 |
| பெர்த் ... ... ... | 6133 | 4294 | 5561 | 3893 | 6133 | 4294 | 5471 | 3830 |
| சிங்கப்பூர் ... ... ... | 2915 | 2041 | 2385 | 1670 | 2915 | 2041 | 2339 | 1638 |
| ஸிட்னி ... ... ... | 7015 | 4910 | 6441 | 4509 | 7015 | 4910 | 6354 | 4448 |
| டோக்யோ ... ... ... | 5912 | 4139 | 5206 | 3645 | 5604 | 3923 | 5427 | 3799 |

முழு விவரங்களையும், இக் கட்டணங்களுக்கு உரிய இதர நிலையங்களின் பட்டியலையும் பெற, உங்கள் அருகமைந்த எங்கள் 56 அலுவலகங்களில் ஒன்றுக்கோ, உங்கள் பிரயாண ஏஜண்டுக்கோ இக் கூப்பனை அனுப்புக.

**ஏர்-இந்தியா** அ∴பினிடி க்ரூப் பயணத் திட்டம் பற்றிய இலவசத் தகவலேடுகளை எனக்கு அனுப்புக.

பெயர் ..................................................

எதன் உறுப்பினர் ..................................................

முகவரி .................................................. TAM.

இருக்கிறேன். அது ஒரு எந்திர வாழ்க்கைதான் என்றாலும், அதிலிருந்து மீளமுடியாதது என்பதையும் உணருகிறேன். பெங்களூரிலே வாழ்ந்த அந்த எந்திர வாழ்க்கையிலே ஒரு சலிப்பு ஏற்பட்டமாதிரி இருக்கு. அதுக்காக கிராமத்துக்கே வந்துடவும் எனக்கு முகம் கிடையாது. அதனாலெ, இதே வாழ்க்கையை வேறே இடத்திலே வாழ்ந்து பாக்கப் போறேன். பம்பாய்ப் பக்கம் போக எண்ணம்.

''அம்மாவையும் அண்ணனையும் நல்லபடி கவனிச்சுக்குங்க''.

கடிதத்தைப் படித்து முடித்த அழகப்பர், வேலப்பன் தன்னோடு இருப்பதைப் போலவும், விலகிச் செல்வதையும் ஒருசேர உணர்ந்தார்.

கடிதம் வராமல் இருந்திருந்தால், அவன் வருவான் என்ற நம்பிக்கையாவது இருந்திருக்கும். இப்பொழுது, அந்த நம்பிக்கை கூட ஊசலாட ஆரம்பித்து விட்டது. அதோடு, தன் உயிரும் ஊசலாடுவதை உணர்ந்தார் அவர். எனவே, உடனடியாக உயிலை எழுதி முடித்துவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டார். எனினும், அந்த முடிவைக் காமாட்சியிடம் சொல்ல அவருக்கு மனமில்லை. வக்கீலைப் பார்க்க டவுனுக்குப் போக நினைத்தார். காமாட்சியிடம், என்ன காரணம் சொல்வது என்று தெரியாமலே,

''காமாச்சி—அந்தச் சொக்காயையும், மணிபர்சையும் எடு'' என்றார்.

''அப்பாடி — இன்னிக்காவது, டாக்டருகிட்டெ போகனும்னு உங்களுக்குப் பட்டுதே் ....இந்தக் காலத்துலெ மாரடைப்பு ஒரு பெரிய நோவா? மருந்து சாப்புட்டா சரியாப் போயிடுது......சரி சரி பஸ் வர்ற நேரம். சீக்கிரமாய் போயிட்டு வாங்க'' என்று சொல்லிக்கொண்டே சட்டையையும், பர்சையும் கொண்டுவந்து கொடுத்தாள் காமாட்சி. டாக்டரிடம் போகலாம் என்ற 'சாக்கு' அவருக்கு வலியக் கிடைத்தது.

பஸ்ஸில் உட்கார்ந்துகொண்டு உயிலை எப்படி எழுதலாம் என்ற நினைவிலேயே மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தார் அவர். ''எனக்குப் பிறகு, வருமானத்தை மூணுக்கனும். ஒரு பாகம் காமாட்சிக்கு...... ஒருபாகம் பெரியவனுக்கு.... ஒருபாகம்.... ஆமா, அதை வருஷா வருஷம் பேங்கியிலே போட்டு வைக்கணும்...... சின்னவன் வந்தா திருப்பிக் கொடுத்துடணும்.... இல்லேனா அது, பள்ளிக்கூடம் கட்டறது மாதிரி நல்ல தர்மத்துக்குப் பயன்படணும்'' என்ற முடிவே அவருக்குப் பிடித்திருந்தது. வக்கிலிடம் தன் விருப்பத்தை வெளியிட்டார். அவருடைய விருப்பமும், சட்டமும் இணைந்து போகிற மாதிரி உயில் தயாரிக்கப்பட்டது. டவுனுக்கு அவர் வந்த வேலை முடிந்தது. கிராமத்துக்குப் புறப்பட நினைத்தார்.

கிராமத்தை நினைத்தவுடனேயே காமாட்சியின் நினைவும் வந்தது. ''ஆமா, நாம பாட்டுக்குச் சும்மா போனா அவ கொடஞ்சி எடுத்துப்புடுவாளே ....அவளுக்குச் சமாதானம் சொல்லுறதுக்காவது மருந்து வாங்கிக்கணும்'' என்று ஒரு டாக்டரிடம் சென்றார். டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தைக் கடையில் வாங்கிப் பையில் போடும் போது, ''ஆமா, மருந்தாலே தீர்ற நோவா எனக்கு?'' எனச் சலித்துக் கொண்டார்.

வீட்டிற்கு வந்ததும், அவசர அவசரமாக, மடியில் வைத்திருந்த உயிலை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டினர். மாத்திரைப் பொட்டலத்தை எடுத்து வீசி எறிந்தார். அப்போது முத்தப்பன் வந்தான். ''அப்பா, தம்பி இங்கே இருந்தப்ப கோயமுத்தூருக்குக் கடுதாசி எழுதியிருப்பானுட்டம்



# பூச்சி தாக்காப் புதிய நெல்



அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், தத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் தன்மை, சன்னமான அரிசி ஆகியவைகள் ஐ. ஆர். 24 ரக நெல்லின் சிறப்புக் குணங்களாகும். இந்த ரகத்தை, பிலிப்பைன்ஸ் நாட்டில் 'லாஸ்பேனஸ்' என்ற இடத்தில் உள்ள அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி வெளியிட்டுள்ளது.

'அதிசய நெல்' என்று புகழ்பெற்ற ஐ. ஆர். 8 ரகத்தைவிட ஐ. ஆர். 24 ரகம் பலவகைகளில் சிறந்தது. ஐ. ஆர். 8 ரகத்தின் அரிசி பருமனாகவும், அரைவையில் உடையக் கூடியதாகவும் இருந்ததுடன், பலரால் விரும்பி உண்ணப்படாமலும் இருந்தது. ஐ. ஆர். 24 ரகத்தின் அரிசி நீண்டும் சன்னமாகவும் இருக்கிறது; அரைவையில் உடையாது. தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் மக்களால் விரும்பப்படும் சமையற் குணங்களைக் கொண்டுள்ளது. இந்த ரகம் உயர் விளைச்சல் தருவதுடன், பூச்சிகளால் தாக்கப்படாத தன்மையையும் கொண்டுள்ளது.

ஆசிய பசுமைப் புரட்சிக்கு மூலகாரணமாக விளங்கும் அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பயிர் உற்பத்தியாளர்கள் தற்பொழுது பூச்சி நோய்களினால் தாக்கப்படாத புதிய ரகங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், நெல் தத்துப் பூச்சியால் பாதிக்கப்படாத ரகத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்று வருகிறார்கள். அத்தகைய ரகங்களில் ஒன்று ஐ. ஆர். 24.

அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையத்தின் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த கண்டுபிடிப்பு, புல் போல் மெலியும் வியாதியால் (Grassy stunt disease) பாதிக்கப்படாத நெற்பயிர்களை உருவாக்கியுள்ளதாகும். இவ்வியாதி நெற்பயிர்களைத் தாக்கினால் பயிர்கள் வலிவிழந்து, மெலிந்து புல் தூர்களைப் போல் அடர்த்தியாகக் காணப்படும். ஐ. ஆர். (International Rice) ரகங்களையும், மத்திய இந்தியாவில் அமோகமாகக் காணப்படும் ஒருவகைக் காட்டு நெல்லையும் கரு இணைப்புச் செய்து, மேற்கூறிய வியாதி தாக்காத ரகங்களை உருவாக்கியிருப்பது மிகவும் பாராட்டிற்குரிய செயலாகும்.

இருக்கு. அட்ரசு சரியில்லாததனாலே, எங்கெங்கேயோ சுத்திட்டு, பதில் கடிதாசி இப்பத்தான் வந்திருக்கு.''

''என்னப்பா விஷயம்?''

''நம்ம தோட்டத்துலெ வேலு வீணாக்கிப்புட்ட அரை ஏக்கரா நிலத்து மண்ணை அவன் அனுப்பிச்சு, என்ன செய்யறதுன்னு கேட்டு எழுதியிருக்கான்........... அந்தக் களர் மண்ணு...... இன்னும் மூணு வருஷத்துக்கு அப்படியே விட்டு வைச்சா, சரியாப் போயிடுமாம்''

அந்தக் களர் நிலத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் வேலப்பனை நினைத்துக்கொள்வார் அழகப்பர். ''அந்த மண்ணாட்டமே மகனும் பயனில்

**சின்னஞ்சிறு குடியரசு**

உலகிலேயே மிகச் சிறிய குடியரசு எது தெரியுமா? இத்தாலி நாட்டை யொட்டியுள்ள 'சான் மரினோ' என்ற நாடுதான். இதன் மக்கள் தொகை 20,000 பேருக்கும் குறைவு.

மிகப் பெரிய மக்கள் தொகையுள்ள நாடு–சீனா. மக்கள் தொகை 70 கோடி.


லாமப் போயிட்டானே'' என்று எத்தனையோ நாட்கள் கலங்கியிருக்கிறார். எனவே, ஒரு விதமான ஆவேசத்துடன்,

''என்னா? மண் நல்லாயிடுமா? அப்ப மவனும்.. ......''என்று அவர் வாய் விட்டுக் கூவியது முத்துவுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. ஆனாலும், தந்தையின் முகத்தில் ஒரு நம்பிக்கை ஒளி படர்வதைப் பார்க்க முடிந்தது அவனால்.

அழகப்பர் உரக்கக் கூவினார்: ''காமாட்சீ! இங்கேவா...... டாக்டரு நோய் சரியாயிடும்னு சொல்லிட்டாரு....... ஆனா வாங்கியாந்த மருந்துப் பொட்டலம், இங்கே எங்கயோ விழுந்துடிச்சி.......தேடு.. தேடு....'......'



காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம்-வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள் தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, ௨. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.
குமார




''நீங்கள் தேர்வு எழுதவேண்டுமானால் உங்களுடைய 'கிருதாக்களின்' நீளம் குறையவேண்டும். அதாவது மிகக் குறைவாக அமையவேண்டும். அதுமட்டுமல்ல. உங்களுடைய மீசைகளை எடுத்து விடவேண்டும்.''

மாணவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னால் என்ன நடக்கும்?

மறுநாள் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடக்கும். உரிமைக் குரல் கிளம்பும். தேர்வு ஒத்தி வைக்கப்படும். கல்லூரி கால வரையின்றி மூடப்படும்.

இப்படித்தான் நாம் நினைப்போம்!

ஆனால், ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று மாணவர்கள் அப்படியே நடந்து கொண்டனர்.

இந்த அதிசயம் எங்கே நடந்தது என்று திகைக்கிறீர்களா?

ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் இந்த அதிசய நிகழ்ச்சி நடந்தது, சென்னையில்தான்.




அடையாற்றிலுள்ள சமையல் இயல் தொழில்நுட்பக் கல்லூரியில்தான் இந்த அதிசயம் நிகழ்ந்தது.

ஏன் இந்தக் கல்லூரியில் மட்டும் மாணவர்களின் மீசை, கிருதாக்களை எடுக்கச் சொன்னார்கள்?

நடைமுறைப் பயிற்சித் தேர்வுகளின்போது வெளிநாட்டவர்வருவார்களாம். அவர்கள் விரும்பும் வகையில் தோற்றம் அமைய வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யச் சொல்கிறார்களாம்.

இன்னொரு காரணமும் சொல்கிறார்கள். முகத்தில் அதிக அளவில் முடியிருப்பது சமைக்கும் பொழுதும் பரிமாறும் பொழுதும் இடையூறாக அமைந்துவிடுமோ என்ற அச்சமாம்.

என்ன காரணமாக இருக்கட்டுமே; மாணவர்கள் அத்தனை பேரும் இதை ஏற்றுக்கொண்டு விட்டார்களா?

அப்படிச் சொல்லமுடியாது

முதலாண்டு மாணவர்களில் தான் 90 சதவீதம் மீசைகளையும் கிருதாக்களையும் பறி கொடுத்தார்கள்.

பத்து சதவீதத்தினர் அளவைக் குறைத்துக் கொண்டார்கள்.

இரண்டாவது ஆண்டு படிக்கும் மாணவர்களில் 50 சதவீதம் இப்படி, 50 சதவீதம் அப்படி.

மூன்றாம் ஆண்டு மாணவர்கள் எப்படி?

மூச்! அவர்கள் வழக்கப்படி—அவர்கள்தான் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொள்கிறார்களே! பயமேன்?

—பறவை

# 'இந்தியாவுக்கு வழி' பாடிய வால்ட்டர் விட்மன்

ஜனநாயகத்தைப் பாடிய முதல் கவிஞர் விட்மன். அமெரிக்க நாட்டினரான இவரை வால்ட்டர் விட்மன் என்று பலர் கூறுகின்றனர். '' புல்லின் இதழ்கள் '' என்ற கவிதைத் தொகுப்பிலே

'' ஜனநாயகமே, உனக்கே
இவை என்னிடமிருந்து,
என் ஆரணங்கே, உனக்கு
ஊழியம் செய்ய,
உனக்காக, உனக்காகவே
நான்
இந்தப்பாடல்களைப்பாடு
கின்றேன். ''

என்று எழுதியிருந்தார் விட்மன். ஜனநாயகத்தில் மனிதனுக்கு இருக்கும் சமத்துவம்—இதுவே அக்கவிஞரின் வாழ்க்கைக் குறிக்கோள்—இதனை அழகுற வடித்திருக்கிறார் கவிஞர் தமது சொல்லோவியத்திலே. அமெரிக்காவின் வலிமைக்கு ஆதாரம் அமெரிக்க மக்களே என்று நம்பியவர் விட்மன். நாட்டின் பண்பு அறிந்து பாடும் பண்புடையவரே கவிஞர் என்பது அவர் துணிபு.

ஜனநாயக சமுதாயத்திலே காணப்படும் சமத்துவத்தில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தாலும் எந்தச் சமுதாயத்திலுமுள்ள தளைகளை எதிர்த்துப் போராடத் தனி நபருக்கு இருக்கும் உரிமையிலும் அவருக்கு நம்பிக்கை உண்டு. தம் கவிதைகளில் மனிதனின் பண்புக்கு ஏற்றம் தந்தார். சுதந்திர மக்கள் கொண்ட ஒரு நாடு என்று அமெரிக்காவைச் சித்திரித்தார்.

'' புல்லின் இதழ்கள் '' தான் அவருடைய தலை சிறந்த படைப்பு. தன்னையே பாமர அமெரிக்கனாகப் பாவித்து, அந்த முறையிலே அமெரிக்காவைச் சித்திரிக்க முயன்றார், இந்தக் கவிதையிலே.

வால்ட்டர் விட்மன் 1819ஆம் ஆண்டு மே 31ஆம் தேதி நியூயார்க் மாநிலத்திலே லாங் ஐலண்டு தீவில் வெஸ்ட்ஹில்ஸ் பண்ணை ஒன்றில் பிறந்தார். புருக்லின் நகரில் வளர்ந்து வந்தார். சிறுவனாக இருக்கையில் பொதுப்பள்ளிக்கூடங்களில் படித்தார். இடைவிடாமல் வாசிப்பது அவர் வழக்கம். கோயிலுக்கும் தவறாமல் ஒழுங்காகச் சென்று வருவார்.

இளைஞர் விட்மன் அச்சகத்தில் வேலை செய்தார். பத்திரிகை நிருபராகவும், பள்ளி ஆசிரியராகவும் வேலை பார்த்தார். 1839 முதல் 1848 வரை புருக்லீன் நகரிலும் நியூயார்க் நகரிலும் பல்வேறு செய்தித்தாள்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இந்தக் காலத்தில் அவர் எழுதியதெல்லாம் உரைநடைதான். ஃபிராங்க்ளின் இவான்ஸ் என்ற நாவல் 1842-ல் தோன்றியது. மிதக்குடியை ஆதரித்து எழுதிய நாவல் இது.

1846—1855 ஆண்டுகளில் விட்மன் சிந்தனை, உணர்ச்சி, எழுத்து, ஆகியவற்றை மாற்றிய ஏதோவொன்று நிகழ்ந்தது. இந்த மாறுதல் அவரை முற்றிலும் மாறான ஆனால் மாபெரும் கவிஞராக மாற்றியது.

## புதுப்பெயர்

புது விட்மன், புல்லின் இதழ்கள் என்ற நூலின் முதல் பதிப்பில் தெளிவாகக் காட்சியளிக்கிறார். 1855-ல் வெளியான இந்த நூல் இன்னும் அவருடைய முக்கியப் படைப்பு என்றே மதிக்கப்படுகிறது. புது விட்மனுக்குப் புதிய பெயர் ஒன்றும் கிடைத்தது. அதுதான் வால்ட் விட்மன்!

'' புல்லின் இதழ்கள் '' விட்மன் முன்னர் எழுதிய கவிதைகளிலிருந்து மாறுபட்டதாகும். எதுகை, மோனை, சந்தம் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டார். மக்களின் மரபுப்படியான எளிய சொற்களிலே வாழ்க்கையைச் சித்திரித்தார் கவிஞர் விட்மன்.

''புல்லின் இதழ்கள்'' முதலில் தோன்றியபோது, இலக்கியத் திறனாய்வாளர்களுக்கு அது பிடிக்கவில்லை. '' விந்தையான கவிதை '' என்றனர்; என்றாலும் இன்று அதனை வாசிப்பவர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா? விட்மனின் கவிதை புனையும் ஆற்றலை, கவிதை எழுதும் புதிய வழியைத் தோற்றுவித்தது இந்நூல் என்கின்றனர். '' புல்லின் இதழ்கள்'' மனிதனின் வாழ்க்கையை, ஒரு நாடு முதிர்ச்சி அடைவதை மனிதனின் இளமை நீங்கி முதுமை அடைவதைச் சித்திரிக்கிறது.

புது விட்மன் தோன்ற பல சக்திகள் வேலை செய்தன. தாமே முதிர்ச்சி அடைந்துவிட்டதாகவும், தமது கவிதை

வால்ட்டர் விட்மன்



கள் தமது 36 ஆண்டு அனுபவங்களை விளம்புகின்றன என்றும் நம்பினார், அவர். தவிரவும், அவர் ஷேக்ஸ்பியர் படைப்புகளையும் நூலையும் விரிவாகப் படித்து வந்ததன் காரணமாக அவருடைய கவிதை புனையும் பாணியே மாறிவிட்டது. அமெரிக்க எழுத்தாளர்களை, முக்கியமாக தோரோ, லாவெல்த் எமர்ஸன் ஆகியோரைப் பின்பற்றி விட்மன் '' கட்டுக் கோப்பில்லாத '' கவிதைகள் எழுதலானார்.

கருத்துக்களை உருவாக்குவதில் எமர்ஸனுடைய எழுத்தோவியங்கள் விட்மனிடம் நிலையான செல்வாக்குப் பெற்றிருந்தன. அமெரிக்கர்கள் சுதந்திரமாகவும் தன்னிறைவுடனும் இருந்தால்தான் அவர்கள் சொந்தமாகச் சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாக இருப்பர், ஜனநாயக மரபினையொட்டி வாழ்வர் என்று எமர்ஸன் கருதி வந்தார். இதனை அப்படியே ஏற்றுக் கொண்டார் விட்மன். '' நான் கொதித்தெழுந்தேன். எமர்ஸன் என்னைப் பொங்கச் செய்தார்'' என்றார்.

'' சுயகீதம் '' என்ற நீண்ட கவிதை ஒன்றிலே தனி நபரின் ஜனநாயக மரபு பற்றி எமர்ஸன் கொண்டிருந்த கருத்தினை விட்மன் பெருமைப்படுத்தினார். முழுக்க முழுக்க ஜனநாயகத்தைப் பாடும் கவிதை இது; இது மாதிரி ஒருக்காலும் எழுதப்படவில்லை என்று அது போற்றப்பட்டது. ஒவ்வொரு மனிதனையும் அவர் தானாகவே பாவித்துப் பாடினார்.

### கலங்கினார்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861—1865) அவரை மிகவும் கலக்கிவிட்டது. 1862-ஆம் ஆண்டு முதல் அவர் பல்வேறு மருத்துவமனைகளிலும் இராணுவ முகாம்களிலும் பணியாற்றினார். இருதரப்புப் போர் வீரர்களுக்கும் அவர் உதவி செய்தார்.

விட்மனின் மிகச் சிறந்த கவிதைகளில் சில, அவருடைய போர்க்காலத்து அனுபவங்களிலிருந்து தோன்றியவையாகும். '' டிரம் டாப்ஸ் '' என்ற ஒரு நூலில் இந்தக் கவிதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டன. 1864-ல் இது முதலில் வெளிவந்தது. இந்தத் தொகுப்பில் இரண்டு கவிதைகள் பெரும் புகழடைந்தவையாகும்.

''ஓ காப்டன்—மை காப்டன்'', '' வென் லாக்ஸ் லாஸ்ட் இந் தி டோர்யார்டு புரூம்ட் '' என்ற இந்த இரு கவிதைகள் அதிபர் ஆபிரகாம் லிங்கனின் மறைவைக் குறித்து எழுதியவையாகும். லிங்கனை விட்மன் மிகவும் வியந்து போற்றி வந்தார்.

**'மாணவர் அரங்கம்' என்ற புதிய பகுதி மாணவர்களுக்காக இந்த இதழிலிருந்து தொடங்கப் படுகிறது.**

இப்பகுதியில் மாணவர்கள் பங்கு பெறலாம்.

கல்லூரிகள் அனைத்தும் திறந்தவுடன் மாணவர்களுக்குப் போட்டி ஒன்று நடத்தப்படும். இதற்கான அறிவிப்பு மிக விரைவில் வெளிவரும்.

இப்பகுதிக்கு எழுதும் மாணவர்கள் அஞ்சல் உறையிலும் தங்கள் எழுத்தோவியங்களின் தலைப்பிலும் 'மாணவர் அரங்கம், என்று குறிப்பிடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

எழுத்தோவியங்கள் அனைத்தையும் அஞ்சலிலேயே அனுப்ப வேண்டும். வெளியிட இயலாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. அனுப்பும்பொழுதே ஒரு படி எடுத்துக் கொள்வது நல்லது.

1873-ஆம் ஆண்டில் வாஷிங்டனில் வேலை செய்து கொண்டிருக்கையில் திடீரென்று முடக்கு வாதம் கண்டது. இதனால் அவர் பாதி முடமானார். நியூயார்க் நகரிலிருந்து வெளியேறி நியூ ஜெர்ஸி மாநிலத்திலே காம்டன் நகருக்கு வந்து தமது வாழ்நாள் இறுதிவரை வசித்தார். அங்குதான் தமது 73-வது வயதில் 1892-ஆம் ஆண்டில் காலமானார்.

தமது கடைசி ஆண்டுகளிலும்கூட இன்னொரு மாறுதல் வால்ட் விட்மனிடம் காணப்பட்டது. தமது கவிதைக்கு அவர் புதிய கோட்பாடுகளை உருவாக்கியிருந்தார். அவை யாவன: குறிக்கோள் நெறி, நாட்டுணர்ச்சி, அனைத்துலக உணர்ச்சி. அவருடைய எழுத்தோவியங்கள் ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் உருவானவை; அமைதியானவை.

மனிதனின் சார்புநிலை அவருடைய சிந்தனையில் முக்கிய இடம் பெற்றது. குறிப்பாக '' பாஸேஜ் டு இந்தியா '' (இந்தியாவுக்கு வழி) என்ற கவிதையில் இது எதிரொலிக்கிறது.

இந்தக் கவிஞரின் மாபெரும் குறிக்கோள் நெறியிலே பிரிட்டிஷ் நாவலாசிரியர் இ.எம். ஃபார்ஸ்ட்டர் மிகவும் ஈடுபட்டவராகி, தமது தலைசிறந்த படைப்புக்கு ''ஏ பாஸேஜ் டு இந்தியா '' என்ற பெயரையே சூட்டினார். விட்மன் கவிதையின் பெயர் இது.

**அடுத்த இதழில்தான் 'பொன்மொழியார்' வருகிறார்!**









ஆளுநர் பதவிக்காலம் முடிவுற்று தம்மூர் செல்லும் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களுக்கும் சர்தார்ணி உஜ்ஜல்சிங் அவர்களுக்கும் சென்னையில் சிறப்பான வழியனுப்பு விழா நடைபெற்றது.

அரசு நடத்திய வழியனுப்பு விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு அரசின் சார்பில் நினைவுக் கேடயம் ஒன்றினை அளித்தார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து புறப்படும் முன்னர் ஆளுநர் அவர்கள் அண்ணா சதுக்கம் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

விடை பெற்றுச் செல்லும் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

"தமிழ் நாட்டின் மக்களின் அறிவாற்றலும் ஒழுக்கமும் கடின உழைப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டன. எல்லாத் துறைகளிலும் இம்மாநிலம் மேலும் முன்னேறி சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கையை இந்த நற்பண்புகள் வளர்க்கின்றன.

"முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒரே அரசியல் கட்சியின் அமைச்சரவைகள் அடுத்தடுத்துப் பணியாற்றி வந்துள்ளன. இம்மாநிலம் தொடர்ச்சியாக நிலையான திறமை வாய்ந்த நிர்வாகத்தைப் பெற்று வந்திருக்கிறது. இவை எல்லாம் பெருமிதம் அளிக்கும் செய்திகளாகும்."



# தமிழ்நாட்டின் புதிய ஆளுநர்

நமது புதிய ஆளுநரின் முழுப் பெயர் திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா என்பதாகும். மராட்டிய மாநிலத்திலுள்ள கோலாபா மாவட்டத்திலுள்ள காரிகான் என்ற இடத்தில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள் பிறந்தார். குஜராத் கல்லூரியிலும், புனா புதுக் கல்லூரியிலும் பயின்று பி.ஏ., எல்.எல்.பி., பட்டம் பெற்றார்.

பின்னர் பம்பாயில் சாந்தா குரூஸ் என்ற இடத்திலுள்ள போடார் உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1934-ஆம் ஆண்டில் சட்டம் பயின்று சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். புகழ் வாய்ந்த வழக்குகளான செம்பூர் கொலை வழக்கு, நஜினா மஸ்ஜித் கலக வழக்கு ஆகியவற்றை எடுத்து நடத்தினார்.

திரு. ஷா அவர்கள் தனது இருபத்து இரண்டாவது வயதில் தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதன் காரணமாக 1932-ல் சிறை புகுந்தார். பின்னர் 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட காரணத்தினால் மறுபடியும் கைது செய்யப்பட்டார்.

பம்பாய் மாநிலக் காங்கிரஸ் குழுவின் பொதுச்செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1955-ஆம் ஆண்டிலிருந்து 1957 வரை அதனுடைய துணைத் தலைவராக இருந்த திரு. ஷா 1960-ஆம் ஆண்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1962-63-ல் அவர் அனைத்திந்தியக் காங்கிரசு இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தார். பரோடா சமஸ்தானத்தைப் பம்பாய் மாநிலத்துடன் இணைக்கின்ற பணியில் அவர் ஏற்றுக்கொண்ட பங்கு குறிப்பிடத்தகுந்த இடத்தை வகிக்கின்றது.

பின்னர் 1948-ஆம் ஆண்டு அவர், பரோடா மன்னருக்குச் சட்ட ஆலோசகராகச் சேர்ந்தார். பல ஆண்டுகள் பம்பாய் மாநகராட்சி உறுப்பினராக இருந்த திரு. கே. கே. ஷா 1952-ம் ஆண்டு பம்பாய் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ஆம் ஆண்டிலும் பின்னர் 1966 ஏப்ரலிலும் மாநிலங்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. ஷா பல்வேறு கல்வி, கலாச்சார, சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு இருந்தார். பம்பாய், பரோடா பல்கலைக் கழகங்களில் செனட், பம்பாய் மாநிலப் பஞ்ச நிவாரணக்குழு, சயாஜிரா வைர விழா நினைவு அறநிலையம் ஆகியவை முக்கியமானவைகள். இவர் இந்தோ-அரேபிய சங்கம், பிரிகேட் பாரத்ய சமாஜ் ஆகியவற்றின் தலைவராகவும் சர்வ தேசக் கழகம், ஜவுளி நிறுவனக் குழு ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 1962-ஆம் ஆண்டு வரையிலும் மத்திய குடி மக்கள் குழுவுடன் தொடர்பு கொண்டிருந்த திரு. ஷா 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அதன் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1962-ல் பம்பாயில், வழிகாட்டும் நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கிய திரு. ஷா தொடர்ந்து அதன் தலைவராக இருந்து வருகின்றார். ஆயுள் காப்பு நிறுவனத்தின் முதல்தர ஊழியர்களின் சங்கம், இந்திய எண்ணெய்க் கார்ப்பரேசன் பணியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

திரு. ஷா பல்வேறு வெளி நாட்டுப் பயணங்களை மேற்கொண்டு இருக்கின்றார். ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று வந்து இருக்கின்றார். 1964-ஆம் வருடம் லண்டன் மாநகரில் நடந்த, தென்னாப் பிரிக்கப் பொருள் உதவி மாநாட்டிற்குச் சென்ற இந்தியத் தூதுக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றினார். 1965-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் தகராறின் போது ஹெம்காரன் பகுதியைச் சுற்றிப் பார்த்த திரு. ஷா அகதிகளின் மறுவாழ்வில் தனி அக்கறை எடுத்துக் கொண்டார்.

திரு. ஷா 1944-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் நாள், திருமதி மதுபென் ஷா அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். அவர்களுக்கு இரண்டு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் இருக்கின்றார்கள்.

கே. கே. ஷா அவர்களின் பொழுதுபோக்கு கிரிக்கெட், டென்னிஸ், நீந்துதல், குதிரைச் சவாரி முதலியன.




விவசாயத்தில் பின் தங்கியிருந்த செங்கை மாவட்டம், பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ், அமோக விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

| | 1967–71 | 1966–67 |
|---|---|---|
| அமோக விளைச்சல் தரும் நெல் சாகுபடி | 9,57,216 ஏக்கர்கள். | 79,993 ஏக்கர்கள். |
| விளைச்சல் .. .. .. | 14·35 இலட்சம் டன். | 1.20 இலட்சம் டன். |

இது கடந்த நான்காண்டுகளில் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட வியத்தகு சாதனையாகும்.

* * *

| | 1967–71 | 1966–67 |
|---|---|---|
| நிலப்பட்டா பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை. | 16,992 | 1,163 |
| வீட்டு மனைப் பட்டா பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை. | 25,215 | 1,630 |
| கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள். | 159 | .. |

இத்துடன், 42,000 நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு 16–5–1971 அன்று செங்கை மாவட்டத்தில் தமிழக முதல்வர் நிலப்பட்டாக்களையும் வீட்டு மனைப் பட்டாக்களையும் வழங்கினர்.



கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் இந்தியாவிலேயே முதல் முதலாக முன்னோடியாகச் செங்கை மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அகரம் கிராமத்தில் 14–10–1970 அன்று துவக்கி வைக்கப்பட்டது. செங்கை மாவட்டத்தில் இதுவரை 159 கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

* * *

தமிழகத்திலேயே எல்லாக் கிராமங்களுக்கும், அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின் வசதிசெய்து கொடுத்துத் தனிப் பெருமையைத் தட்டிக் கொண்டுள்ளது செங்கை மாவட்டம்.

இதுவரையில் 56,522 விசையேற்றங்களுக்கு மின் சக்தி இணைப்பு செய்யப்பட்டுள்ளது.



| | 1960-67 | 1967-71 |
|---|---|---|
| மின்வசதி பெற்ற கிராமங்களும் குக் கிராமங்களும். | 1,716 | 3,353 |
| மின் இணைப்புப் பெற்ற கிணறுகள். | 20,089 | 36,433 |

செங்கை மாவட்டத்தில் ஊரெல்லாம் ஒளிமயமாகி விட்டது.

* * *

## விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை

| | 1966-67 | 1967-71 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| விதை உரம் வாங்க .. | 81,335 | 5,96,89,744 |
| கிணறு வாரகம் .. | 8,97,850 | 3,08,16,230 |
| பம்பு செட்டுகள் வாங்க | 12,77,600 | 2,15,78,655 |
| மொத்தம் .. | 22,56,785 | 11,20,84,629 |

தமிழகத்தில் மலர்ந்து வரும் பசுமைப்புரட்சி—அதன் விளைவாக உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்று வருகின்ற ஒரு நிலை—இதற்கெல்லாம் உழவர் பெருமக்களுக்கு வாரிவழங்கிய வசதிகளே மிக முக்கியமான காரணமாகும்.



## விவசாயிகளுக்குக் கடன்கள் விவசாய மறுநிதிக் கழகம் மூலமாக

| | 1967-71 | 1960 67 |
|---|---|---|
| வழங்கப்பட்ட கடன் | ரூ. 19,10,900 | |
| பம்பு செட்டுகள் .. | 259 | .. |
| இரசாயன உரங்கள் | 39,796 டன்கள். | 20,040 டன்கள். |

## குடிசைவாழ் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம்

அரும்புப் பருவத்திலே உள்ள குழந்தைகள், ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டால்தான் ஒளி மிகுந்த எதிர்காலத்தை நாட்டிற்கு அளிக்கின்ற ஒப்பற்ற மேதைகளாக அவர்கள் திகழ முடியும். விளையும் பயிர்களை நல்ல வளமான பயிர்களாக விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு, பள்ளி செல்லாத ஆறு மாதம் முதல் மூன்று வயதிற்கு மேற்படாத குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தினை, முதன் முறையாக அக்டோபர் 1970-ல் சென்னை நகரக் குடிசைப் பகுதிகளில் அமுலுக்குக் கொண்டு வந்தது. இத்திட்டம் செங்கற்பட்டு, மதுரை, திருச்சி, கோவை முதலிய மாவட்டங்களிலும் இப்பொழுது அமுலாக்கப்பட்டுள்ளது.





செங்கற்பட்டு மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள சென்னை நகரை ஒட்டிய பகுதிகளில் இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 20,000 குடிசைவாழ் குழந்தைகள் பயனடைந்து வருகின்றார்கள்.

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம்.

மாதவரம் ஊராட்சி ஒன்றியம்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்.




தாம்பரம் நகராட்சி.
பல்லவபுரம் நகராட்சி.
திருவொற்றியூர் நகராட்சி.
மாதவரம் நகராட்சி.
கத்திவாக்கம் நகராட்சி.
அம்பத்தூர் நகராட்சி.
ஆலந்தூர் நகராட்சி.
ஆவடி நகராட்சி.

ஓர் ஆண்டில் 250 நாட்களுக்கு ஒரு குழந்தைக்கு 23½ காசுகள் (பைசா) என்ற விகிதத்தில் ரூ. 11,75,000 செங்கை மாவட்டத்தில் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் 75 கிராம் எடையுள்ள புரதச் சத்து நிறைந்த ''மாடர்ன் ரொட்டி'' மூன்று துண்டுகளாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இச்சத்துணவுத் திட்டம் 100 மையங்களில், மையம் ஒன்றுக்கு 200 குழந்தைகள் வீதம் அமுல் செய்யப்பட்டுள்ளது. கூடுமானவரை, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ரொட்டியினை அந்த மையங்களிலே ஊட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரொட்டி பெற்றுக்கொள்ள வராத சில குழந்தைகளின் ரொட்டிகள் அடையாளச் சீட்டில்லாத வேறு ஏழைக் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.


காலாண்டிற்கு ஒரு முறை குழந்தைகளின் உடல்நிலை முன்னேற்றம், மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு அடையாளச் சீட்டில் கடைசிப் பக்கத்தில் குறிக்கப்படும்.

மகளிர் மன்றங்கள், ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி மாணவர் கிராம சேவைச் சங்கம், இந்திய மகளிர் மன்றம் முதலிய சமூக நலச் சங்கங்கள் மூலம் குடிசை வா குழந்தைகளுக்கு, மகப்பேறு இல்லங்கள், குடும்பக்கட்டுப்பாடு நிலையங்கள், மகளிர் மன்றங்கள்; பள்ளிகள், முதலிய இடங்களில் சத்துணவு பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன. 200 குழந்தைகள் கொண்ட ஒவ்வொரு மையத்திலும் கண்காணிப்பாளருக்கு மாதம் ரூ. 20, உதவியாளருக்கு ரூ. 10 என்ற விகிதத்தில் எல்லா மையங்களுக்கும் உதவித்தொகை அரசால் கொடுக்கப்படுகிறது.

ஏழை மக்களுக்குரிய இந்தத் திட்டத்தைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 16—5—71 அன்று தாம்பரத்தில் துவக்கி வைத்தார்கள்.

## பேரறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையம்

அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் 21—3—1969 அன்று உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழக அரசால் காஞ்சிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்திற்கான கட்டடம் சுமார் 5,00,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது.



# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்


**என் வயலில் சூரை என்ற வியாதி தாக்கியுள்ளதாக அக்கம் பக்கத்து வயலின் சொந்தக்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் எங்கள் கிராம சேவகர் மாவுப்பூச்சி தாக்கியுள்ளது என்று கூறி பாரத்தியான் தெளிக்கச் சொன்னார். இதில் எது சரி? முழு விவரமும் கூறும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

கருப்பன்,
திட்டக்குடி.

'சூரை' என்பது வியாதி அல்ல; மாவுப்பூச்சியினால் ஏற்படும் அழிவே 'சூரை' என்று சொல்லப்படுகிறது. மாவுப்பூச்சி தாக்கினால் பின் கண்ட அறிகுறிகள் காணப்படும்.

நெற்பயிரில், இங்குமங்குமாக திட்டுத்திட்டாகப் பயிர் குழிந்து காணப்படும். நாளடைவில் இது அதிகமாகிக் கொண்டே செல்லும். அதன் பின்பு, பயிர் எரிந்து அழிந்தது போன்று காணப்படும். தோகையைப் பிரித்துப் பார்த்தால், மாவால் மூடப்பட்ட முட்டை வடிவப் பூச்சிகளைக் காணலாம். பூச்சிகள் இல்லாவிட்டாலும் மாவு மட்டும் ஒட்டிக்கொண்டிருப்பதையாவது காணலாம். மாவுப்பூச்சி தாக்கிய பயிரிலிருந்து கதிர் வெளிவராமல், பதராகிக் குருத்துக்குள்ளேயே அமுங்கி இருக்கும்.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்பட்டால், அவை மாவுப்பூச்சியினால் ஏற்பட்டதே என்று முடிவு செய்து கொள்ளலாம். தாய்ப்பூச்சிகள் முட்டையிடுகின்றன. அதிலிருந்து வரும் குஞ்சுகள் பயிரின் சாற்றை உறிஞ்சி வாழுகின்றன. பயிரின் சாறு உறிஞ்சப்பட்டு விடுவதாலேயே மேற்கூறப்பட்ட சேதங்கள் ஏற்படுகின்றன. மாவுப்பூச்சி பாசன நீரில் மிதந்தும், ஊர்ந்தும் அடுத்தடுத்த இடங்களுக்குப் பரவுகின்றன. நெற்பயிர் இல்லா நிலையில் புற்களில் வாழுகின்றன.




நெல் மாவுப்பூச்சி

மாவுப்பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தக் கீழ்க்கண்ட கடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

வரப்புகளில் புற்கள் இல்லாமல் அறுத்துவிட வேண்டும். வயலில் குழிந்து காணப்படும் இடங்களில் உள்ள பயிர்களை எடுத்துத் தீயிட வேண்டும். ஐ.ஆர். 8, ஐ.ஆர்-5 போன்ற அடர்ந்து வளரும் பயிர்களில் இவை தங்க வசதியிருப்பதால், தீயிட்டு அழிப்பதே சிறந்தது. பாரத்தியான் மருந்தில் 200 முதல் 300 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பது மிகவும் ஏற்றது. மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த டி.டி.டி அல்லது என்ட்ரின் மருந்து பயனற்றது. மாவுப்பூச்சியை அழிக்கக் கையால் இயங்கும் தெளிப்பானை (ஸ்ப்ரேயர்) மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

**பெரியகுளம் பகுதியில் உருளைக் கிழங்கு பயிரிட முடியுமா?**

ராஜரத்தினம்,
பெரியகுளம்.

வெப்பம் குறைவாக உள்ள சமவெளிப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிரிட முடியும். பெரியகுளம் பகுதியில் வெப்பம் குறைவாக உள்ளது. அப்பகுதியில் உருளைக்கிழங்கை இரு பருவங்களில் பயிரிடலாம். வைகாசி முதல் ஆவணி முடிய முதல் பருவம். இப்பருவத்தில் விதைக் கிழங்குகளை விளைவிக்கலாம். புரட்டாசி—ஐப்பசி முதல் தை மாதம் வரை இரண்டாவது பருவமாகும். இப்பருவம் உருளைக்கிழங்கைப் பெருமளவில் விளைவிப்பதற்குச் சிறந்தது. ''கோ—சிம்லா ஹைபிரிடு ஹீட்'' என்ற ரகத்தைப் பயன்படுத்திப் பெரியகுளம் பகுதிகளிலும் உருளைக்கிழங்கு பயிரிட்டுப் பயனடையலாம்.

**தமிழரசு இதழில் உழவர்களுக்கான கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற பகுதியை இடைவிடாமல் படிப்பவன் நான். உழவர்களின் ஐயங்களை விளக்கித் தாங்கள் பதிலளிக்கும் அப்பகுதி என்னைப் போன்ற பல உழவர்களுக்கு உபயோகமாக உள்ளது. கீழ்க்கண்ட என் கேள்விகள் என்னுடைய தனிப்பட்ட கேள்வி அல்ல; என் போன்ற பல உழவர்களுடைய கேள்வியாகும். எனவே தயவு செய்து என் ஐயங்களைத் தீர்த்து வைக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

எங்கள் பகுதி கூட்டுறவுச் சங்கங்களில் இப்கோ காம்ப்ளெக்ஸ் உரம் என்று ஏதோ ஒன்றைக் கூட்டுறவு உரம் என்று சொல்லி விளம்பரப்படுத்துகிறார்கள். இப்கோ என்றால் என்ன? அது என்னென்ன உரங்கள் தயார் செய்கிறது? தொழிற்சாலை எங்கே உள்ளது? அதை ஏன் கூட்டுறவு உரம் என்று கூறுகிறார்கள்?

சோமசுந்தரம், மாமண்டூர்.

தங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகின்றோம். 'இப்கோ' என்றால் இந்திய உழவர் இரசாயன உரக் கூட்டுறவு (Indian Farmers Fertiliser Co-operative) என்று பொருள்படும். அந்த நிறுவனம் தயாரித்து வழங்கும் இரசாயன உரம் 'இப்கோ' உரம் என்று சொல்லப்படுகிறது. இந்தியக் கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமாக இந் நிறுவனம் இருப்பதால், இந்நிறுவன உரங்களைக் 'கூட்டுறவு உரம்' என்றும் கூறுகிறார்கள்.

'இப்கோ' நிறுவனத்தில் பஞ்சாப், உத்திரப் பிரதேசம், குஜராத், அரியானா, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், மைசூர், இராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய 10 மாநிலங்களிலுமுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் முதல் மாநில கூட்டுறவுச் சங்கங்கள் வரை பங்குதாரர்களாக உள்ளன. பத்து மாநிலங்களிலுமுள்ள கூட்டுறவு நிறுவனங்களின்மொத்தப் பங்குத் தொகை ரூபாய் 9 கோடியாகும். இதில், தமிழ்நாட்டின் பங்குத் தொகை ரூபாய் 50 லட்சமாகும். மத்தியஅரசுஇந்நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாக ரூபாய் 18 கோடியைக் கொடுத்துள்ளது. அமெரிக்க கூட்டுறவுச் சங்கங்களால் நிறுவப்பட்ட 'அனைத்து நாட்டு உரக் கூட்டுறவு' (Co-operative Fertiliser International) நிறுவனத்தின் உதவியுடனும், அமெரிக்க, இங்கிலாந்து அரசுகளின் அந்நியச் செலாவணி உதவியுடனும் சுமார் ரூபாய் 100 கோடி செலவில், குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்திற்கு அருகேயுள்ள 'கலோல்' (Kalol) என்ற இடத்தில் அமோனியா யூரியா தொழிற்சாலையும், காண்ட்லா (Kandla) துறைமுகத்தில் என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரத்தொழிற்சாலையும்அமைக்கப்பட்டுவருகிறது. அத்தொழிற்சாலைகள் 1973-ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியைத் தொடங்கும். எதிர்காலத்தில் தயாரிக்க இருக்கும் உரங்களைத் தற்பொழுது 'இப்கோ' நிறுவனம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து அறிமுக விற்பனைத் திட்டத்தின் (Seeding Programme) கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உழவர்களுக்கு வழங்கிவருகிறது.

'இப்கோ' நிறுவனம் தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து அடங்கிய 10 : 26 : 26, 12 : 32 : 16, 14 : 36 : 12 என்றுமூன்று வகை காம்ப்ளெக்ஸ் உரங்களையும், 46 சத தழைச் சத்துள்ள யூரியாவையும் வழங்கி வருகின்றது. இந்த உரங்களெல்லாம் தமிழ்நாட்டில் பயிராகும் நெல், கரும்பு, ராகி, மக்காச் சோளம், நிலக்கடலை, பருத்தி, உருளைக்கிழங்கு போன்ற எல்லாவகைப் பயிர்களுக்கும் ஏற்றதாகும்.

பயிருணவுச் சத்துக்களின் விலை அடிப்படையில் 'இப்கோ' உரங்கள் விலை மலிவானவை என்று கூறப்படுகின்றன. மற்ற காம்ப்ளெக்ஸ் உரங்களைக்காட்டிலும் 'இப்கோ' காம்ப்ளெக்ஸ் உரத்தில் அதிகப் பயிருணவுச் சத்துகள் உள்ளன. குறைந்தது 60 சதமும், உச்ச அளவாக 62 சதமும் மொத்தப் பயிருணவுச் சத்துக்கள் இருக்கின்றன.

நெற்பயிரில் குட்டையான ரகத்தில் மிகவும் குறைந்த வயது உடைய (அதாவது 80–90 நாட்கள்) ரகம் ஏதாவது இருக்கிறதா? எங்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கவும்! மேலும் வாடகை, கிரய அடிப்படையில் தவணையில் டிராக்டர் எங்குக் கிடைக்கும்? முன் பணம் எவ்வளவு கட்டவேண்டும்? எங்கு கட்டவேண்டும்? என்று தெரிவிக்கவும்.

துரை, வெள்ளிப்பாளையம்,

குட்டையான தன்மையும், 80 முதல் 90 நாள் வயதும் உடைய நெல் ரகங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஆனால் அதற்குரிய ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள குட்டையான ரகங்களில் மிகவும் குறைந்த வயது உடையது 'பாலா' (சி.ஆர். 42-38-173) என்ற ரகமேயாகும். இது ஒரிசா மாநிலத்தில் 'கட்டாக்' என்ற இடத்தில் உள்ள மைய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடித்து வெளியிடப்பட்டுள்ளது. இதன் வயது 95 நாட்கள். இதன் வயது சில இடங்களில் கால நிலைக்கேற்ப 110 நாட்களாகவும் உள்ளன. இந்த ரகம் தமிழ் நாட்டிற்கு ஏற்றதா என்பதை அறிய இது பற்றிய பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 95 நாட்களுக்குள் வயதுடைய ரகங்களை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தமிழ் நாட்டின் ஆராய்ச்சி நிலையங்களில் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ''பாலா'' என்ற ரகம் தமிழ் நாட்டிற்கு ஏற்றதா என்பது முடிவு செய்யப்பட்ட பின்பு அவ்விதைகளை வாங்க முயற்சி செய்யுங்கள்.

வாடகைக்கு டிராக்டர் வேண்டுமானால், எத்தனை ஏக்கர் உழ வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு உங்கள் பகுதி 'உதவி வேளாண்மைப் பொறியாளர் (தணிக்கை)' அவர்களுக்கு மனுச் செய்து கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து முன் பணம் கட்டச் சொல்லிக் கடிதம் வந்தால், அதன்பின் அந்த அலுவலகம் சென்று முன்பணம் கட்டுங்கள். இதற்கு உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியை நாடுதல் நல்லது.

ஓசூர் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்ய ஏக்கருக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—முத்துசாமி, ஓசூர்.

தருமபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு உருளைக்கிழங்கு விதைக்கிழங்கு வாங்குவதற்காக ரூபாய் 400, இரசாயன உரம் வாங்குவதற்காக ரூபாய் 300, பயிர்ப் பாதுகாப்புக்காக ரூபாய் 50, ஆக மொத்தம் ஏக்கருக்கு ரூபாய் 750 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. இக்கடன் பெற கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்கு மனு அனுப்ப வேண்டும்.



# மகளிர் பகுதி

ஆடை அலங்கார வகைகள் காலத்துக்குக் காலம் மாறி வருவது நாகரீகத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. ஆனால் நாம் உண்ணும் உணவு வகைகள் ஆடை நாகரீகம் போன்று அடியோடு மாறுவது கிடையாது. ஆனால், சுவைக்கு ஏற்பக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்கிறோம்.

உணவு வகைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் சத்துள்ள உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும். சமையல் முறைகளை ஆரோக்கியத்துக்கு ஏற்றவகையில் அமைக்க வேண்டும். அந்தக் கருத்துக்கு ஏற்பவே இங்கு உணவு வகைகளைச் செய்யும் முறைகள் விவரிக்கப்படுகின்றன.

இடையே இரண்டு இதழ்களில் இந்தப் பகுதி இடம் பெறவில்லை என்று எழுதியுள்ளார்கள். இனிமேல் இப்பகுதி தொடர்ந்து வெளிவரும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

## பயத்தம்பருப்பு கிச்சடி

பயத்தம்பருப்பு கிச்சடி தென் மாநிலங்களில் அதிக அளவில் வழக்கில் இல்லை. குஜராத், மராட்டியம் போன்ற மாநிலங்களில்தான் வழக்கில் உள்ளது.

எட்டுப் பேர்களுக்குத் தேவையான பயத்தம்பருப்புக் கிச்சடிக்குத் தேவையான பொருள்கள் விவரம்—

புலவு அரிசி—450 கிராம்.

பயத்தம் பருப்பு—225 கிராம்.

இலவங்கப்பட்டை—1சின்னத் துண்டு.

கிராம்பு, ஜாதிக்காய்—6.

நெய்—55 கிராம்.

வெங்காயம்—115 கிராம்.

மஞ்சள்பொடி—1 சிட்டிகை.

உப்பு—10 கிராம்.

### செய்யும் முறை:

அரிசியைக் கழுவி 15 நிமிடங்கள் வரை ஊற வைக்கவும்.

பருப்பை ½ மணி நேரம் ஊற வைக்கவும்.

நெய்யைச் சூடாக்கிப் பருப்பைப் போடவும்.

அரிசி, மற்றுமுள்ள பொருள்கள், உப்பு முதலியவற்றுடன் இரண்டு மடங்கு தண்ணீரை நன்றாகக் கலந்து அரிசி வேகும் வரை வேகவைக்கவும். தண்ணீர் அதிகமாக இருந்தால் வடிகட்டிக் கொள்ளவும்.

முழுவதுமாக வெங்காயத்தை நறுக்கிப் போடவும். பின்னர் சாப்பிடவும்.

## சாலட்

சாலட் செய்வது மிகவும் சுலபமானது.

தேவையான பொருள்கள்:—

கேரட்—225 கிராம்.

வெள்ளரிக்காய்—115 கிராம்.

தக்காளி—115 கிராம்.

சிவப்பு முள்ளங்கி—30 கிராம்.

பச்சடிகீரை—1 கொத்து.

### செய்யும் முறை:

கேரட்டைக் கழுவிச் சீவிக் கொள்ளவும்,

வெள்ளரிக்காயைத் தோலைச் சீவி நறுக்கிக் கொள்ளவும். தக்காளியை வெட்டிக் கொள்ளவும். சிவப்பு முள்ளங்கியை நறுக்கிக் கொள்ளவும். இவைகளைச் சேர்த்து தேவைக்கு ஏற்ப உப்பையும் கலந்து கொண்டால் சாலட் சுவையாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட அளவில் செய்தால் நான்கு பேர்கள் தாராளமாகச் சாப்பிடலாம்.

## மிஸ்ஸி ரொட்டி

இந்த உணவு வகை வட இந்திய உணவாகும். நான்கு பேர்களுக்கு மிஸ்ஸி ரொட்டி செய்யத் தேவையான அளவுகள் விவரம் :

நவதானியம்—200 கிராம்.
கடலைமாவு—200 கிராம்.
பசலைக்கீரை—100 கிராம்.
வெங்காயம்—100 கிராம்.
தண்ணீர்—200 கிராம்.
(ஏறக்குறைய)
உப்பு—5 கிராம்.
எண்ணெய்—100 கிராம்.

### செய்யும் முறை :

நவதானியங்களையும் கடலை மாவையும் முதலில் நன்றாகச் சலித்துக் கொள்ளவும்.

பசலைக்கீரையை நன்றாகக் கழுவி, தண்ணீர்போக நறுக்கிக் கொள்ளவும்.

வெங்காயத்தைத் தோல் உரித்து நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய பொருள்களைச் சலித்த பொருள்களுடன் சேர்த்துக் கொள்ளவும். உப்பையும் தண்ணீரையும் கலந்து மாவையும் பிசைந்து கொள்ளவும்.

மாவை ஒரே அளவுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

ரொட்டி மாதிரி இட்டு நெய்யைக் கலந்துகொண்டு கொஞ்சம் மாவைத் தூவிக்கொண்டு இரண்டாக மடித்து மீண்டும் ரொட்டி மாதிரி இடவேண்டும்.

தோசைக் கல்லில் கொஞ்சம் நெய்யைத் தடவிச் சுடலாம்.

சுட்டவுடன் சூடாக எடுத்துச் சாப்பிட்டால் சுவை மிகுதியாக இருக்கும்.

## சுக்காப்பருப்பு

இதுவும் வடக்கே வழங்கும் உணவு முறைதான்.

தேவையான பொருள்கள்:—

உளுத்தம் பருப்பு 225 கிராம்.
பூண்டு—சில.
பச்சை மிளகாய்—5 கிராம்.
மஞ்சள்பொடி—1 சிட்டிகை.
சீரகப்பொடி—1 சிட்டிகை.
உப்பு—சுவைக்கு ஏற்ற அளவு.
எண்ணெய்—15 கிராம்.

### செய்யும் முறை :

பருப்பை இரண்டு மணி நேரம் ஊறவைத்துத் தண்ணீரை வடிகட்டவும்.

எண்ணெய்யைச் சூடாக்கி நறுக்கிய பூண்டு, பச்சைமிளகாய், மஞ்சள் பொடி, சீரகப்பொடியைச் சேர்க்கவும். நன்றாகக் கிளறி விடவும்.

பருப்பைப் போட்டு 5-லிருந்து 10 நிமிடங்கள்வரை வேகவைக்கவும். கொஞ்சம் தண்ணீரை ஊற்றிப் பாத்திரத்தை மூடி, மெதுவான சூட்டில் வேக வைக்கவும். அவ்வப்போது கிளறி விடவும்.

பருப்பு வெந்தவுடன் உப்புப் போட்டு நன்றாகக் கலக்கிக் கொள்ளவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்ளவும்.

சூடாகச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும். மேலே சொன்ன அளவில் செய்தால் நான்கு பேர் சாப்பிடலாம்.

—அஞ்சனா


# அஜாக்ஸ் உப்புத்தாள்கள்

- தரத்தில் சிறந்தவை
- பொருள்களைச் சுலபமாக மழமழப்பாக்குகின்றன
- ஒரு சிறுதுண்டு பல நாட்களுக்கு நீடித்துவரும்

நல்ல வேலை செய்து அதிக லாபம் காண

அஜாக்ஸ் உப்புத்தாள்கள் உபயோகியுங்கள்

கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்,

சென்னை - கல்கத்தா - பம்பாய் - புது டில்லி.

# கைத்தறியைக் காப்போம்!

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான மாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்கு சுமார் 5·50 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையில் 26 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாகும்). ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ளது. இத்தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

இத்தொழிலின் சீரிய மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப் பொருள்கள், நிதி, விற்பனை வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர்களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும்பாலும் அளிக்கப்படுகின்றது. இத்தொழிலின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் கைத்தறி வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களில் '' விற்பனையும் விளம்பரமும் '' என்ற திட்டம் மிக முக்கியமானதாகும். இத்திட்டத்தின் கீழ் மொத்த விற்பனை நிலையங்களையும், சில்லறை விற்பனை நிலையங்களையும் நிறுவவும், நாட்காட்டிகள் அச்சிடவும், காகிதப் பைகள் அச்சிடவும், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடவும், திரை அரங்கில் விளம்பரம் செய்யவும் ( Slides ) பொருட்காட்சிகளில் பங்கு கொள்ளுதல் முதலிய பல்வேறு வகை விளம்பரங்களுக்காகவும் பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1970-71ம் ஆண்டில் ரூ. 5·39 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் கைத்தறி ஆடைகளின் மேம்பாட்டை விளக்க நகரங்களிலும், கிராமங்களிலும் திரையீடப்படுவதற்காக ஒரு திரைப்படம் தயாரிக்க மாநில நெசவாளர் சங்கத்திற்கு 1·70 இலட்சம் ரூபாய் மான்யமாக ஒதுக்கப்பட்டு ரூ. 29,500 செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் விற்பனை நிலையங்களை விரிவு படுத்துவதற்காகவும், விளம்பரக் காட்சி அறை ஏற்படுத்தவும் இந்தச் சங்கத்திற்கு ரூ. 20,000 மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சியும், தொழில் நுட்பமும் பயிற்சியும்

ஆலைத்துணியின் போட்டிக்கு கைத்தறித் துணி ஈடு கொடுக்க வேண்டுமாயின், கைத்தறித் துணியின் உற்பத்தியின் அடிமட்டத்திலே தீவிர மாற்றங்கள் ஆய்வுடன் செய்யப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு பலவித முன்னேற்றம் தரத்தக்க நல்ல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கைத்தறித் துணிகளின் தரத்தில் மட்டுமின்றி, தோற்றத்திலும் கண்டோர் வியப்புறும் வண்ணம், புதிய இரகங்களையும், வண்ணங்களையும் கைத்தறித் துணிகளுக்குத் தரும்பொருட்டு, நூதனமான தறிக் கருவிகள் கொடுப்பதற்கும், சாயக்கூடங்கள் அமைப்பதற்கும் அரசு, மானியமாகவும், கடனாகவும் ஏறத்தாழ ரூ. 6·62 இலட்சம் வரை கடந்த ஆண்டில் (1970-71ல்) கைத்தறி நெசவாளர்கட்கு வழங்கியுள்ளது.

மக்களுக்குக் கவர்ச்சிகரமான இரகங்களில் கைத்தறித் துணி கொடுப்பது என்ற உயர் நோக்குடனும், நெசவுத் துறையில் புதிய மறுமலர்ச்சியைக்கொண்டு வரும் ஆர்வத்துடனும் தமிழகத்தில் சென்னை, நீலகிரி ஆகிய இரு மாவட்டங்கள் நீங்கலாக 12 மாவட்டங்களில் 12 பயிற்சி நிலையங்களைநிறுவி, கைத்தறி நெசவாளர்கட்குப் புதிய இரகங்களை உருவாக்குவதிலும், எழில்மிகு வண்ண மாற்றங்கள் செய்வதிலும் நுண் கருவிகள் இயக்குவதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓராண்டில் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில் நெசவாளர்கட்கு மாதம் ரூபாய் 100 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற நெசவாளர்கள், அத்தகைய பயிற்சியின் பயனைய் வியத்தகு மாற்றங்களைக் கைத்தறித் துணியில் கொண்டு வருவதன் மூலம் அவர்கள் அங்கத்தினராயுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்கு ஏற்றம் அளித்தவராகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நூதனக் கருவிகள் மான்யமாகவும், கடனாகவும் வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பயிற்சிக்கூடம் கட்ட ரூ. 5,000 வரை மானியம் அளிக்கப்படுகிறது. நெசவாளர்கட்கு, பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ரூ. 3·90 இலட்சம் வரை அரசு நிதி உதவியுள்ளது.

நடைமுறையில் பல புதிய மாற்றங்களுடன் இன்று கைத்தறித் துணி ஆலைத்துணியினுக்கு ஈடாக விளங்குகிறது எனில் அது அரசு கைத்தறித் தொழிலின் வளர்ச்சியில் கொண்டுள்ள ஆர்வம் என்பது மட்டுமின்றி நெசவாளர்களின் வாழ்வுத்தர உயர்வினிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்பதன் அடிப்படை நல்லெண்ணமே என்றால் மிகையாகாது.

# சிகிச்சையின்றித் திரும்பிச் செல்லோம்!

உலகம் முழுமையிலும் மக்கள் தொகை பல்கிப் பெருகி வருவதையும், சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகப் பெரிய அளவில் இருந்து வருகிறது என்பதையும் அனைவரும் அறிவர். மிகுந்த தொலை நோக்குடன் குடும்பநலத்திட்டத்தைத் தேசீயத் திட்டமாக இந்திய அரசும், தமிழ் நாடு அரசும் செயல்படுத்தி வருகின்றன.

குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. குடும்பநலத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தியதற்காக *1961-62, 1962-63, 1965-66 1966-67* ஆகிய ஆண்டுகளில் இந்திய தேசீய விருதைத் தமிழகம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

*1956*-ம் ஆண்டு குடும்பநலத் திட்டம் தமிழகத்தில் செயல்படத் தொடங்கிய நாள்முதல் *8,87,321* தந்தைமார்கள் ஆண் அறுவை (வாசக்டமி) சிகிச்சையும், *81,821* தாய்மார்கள் பெண் அறுவைச் (டுபக்டமி) சிகிச்சையும் செய்து கொண்டுள்ளார்கள். மொத்தத்தில் இங்கு *1971* ஜனவரி முடியக் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளோர் *9,69,142* பேர் ஆவார்கள். இது தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் *2·4* சதவிகிதமாகும். தமிழகக் குடும்பநலத் திட்ட வரலாற்றில் இப்போது காணப்படும் ஒரு முக்கிய அம்சம், ''அறுவைச் சிகிச்சை'' யில் தாய்மார்களின் ஆர்வம் அதிகமாகிக்கொண்டு வருவதாகும்.

தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை இரண்டு முறைகளில் செய்யப்படுகிறது. ஒன்று வயிற்றின் வழியே செய்யப்படுகிறது. இது குழந்தை பிறந்த பின் இரண்டு மூன்று நாட்களில் செய்யப்படும். இப்படி அறுவைச் சிகிச்சை செய்யும் தாய்மார்களுக்கு வயிற்றில் தழும்பு ஏற்படுகிறது. இதைத் தவிர கர்ப்பம் தரிக்காத நாட்களிலும் இதே அறுவைச் சிகிச்சை ''பிறப்பு வாய் வழி'' யாகச் செய்யப்படுகிறது. ''பிறப்புவாய் வழி'' தழும்பு ஏதும் ஏற்படுவதில்லை. எனவே, தாய்மார்கள் வயிற்றின் வழியாக அறுவைச் சிகிச்சை செய்வதை விட, 'பிறப்பு வாய் வழி' யாகச் சிகிச்சை செய்வதைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

தாய்மார்களுக்குப் 'பிறப்பு வாய் வழி' புதிதாகச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை, சுருக்கமாக 'டி.வி.டி. ( Trans Vaginal Tubectomy ) என அழைக்கப்படுகிறது. இந்த அறுவைச் சிகிச்சை செய்தபின் ஆறு அல்லது ஏழு நாட்கள் மருத்துவமனையிலேயே வைத்திருந்து ஊசி போட்டு, மருந்து கொடுத்து நல்ல சிகிச்சைக்குப் பின், உடல்நிலை இயல்பான நிலை அடைந்தபின், மிகுந்த நலத்துடன் தாய்மார்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பொதுவாக இந்த அறுவைச் சிகிச்சைக்குத் தாய்மார்களிடையே பேராதரவு இருந்து வருகிறது.

பிறப்பு வாய் வழி செய்யப்படும் இந்த அறுவைச் சிகிச்சை முதன் முதலாக மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் செய்யப்பட்டு, காந்தி கிராமத்துக்கு எட்டி மதுரை மாவட்டம் முழுமையிலும் பரவியது.

மதுரை மாவட்டம் காந்தி கிராமத்திலும் அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையிலும் நாள்தோறும் இரண்டு அல்லது மூன்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவதற்கான வாய்ப்பு, வசதியைப் பெரும்பாலான தாய்மார்களுக்கு அளிப்பதற்காக முதன் முதலாக பழனி அரசினர் மருத்துவமனையில் *13—8—1970* அன்று 'பெண் அறுவைச் சிகிச்சை' முகாம் நடத்தப்பட்டு, அந்த ஒரே நாளில் *23* தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. தமிழகம் முழுமையிலும் இந்த ''டி.வி.டி.'' அறுவைச் சிகிச்சையை மக்கள் ஏற்கும் வகையில் பரப்ப அங்கங்கே ''அறுவைச் சிகிச்சை'' முகாம்கள் நடத்தப்பட்டு, குறுகிய காலத்தில் பெருவாரியான தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இப்படி நடத்தப்படும் முகாம்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு முப்பது ரூபாயை அரசு ஈட்டுத் தொகையாக அளிக்கிறது. தாய்மார்களை அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வருவோருக்கு ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் பத்து ரூபாய் வீதம் தரப்படுகிறது.

*1970* செப்டம்பர் மாதம் *22,23* தேதிகளில் கோயமுத்தூர் தலைமை மருத்துவமனையிலும் *28, 29* தேதிகளில் சேலம் தலைமை மருத்துவமனையிலும் இந்த முகாம்கள் நடத்தப்பட்டு முறையே *76* தாய்மார்களுக்கும், *48* தாய்மார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. *1970* நவம்பர் *28, 29* தேதிகளில் விருதுநகர் அரசினர் மருத்துவமனையில் இந்த முகாம் நடத்தப்பட்டு *64* தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

கடலூர் தலைமை மருத்துவமனை சேலம் தலைமை மருத்துவமனை, தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனை, காஞ்சீபுரம் தலைமை மருத்துவமனை ஆகிய இடங்களில் *1970* டிசம்பர் மாதத்தில் *169* தாய்மார்

களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. 1971 ஜனவரி மாதத்தில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும், திருச்சி தலைமை மருத்துவ மனையிலும், வேலூர் தலைமை மருத்துவ மனையிலும், இராம நாதபுரம் தலைமை மருத்துவ மனையிலும் 'பெண் அறுவைச் சிகிச்சை முகாம்கள்' நடத்தப் பட்டு 475 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. நாகர்கோயில் மருத் துவமனையில் பிப்ரவரி 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடத்திய முகாமில் 20 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது.

இந்த முகாம்களில் மிகச் சிறப்பாக அமைந்தது வேலூரில் நடைபெற்ற பெண் அறுவைச் சிகிச்சை முகாமாகும். 1971 ஜனவரி மாதம் 29லிருந்து நான்கு நாட்கள் நடத்தப்பட்ட இந்த முகாமின் போது அப் பகுதித் தாய்மார்கள் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்க ஒன்று கும்.

'பிறப்பு உறுப்பு வழி' அறுவைச் சிகிச்சை வேலூர் முகாமில் செய்யப்படுகிறது எனக் கேள்விப்பட்டுப் பெருவாரி யான தாய்மார்கள் வந்தார் கள். 232 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

வேலூர் பெண்ட்லண்டு மருத் துவமனையில் 374 படுக்கைகளே உள்ளன. 114 படுக்கைகளே குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோருக்கென ஒதுக்கப்பட்டவை.

இரண்டாவது முறையாக பிப்ரவரி 20, 21 தேதிகளில் அறுவைச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டபோது இட மின்மையால் 11 தாய்மார் களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது போயிற்று. ஆனல் அந்த 11 தாய்மார் களும் 'அறுவைச் சிகிச்சை' செய்துகொள்ளாமல் வீடு திரும்ப மறுத்துவிட்டார்கள். இந்தச் செய்தி இத் திட்டத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். தாய் மார்கள் 'அறுவைச் சிகிச்சை செய்தால்தான் வீடு திரும்பு வோம்' எனச் சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களது ஊக்கமும் உற்சாகமும் வளர்ந்திருப்பது

## பிற்பட்டோர் முன்னேறப் பெருகிவரும் சலுகை

பிற்பட்டோர் நலம் பேணத் தனித்துறை—தனி அமைச்சர் ஏற்படுத்தியது இன்றைய அரசு.

தற்போது பிற்பட்டோ ருக்குப் புதிய சலுகையாக அரசுப் பணிகளிலும், கல் லூரியிலும் கூடுதல் இடம் ஒதுக்கிடத் தமிழ் நாடு அரசு அமைச்சரவை சமீ பத்திய கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.

இதுவரை அரசு அலு வலகங்களிலும், கல்லூரி களிலும் பிற்பட்டவர் களுக்கு 25 சதவீத இடங் களும், தாழ்த்தப்பட்டவர் களுக்கு 16 சதவீத இடங் களும் இதுவரை ஒதுக்கப் பட்டுவந்தன. இனி பிற்பட்டோருக்கு 31 சதவீதமும், தாழ்த்தப் பட்டவர்களுக்கு 18 சத வீதமாகவும் உயர்த்தப் படும்.

அரசின் அன்பிற்கும் கருணைக்கும் இலக்காக விளங்கும் இந்தப் பிற் பட்டோர் யார்? தாழ்த்தப் பட்டோர் எவர்?

சமுதாயத்தில் பெரும் பகுதி இவர்கள்தாம். கல்வி யால், பணிகளால், பொரு ளாதாரத்தால், சமுதாயப் பழக்க வழக்கங்களால், தகுதியால் சமுதாயத்தின் அடித்தளத்தில் தள்ளப் பட்டு உயர்ந்த நிலையை அடைய முடியாமல் தத் தளிப்பவர்கள், இவர்கள். எனவேதான் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவிரும்பும் இந்த அரசு, இவர்களின் வாழ்வினை வள முடையதாக மாற்றிட முனைந்து செயல் படுவது இயற்கை தானே! விரைவில் தமிழகத்தில் பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் என எந்த மக்களும் இருக்கக் கூடாது என்பதே இந்த அரசின் கொள்கை— சித்தாந்தம்.

திட்டத்திற்கு ஆக்கமூட்டுவதாக அமைந்துள்ளது. எனவே, அந்த 11 தாய்மார்களும் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள். ராஜாசர். ராமசாமி முதலியார் பெண்கள் மருத்துவமனையில் அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த ''அறுவைச் சிகிச்சை'' தாய்மார்களிடையே மிகுதி யாகப் பரவி வருகிறது. இந்தச் சிகிச்சை செய்து கொண்டவர் கள் சாதாரணமாக ஒரு வார காலம் மருத்துவமனையில் தங்க வேண்டியுள்ளது. அதற்குப் படுக்கை வசதிகள் தேவை. ஆண்டொன்றுக்கு 600 பெண் அறுவைச் சிகிச்சை செய்யும் பெரிய மருத்துவமனைகளில் 20 படுக்கை வசதி கொண்ட டுபக்டமி வார்டுகள் அமைத்துக் கொள்ள, குடும்பநல நிதியி லிருந்து மத்திய அரசு பணம் ஒதுக்கியுள்ளது. 20 படுக்கை வசதி கொண்ட வார்டு ஒவ் வொன்றும் (ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் செலவில்) கட்டப்படும். படுக்கைகள், போர்வைகள், பாய்கள் போன்ற வற்றிற்காக ரூ. 40,000 செல விடப்படும். குடும்பநலத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு அரசு முதலில் சேலம் தலைமை மருத்துவமனை, நாகர்கோயில் தலைமை மருத்துவமனை, சென்னை கஸ்தூரிபா காந்தி பெண்கள்— குழந்தைகளுக்கான மருத்துவ மனை, எழும்பூர் பெண்கள்— குழந்தைகளுக்கான மருத்துவ மனை, மதுரை எர்ஸ்கின் மருத் துவமனை, ஆகிய 5 மருத்துவ மனைகளில் 20 படுக்கை வசதி கொண்ட 'அறுவைச் சிகிச்சைப் பகுதிகள்' (டுபக்டமி வார்டு) கட்ட ஆணை பிறப்பித்தது. அதன்பின் சென்னை ராஜா சர். ராமசாமி முதலியார் மருத்துவ மனை, தஞ்சாவூர் ராஜாமிராசு தார் மருத்துவமனை, பாளையங் கோட்டையிலுள்ள திருநெல் வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை மருத் துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிலும் 'டுபக்டமி வார்டுகள்' கட்ட ஆணை பிறப் பித்துள்ளது.

மொத்தத்தில், குடும்பநல இயக்கம் பல்வேறு அம்சங்களி லும் தமிழகத்தில் வெற்றி நடை போட்டுவருகின்றது.


இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு!
சிறு சேமிப்பு
நாட்டுக்கும், வீட்டுக்கும் நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே தூற்றவேண்டும்
காசுள்ளபோதே சேர்க்கவேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9.
முத்து




கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளிப்பதில் தமிழ் நாடு இன்று எல்லா மாநிலங்களையும் விட முன்னணியில் நிற்கிறது. மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளனர். பாசனங்களுக்கு மின் சக்தியைப் பயன்படுத்துதலிலும் தமிழ் நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியில் பெரும் அளவு நகர்ப்புறங்களில் தொழில் வளர்ச்சிக்கும், கிராமப்புறங்களில் விவசாயத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் சங்கிலித் தொடர்போல் மின்சாரத்தைக் கொண்டு சென்று விநியோகம் செய்கின்ற பணி உருவாக்கப்பட்டுச்செயல் வடிவம் பெற்றுள்ளது. இதனால் மின்சார சக்தியானது தொழிற்சாலைகளுக்கு 50 சதவிகிதமும், விவசாயத்திற்கு 25 சதவிகிதமும் மிச்சமிருக்கின்ற மின் சக்தியானது வியாபார நிறுவனங்களுக்கும், வீட்டுக் காரியங்களுக்கும் வழங்கப் பெறுகிறது. ஏறக்குறைய 19 இலட்சம் பயனீட்டாளர்கள் மின்சாரத்தினால் பயன்பெறுகிறார்கள். இதில் 75 சதவிகிதம் பேருக்கு வாரியம் நேரடியாக மின்சாரம் வழங்குகிறது. எஞ்சியுள்ளவர்களுக்கு ஐந்து நகராட்சி நிறுவனங்களாலும் 7 தனிப்பட்ட உரிமைதாரர்களாலும் மின்சாரம் வழங்கப்படுகிறது,

1908-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மின்சாரம் நீலகிரி மலைச்சாரலில் உள்ள காட்டேரியிலும் மற்றும் சில தேயிலைத் தோட்டங்களிலுமே சிறு சிறு மின் நிலையங்கள் மூலம் செய்யப்பட்டு வந்தது. 1927-ல் அரசின் சார்பில் மின்சாரத் துறை அமைக்கப்பட்டது. 1929-ல் பைகாரா நீர் மின்சாரத்திட்ட வேலைகள் துவங்கப்பட்டன. இதுதான் மாநிலத்தின் மின்சக்தி வளர்ச்சிக்காகத் துவங்கப்பட்ட பணிகளில் முதலாவதாகும். இதற்குப் பிறகு மாநிலத்தில் மின் சக்தியை உற்பத்தி செய்து பயன்படுத்துவதில் வியக்கத்தக்க முன்னேற்றத்தினை நாம் அடைந்துள்ளோம்.

## முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின்சார வளர்ச்சி

விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்றானபடியால், ஐந்தாண்டுத் திட்டங்களில் மின்சார உற்பத்திப் பணிகளுக்குச் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. முதல் திட்டத் துவக்கத்தில் மூன்று நீர் மின்சாரத் திட்டங்களும் இரண்டு அனல் மின்சார நிலையங்களுமே தமிழ் நாட்டில் இருந்தன. இதன் மொத்த நிறுவப்பட்ட திறன் 156 மெகா வாட்டுகள் தான். முதல் திட்டக் காலத்தில் இது 256 மெகா வாட்டாக உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட திறனானது இரு மடங்காகப் பெருகி 571 மெகா வாட்டுக்கு உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகப் புலனாகியது. பொதுவாகவே மின் சக்தி உற்பத்திக் குறைவாக உள்ள நிலை அத்துடன் மழை மிகக் குறைவாக உள்ள காலங்களில் நீர் மின்சாரத் திட்டங்களினால் அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத ஒரு நிலையை நாம் சமாளிக்க வேண்டி வந்தது. இந்தக் குறைபாட்டைப் போக்கவும், ஏற்றத் தாழ்வினை நீக்கவும், நீர்மின் நிலையங்களையும், அத்துடன் அனல் மின் நிலையங்களையும் அமைக்கத் திட்டமிட்டு அவை செயல்படுத்தப்பட்டன. இதன்விளைவாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நல்லதொரு சூழ்நிலை மின்சார உற்பத்தியைப் பொறுத்த மட்டில் தமிழ் நாட்டில் உருவாகியது. இக்காலத்தில் குந்தாவில் ஆறு மின் உற்பத்திப் பிரிவுகளும், மேட்டூர் சுரங்க நீர்த் திட்டத்தில் நான்கு பிரிவுகளும், பெரியாறு மின் நிலையத்தில் ஒரு பிரிவும் (நான்காவது பிரிவு) பரம்பிக்குளம் -ஆளியாறு திட்டத்தில் சர்க்கார் பதியில் ஒரு பிரிவும் துவங்கப்பட்டன. அத்துடன் 340 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் அனல் மின்சார நிலைய வேலையும் சென்னை பேசின்பிரிட்ஜில் கூடுதலாக 30 மெகா வாட் உற்பத்திப் பிரிவு வேலையும் துவக்கப்பட்டன. ஆக மாநிலத்தில் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 300 மெகாவாட் அல்லாமல்) 1,070 மெகாவாட்டாக உயர்ந்தது.

## இன்றைய நிலை

மாநிலத்தில் தற்பொழுது 15 நீர் மின்சார நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் 1,114 மெகாவாட்டாகும். அத்துடன் பேசின்பிரிட்ஜ், மதுரை, எண்ணூர் ஆகிய இடங்களில் மூன்று அனல் மின்சார நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்தத் திறன் 251 மெகா

வாட்டாகும். இவை தவிர, நிலக்கரியைப் பயன் படுத்தி நெய்வேலியில் அனல் மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தித் திறன் 600 மெகா வாட்டாகும். ஆக, தமிழ் நாடு மின் இணைப்பின் மொத்த நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் 600 மெகாவாட்டையும் சேர்த்து) 1965 மெகாவாட் டாகும். நீர் மின்சார நிலையங்களில் மேட்டூர், பெரியாறு, பாபநாசம், சோலையாறு, சர்க்கார் பதி ஆகிற ஐந்து மின் நிலையங்களும் 463 மெகா வாட் நிறுவப்பட்ட திறன் உடையவை. இவை நீர்ப்பாசனத்துடன் இணைக்கப்பட்டு உள்ளவை. ஆகவே நீர்ப்பாசனம் அல்லாத காலங்களுக்கு இவை உற்பத்திக்குப் பயன்படுவதில்லை. மிச்ச முள்ள ஒன்பது நீர் மின்சார நிலையங்களும் முழுக்க முழுக்க மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையங்களே யாகும். கீழ்க்கண்ட நிலையங்களில் பணிகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன:—

| | | |
|---|---|---|
| 1 | பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்மின்சாரத் திட்டத்தின் கீழ் சோலையாறு மின் சக்தி நிலையம். | 70 மெகாவாட் |
| 2 | கோதையாறு நீர் மின் சாரத் திட்டம் மின் உற்பத்தி நிலையம். | 40 மெகாவாட் |
| 3 | எண்ணூர் அனல் மின் சாரத் திட்டம் மூன்றுவது 4-வது பிரிவுகள். | 220 மெகாவாட் |

எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தில் (4-வது பிரிவு தவிர) இந்த மின் உற்பத்தித் திட்ட வேலை கள் 1971-72-க்குள் முடிவடைந்து விடுமென எதிர் பார்க்கப்படுகிறது. அத்துடன் மாநிலத்தில் நிறு வப்பட்ட மின் சக்தித் திறன் 330 மெகாவாட்டாக உயரும்.

### நெசவாளர் நகர்

நெசவாளர்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்த தமிழ் நாடு அரசு சில சிறப்பான திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவா ளர்களுக்குத் தொழில்கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத் துள்ளது. இதற்கு அரசு ஒரு வீடு ஒன் றிற்கு ரூ. 2,000 கடனாகவும் ரூ. 1,250 மானியமாகவும் கொடுத்துதவியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 127·65 இலட்சம் செலவிட்டு 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் மேலும் 500 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 27 இலட்சம் ஒதுக் கப்பட்டுள்ளது.

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களில் மின்சக்தி வளர்ச்சி

மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தித் திட்டப் பணி கள் நிறைவுபெறுவதினுல் நெய்வேலித் திட்டத்தை யும் சேர்த்து 1971-72 முதல் தமிழ் நாட்டில் உற்பத்தித் திறன், பாசனம் இல்லாத காலங்களில் 1,367 மெகாவாட்டாக உயரும். ஆனல் 1971-72-ல் 1,719 மெகாவாட்டாகவும் மின்சாரத்தின் தேவையானது உயரும் என எதிர்பார்க்கப்படு கிறது. ஆகவே உற்பத்தித் திறனுக்கும், எதிர் பார்க்கப்படுகிற தேவைக்கும் இடையே ஒரு பெருத்த இடைவெளி ஏற்படுகிறது. நான்காவது திட்டத்தில் புதுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டாலொழிய 1971-72ல் பற்றுக் குறையாக உள்ள 352 மெகாவாட் 1973-74-ல் 906 மெகாவாட்டாக உயர்ந்துவிடும். நான்காவது திட்டக் காலமுடிவில் இந்தப்பற்றுக்குறை இன்னும் அதிகமாகிவிடும். அநேகமாக நான்காவது திட்டக் கால ஆரம்பத்தில் கல்பாக்கம் அணு சக்தி நிலையம் முடிக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் 200 மெகா வாட் திறன் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்தப் பற்றுக்குறையைப் போக்கலாம். அண்டை மா நிலங்களான கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களி லிருந்து இப்பொழுது உபரியான மின் சக்தி கிடைக் கப் பெற்றுலும் நான்காவது திட்டக்காலத்தில் அந்த மாநிலங்களில் வேகமாக ஏற்படுகின்ற வளர்ச் சிப் பணிகள் காரணமாக இந்த உபரியாகக் கிடைக் கின்ற மின்சக்தியை நம்பி இருப்பது உசிதமான தல்ல. அத்துடன் ஒரு திட்டத்திற்கு அனுமதி யளிக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவு பெறுவதற் கிடையே நீண்ட கால இடைவெளி உள்ளது. ஆகவே நான்காவது திட்ட இறுதியில் எதிர்பார்க் கப்படுகிற அதிகப்படியான பற்றுக் குறையைச் சரிக்கட்ட, நான்காவது திட்டத்திலேயே தமிழ் நாட்டில் மேலும் கூடுதலான மின்சக்தித் திட்டங் களை உருவாக்குதல் மிகவும் அவசியமாகும். மா நிலத்தில் நீர் மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்ற கூறுகள் குறைவாக உள்ளதால் பெரிய அளவில் அனல் மின்சார நிலையங்களையோ அணுச் சக்தி நிலையங்களையோ எதிர்பார்க்கப்படுகின்ற பற்றுக் குறையைச் சமாளிக்கப் பெரிய அளவில் உருவாக்கு வது மிக மிக அவசியமாகும். அப்படியே செய்தா லும், உற்பத்தி செய்கின்ற முழுமையான செல வினத்தைக் குறைப்பதற்காகவும் அன்றுட உச்ச மின் சுமையைச் சமாளிப்பதற்கும், நீர்மின்சார நிலையங்களைப் பெருக்குவதும் விரும்பத்தக்கதாகும். இந்த நோக்கத்தைக் கருத்தில்கொண்டு, வருகின்ற திட்டக் காலங்களில் செயல்படுத்துவதற்காக வேண்டி கீழ்க்கண்ட கூடுதல் பணிகள் துவக்கப்ப இருக்கின்றன:—

1 நீலகிரியில் பாண்டியாறு, பொன்னம்புழா (மோயார்) மின்சாரத் திட்டம் (100 மெகா வாட்)

2 குந்தா நீர் மின்சாரத் திட்டம் நான்காவது நிலை (குந்தா மின் சக்தி நிலையம் III-ல் 60 மெகாவாட் கூடுதலும், உற்பத்தி நிலை யம் IV-ல் 50 மெகாவாட் கூடுதலும்)

3 நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டம் (பைகாரா -மோயார் மின்சார நிலையங்களில் 60 மில்லியன் யூனிட்டுகள் கூடுதலாக உற்பத்தி செய்தல்)

4 எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் ஐந்தாவது பிரிவாக 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல்.

இவற்றில் முதலில் சொல்லப்பட்டது தவிர மற்ற திட்டங்களெல்லாம் நான்காவது காலத் திட்டங்களிலேயே 1973-74-க்குள் செயல்படுத்தப்படும். இவை தவிர நான்காவது திட்டக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் பணிகள் முடிவுறும்படியாகக் கீழ்க்கண்ட திட்டங்கள் துவக்கப்படவிருக்கின்றன:—

| | | |
|---|---|---|
| 1 | காடம்பாரை நீர் மின் சாரத் திட்டம். | 200 மெகாவாட் |
| 2 | சுருளியாறு நீர்மின்சாரத் திட்டம். | 35 மெகாவாட் |
| 3 | மேல் தாம்பிரவருணி நீர்மின்சாரத் திட்டத்தில் சேர்ந்துள்ள சேர்வலாறு மின் நிலையம். | 30 மெகாவாட் |
| 4 | குன்னூர்-கள்ளாறு மின் சாரத் திட்டம். | 50 மெகாவாட் |
| 5 | மேல் தாம்பரவருணி நீர் மின்சாரத் திட்டம் (எஞ்சியுள்ள மின் நிலையங்கள்). | 165 மெகாவாட் |
| 6 | மேல் அமராவதி நீர் மின் சாரத் திட்டம். | 70 மெகாவாட் |
| 7 | மேல் மணிமுத்தாறு நீர் மின்சாரத் திட்டம். | 90 மெகாவாட் |
| 8 | கீழ்க்காவேரி நீர் மின் சாரத் திட்டம். | 200 மெகாவாட் |
| 9 | கீழ் மொய்யாறு நீர் மின் சாரத் திட்டம். | 70 மெகாவாட் |
| 10 | பரணையாறு நீர்மின்சாரத் திட்டம். | 35 மெகாவாட் |
| 11 | சோழாட்டிப் புழா நீர் மின்சாரத் திட்டம் (இரு மாநிலங்களும் சேர்ந்த திட்டம்). | 30 மெகாவாட் |
| 12 | மேல் காவேரி நீர் மின் சாரத் திட்டம் (தமிழ் நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள்). | 250 மெகாவாட் |

இந்தத் திட்டங்களெல்லாம் செய்து முடிக்கப்பட்டாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 1,300 மெகாவாட் அளவு பற்றுக் குறையாகவே இருக்கும். இந்தப் பற்றுக்குறையைப் போக்க வேண்டுமானல் கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையத்தின் 200 மெகா வாட்டை 400 மெகா வாட்டாக விரிவுபடுத்துதலும், 600 மெகாவாட் திறன் உள்ள இன்னொரு அணு மின்சக்தி நிலையம் தோற்றுவித்தலும், தூத்துக்குடிப் பகுதியில் ஆரம்பத்தில் 400 மெகாவாட்டும் இறுதியில் 600 மெகா வாட்டும் திறனுள்ள அனல் மின்நிலையம் ஒன்றினைத் தோற்றுவித்தலும் மிகவும் அவசியமாகிறது. நிலக்கரி விலை உயர்வினலும், இப்பொழுது மின் சக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்ற குறைந்த தரமான நிலக்கரிக்குப் பதிலாக நல்ல நிலக்கரியை அந்த இடங்களுக்குக் கொண்டு செல்வதினல் ஏற்படுகின்ற அதிக பட்சச் செலவையும் முன்னிட்டு, அதற்குப் பதிலாக அணு மின் சக்தி நிலையம் இந்த மாநிலத்தில் தோற்றுவிப்பது விரும்பத் தக்கது. இன்னொரு இரண்டாவது அனல் மின்சார நிலையத்தில் சுமார் 600 மெகாவாட் மின் சக்தியை உண்டாக்குகின்ற வகையில் நெய்வேலியில் இன்னொரு இரண்டாவது சுரங்கம் வெட்டும் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த வேலைகள் அனைத்தும் நான்காவது திட்டத்தில் ஏற்படும் பற்றுக் குறையைச் சமாளிக்க நான்காவது திட்டக் காலத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

## நெசவுப் போட்டி

கூட்டுறவுத் துறையிலும் பிற துறையிலும் பணி புரியும் நெசவாளர்களை ஊக்குவிக்கவும், கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்யவும் அரசு ஒவ்வொரு ஆண்டும் போட்டி நடத்தி வருகிறது. இதில் சிறந்த உற்பத்தியாளர்களுக்குப் பரிசு வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 20,000 மானியமாகச் செலவழிக்கப்படுகிறது

## மின் உற்பத்தி

வாரியத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியும் அண்டை மாநிலங்களில் வாங்கப்பட்ட மின்சக்தியும் சேர்ந்து முதல் திட்ட முடிவில் மொத்தம் 1,053 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது இரண்டாவது திட்ட முடிவில் 2,214 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்தது. மூன்றாவது திட்ட முடிவில் உற்பத்தி செய்யப்பட்ட, வாங்கப்பட்ட மின்சக்தி 4,041 மில்லியன் யூனிட்டுகளாகும். 1970-71-ல் மாநிலத்தில் செய்யப்பட்ட மொத்த மின்சக்தி 6,189 மில்லியன் யூனிட்டுகள். இவற்றில் 3,603 மில்லியன் யூனிட்டுகள் அல்லது சுமார் 59 சதவிகிதம் வாரியத்தின் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. மிச்சமுள்ள 2,586 மில்லியன் யூனிட்டுகளில், 1,523 மில்லியன் யூனிட்டுகள் நெய்வேலியிலிருந்தும் 733 மில்லியன் யூனிட்டுகள் மைசூரிலிருந்தும், 328 மில்லியன் யூனிட்டுகள்

கேரளத்திலிருந்தும், 2 மில்லியன் யூனிட்டுகள் ஆந்திரத்திலிருந்தும் வாங்கப்பட்டன. 1970-71ல் வடகிழக்குப் பருவக்காற்று, சாதகமாக இல்லாதிருந்தும் அவ்வாண்டில் மின் நிலையங்கள் ஓர் இணைக்கப்பட்ட அமைப்பாகச்செயல்படுத்தப்பட்டதினால் மின்சக்தி உற்பத்தியானது மிகவும் திறமையான முறையில் கவனிக்கப்பட்டு மாநிலத்தின் மின்சாரத் தேவையானது எந்தவித மின் வெட்டும் இல்லாத நிலையில் முழுமையாகவும் மனநிறைவு அளிக்கும் முறையிலும் சமாளிக்கப்பட்டதை இங்கே குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

## மின்சக்தி அனுப்புதலும் பங்கிடுதலும்

மாநிலம் முழுமைக்கும், குறைந்த செலவில், பெருவாரியான அளவில் மின்சக்தி எல்லாருக்கும் சீரிய முறையில் கிடைக்கவும், கிடைக்கின்ற மின் ஆதாரங்களை வளர்ச்சியுறச் செய்யவும் வேண்டி, மின்சாரத் துறையானது தன்னுடைய துவக்கக் காலம் தொட்டே மாநிலம் முழுவதையும் கவியக் கூடிய நிலையில் ஒரு மின் இணைப்பினை அமைக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக்கொண்டிருந்தது. நாட்டில் உள்ள பல்வேறு நீர்மின்சார நிலையங்கள், அனல் மின்சார நிலையங்கள் அனைத்தும் இறுதியில் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும் எல்லா நகரங்கள், கிராமங்களில் உள்ள பயனீட்டாளர்களுக்கு எல்லாம் மின் அனுப்புக் கம்பித் தொடர்களும், பங்கீடு கம்பித் தொடர்களும் பின்னிப் பிணையப்பட்ட ஒரு செயல் முறையின் மூலம் மின்சாரம் கிடைக்கப் பெறுகின்ற நிலையிலும் மின் இணைப்பானது திறமையான முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் 230 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடரை ஏற்படுத்திய தனிச் சிறப்பு தமிழகத்தையே சாரும். 230-220 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்கள் மூலமாக மைசூர், கேரளம், ஆந்திர மாநிலங்களின் மின் இணைப்புகளுடன் தமிழ்நாடு இணைக்கப் பெற்றுள்ளது. 31-3-71ல் உள்ள நிலவரப்படி, இந்த மின் இணைப்பில் 11 கே.வி. வால்டேஜும் அதற்கு மேலுமான 55,000 கிலோ மீட்டர்கள் உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும் 400 வால்டுகள் சக்தியுள்ள குறைந்த அழுத்தக் கம்பித் தொடர்களும் உள்ளன. செயல் வடிவம் பெறப் போகும் புதுத் திட்டங்களின் மூலம் கிடைக்கப் பெறும் மின்சக்தியைத் திறமையான முறையில் அனுப்பவும், பகிர்ந்தளிப்பதற்காகவும், கூடுதலாக மின் அனுப்பும் கம்பித் தொடர்கள் அமைக்கப்படஇருக்கின்றன.

## தொழில் வளர்ச்சி

கடந்த பத்தாண்டுக் காலத்தில் ஒரு தொழில் புரட்சியின் தோற்றுவாயினை இந்த மாநிலம் கண்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் துவங்கியதிலிருந்து, தொழில் வளர்ச்சியானது ஐந்து மடங்கு பெருகியுள்ளது. தொழில்வளர்ச்சிக்கு மின்சாரம் பெருவாரியாகப்பயன்படுத்தப்பட்டிருப்பதுஇதைத் தெளிவாக்கிக் காட்டுகிறது. முதல் திட்ட முடிவில் 325 மில்லியன் யூனிட்டுகள் மின் சக்தி தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாவது திட்ட இறுதியில் இந்த அளவு 766 மில்லியன் யூனிட்டுகளுக்கும் மூன்றாவது திட்ட இறுதியில் 1,524 மில்லியன் யூனிட்டுகள் என்ற பிரம்மிக்கத்தக்க அளவுக்கும் உயர்ந்துள்ளது. நான்காவது திட்டக் கால முடிவில் 4,100 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தியினைத் தொழிற்சாலைகள் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிராமப்புறங்களை மின்மயமாக்குதல்

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளித்தலை முக்கிய நோக்காகத் தமிழ்நாடு கொண்டுள்ளது. இத்துறையில் பணிகள் பாராட்டத்தக்க வகையில் நடைபெற்று வருகின்றன. 75 சதவிகித மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்த, கிராமப் புறங்களுக்கு மின் வசதியை உடனடியாக, மிகவும் வேகமாகக் கொண்டு செல்வது மிக மிக அவசியமாகிறது. தமிழ்நாட்டில் வற்றாத ஜீவ நதிகள் போதிய அளவுக்கு இல்லை. ஆகவே விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ள நிலை உள்ளது. ஆகவே இறைவைப் பாசனத்திலும் உணவு உற்பத்தியைப் பெருக்குதலிலும், அத்துடன் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதிலும் மின்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

31-1-71 நிலவரப்படி இந்தியா முழுமையிலும் 15·65 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது. இப்படி மின் இணைப்புத் தரப்பட்ட விசையேற்றங்கள் தமிழ் நாட்டில் மட்டும் 5·14 இலட்சம் உள்ளன. மாநிலத்தில் உள்ள மக்கள் வதியும் 57,000 கிராமங்கள், குக்கிராமங்களில், 31-3-71ல் உள்ள நிலவரப்படி 41,957 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது. மிச்சமுள்ள 15,000 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் 1971-72க்குள் மின் வசதி அளிப்பதற்கான விரைவுத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு தீட்டியுள்ளது.

31-3-71ல் உள்ள கணக்குப்படி, 5.30 இலட்சம் விசையேற்றங்களுக்கு மேல் மின்சக்தியினால் இயங்குகின்றன, இந்த விசையேற்றங்களின் மூலம் 15.90 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் செய்யப்படும் என்றும் சுமார் 7.5 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்படுமென்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்திலும் கிணறுகளுக்கு மின்சக்தி வழங்குதலில் இதே வேகம் கையாளப்பட்டுப்பணிகள் நடைபெறவும் ஆண்டொன்றுக்கு 60,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தத் துறையில் தமிழ்நாடு கண்டுள்ள மகத்தான சாதனையை எந்த மாநிலமும் விஞ்சமுடியாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான செலவுக்காக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், நிறுவனங்களிடமிருந்தும், கடன்கள் எழுப்பப் பெறுகின்றன.

## நிதி நிலைமை

நிதி நிலைமையில்கூட, மின்சாரத் துறையில் தமிழ்நாடு கண்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்

தக்க ஒன்றாகும். முதல் திட்ட ஆரம்பத்தில் இருந்த மூலதன முதலீடு 24 கோடி ரூபாய் தான். இது நிதானமாக உயர்ந்து 31-3-69ல் ரூ. 357 கோடிக்கு உயர்ந்துவிட்டது. முதல் திட்ட ஆரம்பத்தில் ஈட்டப்பட்ட வருவாய் ஆண்டொன்றுக்கு ரூ. 3·18 கோடி. 1970-71ல், இந்த வருவாயானது ரூ. 61·00 கோடிக்கு உயர்ந்துள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் தனி நபர் மின்சாரத்தைப் பயன்படுத்திய அளவு பன்னிரெண்டு யூனிட்டுகள். 31-3-70ல் இது 120 யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. அகில இந்திய ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட உயர்வு 78·4 யூனிட்டுகள் தான். நான்காவது திட்டக் காலத்தில் செயல் வடிவம் பெறும் புதுத்திட்டப் பணிகளின் விளைவாகத் தனிநபர் பயன்படுத்தும் அளவு 200 யூனிட்டுகளுக்கு உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சி பெற்ற மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இது மிகக் குறைவுதான்.

## கட்டண விகிதம்

மற்ற மாநிலங்களில் உள்ளதைவிடத் தமிழ்நாட்டில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்காக விதிக்கப்படும் கட்டண விகிதங்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்ற ஒரு குறை பொதுமக்களாலும், பத்திரிகைகளாலும் மிகவும் பரந்த அளவில் சொல்லப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மொத்த மின் சக்தியில் 25 சதவிகித அளவுக்கு மின்சாரத்தைப் பெறுகிற விவசாயத்திற்குத் தமிழ்நாடு அரசு மின்சாரத்தை மிகவும் குறைந்த கட்டணத்திலேயே வழங்குகிறது என்பதை இங்கே குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. மேலும், நீர் மின்சாரத் திட்டத்தை விட மிகவும் அதிகமான செலவினை உள்ளடக்கிய அனல் மின்சாரத்தினைக் கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்நிலையில், இக்கட்டான நிதி நிலையிலோ, அல்லது நிதிச் சுமையிலோ ஆட்கொள்ளாத வகையில் வாரியமானது கட்டண விகிதங்களை நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழில்களுக்கு, குறிப்பாக, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளுக்கும் சக்திச் செறிவான தொழிற்சாலைகளுக்கும் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டி அரசு வல்லுநர்கள், வாரிய வல்லுநர்கள் அடங்கிய உயர் மட்டக் குழு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தினைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவது பற்றி இக்குழு ஆராயும். அக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

---


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.


மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய ' அந்த நாளை ' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்



SPB 177 THA

# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்



களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும். ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!




இன்டோக்பில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும், ஃபிளாஸ்கை யின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

விநியோகிப்போர்:

தி சைன்டிபிக் பெர்டிலிசர்ஸ் கம்பெனி (பி) லிட்., சுதர்சனம்: பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. தொலைபேசி : 22854. தந்தி : NITROPHOS
கிளைகள் : உதகமண்டலம், சென்னை, மதுரை, கடலூர், திருச்சிராப்பள்ளி.

மாலை மணி மூன்று இருக்கும். வெய்யில் மிகவும் கடுமையாக இருந்தது. அந்த வெய்யிலில் வயலில் இருந்து திரும்பி வீட்டிற்கு வந்த ஏகாம்பரம் "அப்பாடா! என்ன வெய்யில் அடிக்குது! மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறதே!" என்று கூறிக் கொண்டே வீட்டின் முன் வராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து சாய்ந்தார்.

அவருடைய குரலைக் கேட்ட அவரது மனைவி அங்கு வந்து, "எழுந்து வாங்களேன்; சாப்பிடலாம்" என்றார்.

"சாப்பாடு இப்ப வேண்டாம். முதலில் மோர் விட்டு ஒரு டம்ளர் கூழ் கரைத்துக்கொண்டு வா!" என்றார் ஏகாம்பரம். சற்று நேரத்தில் அந்த அம்மையார் ஒரு பாத்திரத்தில் கூழைக் கரைத்து எடுத்துக் கொண்டு வந்து, ஒரு குவளையில் ஊற்றிக் கொடுத்தார். ஏகாம்பரம் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணமே அந்தக் குவளையை வாங்கிக் கூழை 'மடக் மடக்' கென்று ஒரே மூச்சில் குடித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் வீட்டு வாசலின் முன்பு ஒரு 'ஜீப்' வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து 'எம்.எல்.ஏ.' அவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் அவர்களும் இறங்கி வந்தனர். அவர்களைக் கண்டதும், ஏகாம்பரம் கூழ் குடித்துக் கொண்டிருந்ததை நிறுத்தி, குவளையை மனைவியிடம் கொடுத்துவிட்டு அவசர அவசரமாக எழுந்து வந்து இரு கைகளையும் குவித்து "வணக்கம்! வாங்க! வாங்க!" என்று கூறி எதிர்கொண்டழைத்தார். அதே நேரத்தில் 'எம்.எல்.ஏ.'வும், பெருந்தலைவரும், "வணக்கம் தலைவரே! நலந்தானா?" என்று கேட்டுக்கொண்டே வந்தனர்.

"நலமாகத்தான் இருக்கிறேனுங்க. இந்த வெய்யிலில் வந்திருக்கின்றீர்களே! உங்கள் உடம்பு என்னத்துக்கு ஆகுமுங்க? வெய்யில் தாழ்ந்து வந்திருக்கலாமே! நின்றுகொண்டே இருக்கின்றீர்களே! உட்காருங்க!" என்று கூறி நாற்காலிகளைக் காட்டினார் ஏகாம்பரம்.

மூவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். அப்பொழுது







ஏகாம்பரத்தின் மனைவி ஒரு சொம்பில் குளிர்ந்த நீரும், ஒரு டம்ளரும் கொண்டுவந்து ஏகாம்பரத்திடம் கொடுத்தார்.

ஏகாம்பரம் அந்த டம்ளரில் தண்ணீரை ஊற்றி "சாப்பிடுங்க" என்று கூறி எம்.எல்.ஏ. விடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட எம்.எல்.ஏ. "பெருந்தலைவரே! நாம் அனல் காற்றையும் பொருட்படுத்தாமல் தலைவரைப் பார்க்க வந்துள்ளோம். ஆனால் நம்மைக் கண்டதும் தலைவர் எதையோ அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, மீதியையும் உள்ளே அனுப்பிவிட்டார். நமக்கு வெறும் தண்ணீர் மட்டும் கொடுக்கிறார்" என்றார்.

"நீங்க அதெல்லாம் சாப்பிட மாட்டிங்க!" என்றார் ஏகாம்பரம்.

"என்ன குடித்துக் கொண்டிருந்தீர்கள்? அதைச் சொல்லுங்க முதலில்" என்றார் பெருந்தலைவர்.

ஏகாம்பரம், கூழ் குடித்தேன் என்று சொல்லத் தயங்கினார். எம்.எல்.ஏ.வும், பெருந்தலைவரும் தண்ணீர் குடித்துவிட்டு, மீண்டும் ஏகாம்பரத்தைப் பார்த்து 'தலைவரே!' என்ன சாப்பிட்டீர்கள் என்று சொல்ல மாட்டீர்களா?" என்றனர்.

"இப்பத்தான் வயலிலிருந்து வந்தேன். களைப்பாக இருந்தது. மோர்விட்டுக் கூழ் கரைத்துக் கொண்டு வரச் சொல்லிக் குடித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் இருவரும் திடீரென வந்து விடவே, கூழ் குடித்துக்கொண்டிருந்ததை பாதியிலேயே நிறுத்தி விட்டு, மீதியை உள்ளே அனுப்பி விட்டேன்" என்றார் ஏகாம்பரம்.

"வெய்யிலுக்குக் கூழ் நல்லது என்று சொல்லுவார்களே! எங்களுக்கும் களைப்பாகத்தான் இருக்கு; எங்களுக்கும் கொஞ்சம் கூழ் கொடுக்கக் கூடாதா?" என்றார் எம்.எல்.ஏ.

"சாப்பாடு ரெடி! எழுந்திருங்க சாப்பிடலாம்!" என்றார் ஏகாம்பரம்.

"முதலில் கொஞ்சம் கூழ் குடிக்கலாம்" என்றார் எம்.எல்.ஏ.

"நீங்க என் வீட்டிற்கு வந்து கூழ் குடிப்பதாவது? எழுந்திருங்க சாப்பிடலாம்!" என்றார் ஏகாம்பரம்.

"பெரிய பண்ணையாராகிய நீங்களே கூழ் குடிக்கும்பொழுது, நாங்கள் சாப்பிடக் கூடாதா என்ன?" என்றார் எம்.எல்.ஏ.

முடியாதென்று சொல்ல முடியாமல் பண்ணையார் ஏகாம்பரம் வீட்டின் உள்ளே சென்று புளிக்காத மோர் விட்டு, தன் கையாலேயே கூழை நன்கு கரைத்து எடுத்துக்கொண்டுவந்து இருவருக்கும் ஊற்றிக் கொடுத்தார். தொட்டுக் கொள்வதற்கு எலுமிச்சம்பழ ஊறுகாயும் கொடுத்தார்.

ஒரு டம்ளர் கூழ் குடித்துவிட்டு "மிகவும் குளிர்ச்சியாய் இருக்குதுங்க. இன்னும் கொஞ்சம் போடுங்க" என்றார் பெருந்தலைவர். அதுபோலவே எம்.எல்.ஏ.வும் கூறினார். பண்ணையார், மீண்டும் ஆளுக்கு ஒரு டம்ளரில் கூழ் ஊற்றிக் கொடுத்தார்.

"பண்ணையார் ஏன் கூழ் குடிக்கிறார் என்பது இப்பத்தானே புரியுது! இனிமேல் நாம் கூட கூழ் குடிக்க ஆரம்பிக்கணும் என்று முடிவு செய்துவிட்டேன். அப்பதான் இந்த வெய்யிலுக்கு என் உடம்பு தாக்குப் பிடிக்கும்" என்றார் பெருந்தலைவர்.

"நான் சிறு பையனாக இருந்த பொழுது கூழ் குடித்திருக்கிறேன். அது பழுப்பு நிறமாகவல்லவா



இருந்தது. நீங்கள் கொடுத்துள்ள கூழ் வெண்மை நிறமாக இருக்கிறதே!'' என்றார் எம்.எல்.ஏ.

'' இது வெள்ளை ராகியிலிருந்து தயாரிக்கப்பட்ட கூழ். அதனால் வெண்மையாக இருக்கிறது '' என்றார் பண்ணையார்.

'' வெள்ளை ராகி உங்களுக்கு எங்கே கிடைச்சுது ?'' என்று கேட்டார் பெருந்தலைவர்.


'' நம்ம ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலர் தான், வெள்ளை ராகியை வரவழைச்சுக் கொடுத்தார்'' என்று பண்ணையார் பதிலளித்தார்.

'' அப்படியானால் நான் கூட அந்த வெள்ளை ராகியைப் பயிரிட்டுப் பார்க்க வேண்டும் '' என்றார் பெருந்தலைவர்.

'' பெருந்தலைவரே! நாம் வந்த வேலையை மறந்துவிட்டு, வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறோமே! '' என்றார் எம்.எல்.ஏ.

'' பண்ணையாரே ! உங்க ஊருக்கு மின்சார வசதி இல்லை என்று குறைபட்டுக்கொண்டிருந்தீர்களே ! அந்தக் குறையைப் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தையும் நம்ம 'எம்.எல்.ஏ.' செய்து விட்டார். நாளைக்கே உங்க ஊரில் கம்பம் நட ஆரம்பித்து விடுவார்கள். இன்னும் 15 நாட்களில் உங்கள் ஊரில் மின் விளக்கு எரியும். உங்க ஊரே ஒளிமயமாகிவிடும்'' என்றார் பெருந்தலைவர்.

மின் விளக்கு ஏற்றும் விழாவிற்கு நமது மாநில அமைச்சரைக் கூப்பிடலாம் என்று நினைக்கிறோம். உங்களுடைய கருத்தைக் கேட்டுக்கொண்ட பின்புதான் இது பற்றி அமைச்சரிடம் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களுடைய கருத்தறிந்து போகவே நாங்கள் வந்துள்ளோம் '' என்றார் எம்.எல்.ஏ.



'' நீங்க ஏற்பாடு செய்துவிட்டால் நாஞ் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன் ?'' என்றார் பண்ணையார்.

'' நீங்கள் மறுப்பு சொல்ல மாட்டீர்கள் என்பது தெரியும். இருந்தாலும், ஊராட்சி மன்றத் தலைவராகிய உங்களைக் கலந்தாலோசிக்காமல் செய்வது முறையில்லிங்களே !'' என்றார் எம்.எல்.ஏ.

'' அத்துடன் நீங்கள் எங்களை விட வயதில் பெரியவர் ; முதிர்ந்த அனுபவமுள்ளவர் ; உங்களைக் கலந்தாலோசிக்காமல் செய்யக் கூடாது பாருங்க !'' என்றார் பெருந்தலைவர்.

'' நான் என்ன செய்யணும் என்று சொல்லுங்க ! அப்படியே செய்து முடிக்கின்றேன் !'' என்றார் பண்ணையார்.

'' நாளைக்கே மின் துறையினர் உங்களைக் கலந்துகொண்டு, வேலையைத் துவக்கிவிடுவாங்க. நீங்க அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புகளைக் கொடுக்க வேண்டும் '' என்றார் பெருந்தலைவர்.

'' நான் பார்த்துக்கொள்கின்றேன். இனிமேல் அது பற்றிய கவலையே வேண்டாம். மணி 4 ஆகப் போகுது. சாப்பாடு சாப்பிடுகின்றீர்களா ? அல்லது டிபன் சாப்பிடுகின்றீர்களா ? என்று பரிவுடன் கேட்டார்பண்ணையார்.

'' கூழ் குடித்ததே வயிறு நிரம்பிவிட்டது. இனிமேல் சாப்பாடு தேவையில்லை. நாங்கள் புறப்படுகிறோம் '' என்றார் எம்.எல்.ஏ.

'' டிபனாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம். கொஞ்சம் பொறுங்க '' என்று கூறிவிட்டு வீட்டினுள்ளே சென்றார் ஏகாம்பரம்.

'' எம்.எல்.ஏ. ஐயா கொஞ்சம் பொறுங்க. அவசரப்படாதிங்க. டிபன் சாப்பிட்டுவிட்டுப் புறப்படுவதற்குள் வெய்யிலும் தாழ்ந்துவிடும்'' என்றார் பெருந்தலைவர்.

'' டிபன் சாப்பிடாமல் நகருவதில்லை என்று முடிவு செய்துவிட்டீர்கள் போலுள்ளது. உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள் '' என்றார் எம்.எல்.ஏ.

உள்ளே சென்று திரும்பி வந்த பண்ணையார் '' எழுந்திருங்க! டிரைவர், நீயும் வாப்பா, டிபன் சாப்பிடலாம் !'' என்று கூறிக்கொண்டே ஒரு வாளியில் தண்ணீரையும் கொண்டுவந்து வைத்தார். முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே சென்றனர். அங்கு மூன்று இலைகள் ஓர் இடத்திலும், அதிலிருந்து சற்றுத் தள்ளித் தனியாக ஓர் இலையும் போடப்பட்டிருந்தது. எம்.எல். ஏ, பெருந்தலைவர், பண்ணையார் ஆகிய மூவரும் ஒரே இடத்தில் அமர்ந்தனர். டிரைவர் அவருக்கெனப் போடப்பட்டிருந்த இலையில் அமர்ந்தார்.

பண்ணையாரின் மனைவி எல்லாருக்கும் நான்கு நான்கு அடைகளை வைத்து, சட்னி, சாம்பார், கூட்டு ஆகியவைகளைப் பரிமாறினார். எம்.எல்.ஏ. வும், பெருந்தலைவரும் மிகவும் சுவைத்துச் சாப்பிட்டனர். பண்ணையாரின் மனைவி, மேலும் இரண்டு அடைகளை வைத்தார். வேண்டாம் என்று யாருமே சொல்லவில்லை. அவைகளைச் சாப்பிட்டு முடிக்கும் தறுவாயில், மேலும் சில அடைகளைப் பண்ணையாரின் மனைவி எடுத்துக் கொண்டு



வந்தபோதுதான், ''போதும், இனிமேல் வேண்டாம்'' என்றனர்.

டிபன் சாப்பிட்டு முடிந்ததும் அனைவருக்கும் இளஞ்சூடான 'ராகிமால்ட்' கொடுக்கப்பட்டது. அதையும் சுவைத்துக் குடித்துவிட்டு வெளியே வந்து அமர்ந்த வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டிருந்தனர்.

''பண்ணையாரே, அடையும் ராகியில் செய்ததுதானா?'' என்றார் பெருந்தலைவர்.

''ஆமாம், ஏன் நன்றாக இல்லையா?'' என்றார் பண்ணையார்.

''அடை பிரமாதம்!'' என்றார் பெருந்தலைவர்.

''ராகிமால்ட் அதைவிட மிகவும் பிரமாதம்'' என்று கூறிக்கொண்டே நாற்காலியில் இருந்து எழுந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

''இன்னும் அரை மணி நேரத்திற்கு என்னால் எங்கும் புறப்பட முடியாது. என் வயிறு 'டபுள் புல்!' எம்.எல்.ஏ. ஐயா நீங்கள் அப்படியே ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் அதற்குள் ராகியைப்பற்றிக் கொஞ்சம் பண்ணையாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றேன்'' என்றார்.

''என் நிலைமையும் அதுதான்! உங்க பேச்சை ஆரம்பியுங்க. நானும் கேட்டுக் கொள்கின்றேன்'' என்றார் எம்.எல்.ஏ.

''நீங்க பெரிய பண்ணையாராக இருந்தும் ராகி பயிரிடுவது ஏன்?'' என்றார் பெருந்தலைவர்.

நாமெல்லாம் அரிசியைத்தான் முக்கியமாக உணவுக்குப் பயன்படுத்தினாலும், பெரும்பாலான ஏழை மக்களின் உணவாக விளங்குவது ராகியே! ராகியில் நல்ல சத்துக்கள் இருப்பதனாலேயே, அதிலிருந்து தயாரிக்கப்படும் 'ராகிமால்ட்' என்னும் பானத்தைப் பெரும் பணக்காரர்களெல்லாம் விரும்பி அருந்துகின்றனர். எங்கள் வீட்டில் ஒவ்வொரு நாளும், ஒரு வேளையிலாவது ராகியால் செய்யப்பட்ட உணவு இல்லாமல் இருக்காது. எங்கள் வீட்டில் யாருக்குமே சத்துக்குறைவு என்ற நிலைமையில்லை. என் பையன்களெல்லாம் 'கொழு, கொழு' வென்றுதான் இருப்பார்கள். இதையெல்லாம் மனத்தில் கருதியே நான் தொடர்ந்து பயிரிட்டு வருகின்றேன்'' என்றார் ஏகாம்பரம்.

பெருந்தலைவர் கேட்பதற்கு, பண்ணையார் பதில் சொல்வது என்ற முறையில் அவர்களுடைய பேச்சு, தொடர்ந்தது. எம்.எல்.ஏ.வும் அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''எங்க ஊரில்கூட பலர் ராகி பயிரிடுகிறார்கள். ஆனால் மகசூல் மிகவும் குறைவாகவே கிடைக்குதென்று கூறுகிறார்களே! அது உண்மை தானுங்களா?''

''பருவத்தே பயிர் செய் என்ற பழமொழிக்கேற்ப, பருவத்தில் ராகி பயிரிட வேண்டும். அத்துடன் பருவத்திற்கேற்ற ரகத்தைப் பயிரிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் கண்ட விதையை, காலம் தவறி விதைத்தால், எப்படிங்க மகசூல் நிறையக் கிடைக்கும்?''

''நம்ம தென்னார்க்காடு மாவட்டத்தில் ராகி பயிரிடச் சிறந்த பருவம் எதுங்க?''

''நம்ம தென்னார்க்காடு மாவட்டத்தில் வைகாசி (மே-ஜூன்) பட்டமும், மார்கழி (டிசம்பர்-ஜனவரி) பட்டமும் தான் ராகி விதைப்பதற்கு ஏற்ற சிறந்த பருவங்களாகும்''

''எந்தப் பட்டத்திற்கு எந்த ரகம் ஏற்றது?''


''வைகாசிப் பட்டத்தில் விதைக்க ''கோ-7'' என்ற ரகமும், மார்கழிப் பட்டத்தில் விதைக்க பாலூர்-1 (பி.எல்.ஆர். 1) என்ற ரகமும்தான் ஏற்றது''.

''இந்த விவரமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்ததுங்க?''

''அது பெரிய கதைங்க. நம்ம மாவட்டத்தில் நெல்லிக்குப்பத்திற்கு அருகில் பாலூர் என்று ஒரு ஊர் உள்ளது. அங்கு ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இருக்குதுங்க. போன ஆண்டு அந்த ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த 'வயல் நாள்' விழாவுக்கு வரச் சொல்லி எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தாங்க. நானும் போனேன். அங்குதான் இந்த விவரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

''அங்கு தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஏற்ற ராகி ரகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1966-67, 1967-68, 1968-69 ஆகிய மூன்று ஆண்டுகளில் பரிசோதனை நடத்தினார்களாம்.

''சோதனைப் பாத்திகளுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 வண்டி மக்கிய எருவும், 9 கிலோ தழைச் சத்தும், 9 கிலோ மணிச் சத்தும், 9 கிலோ சாம்பல் சத்தும், கொடுத்து வைகாசிப் பட்டத்தில் பாலூர்-1, கோ-2, கோ-5, கோ-7 என்ற நான்கு ரகங்களையும், மார்கழிப் பட்டத்தில் பாலூர்-1 (பி.எல்.ஆர். 1), அனகாபள்ளி-2 (ஏ.கே.பி. 2), கோ-7, கோ-8 ஆகிய நான்கு ரகங்களையும் பயிரிட்டுப் பார்த்தனர்.



''மேல் உரமாக 9 கிலோ தழைச்சத்தை நாற்று நட்டு முதல், களை எடுத்தவுடன், போட்டுள்ளனர். எல்லா ரகங்களுக்கும் வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், பயிருக்குப்பயிர் 6 அங்குலமும் இடைவெளி விட்டு நட்டார்களாம். நாற்று நட்ட 15-வது நாள் 250 மில்லி லிட்டர் என்ட்ரினையும், 600 கிராம் ''பினோட்டாக்ஸ்'' என்ற பூஞ்சாள மருந்தையும் 250 லிட்டர் தண்ணீரில் கலந்து எல்லா ரகங்களுக்கும் தெளித்தார்களாம். களை எடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற பின்செய் நேர்த்தி முறைகளையும் எல்லா ரகங்களுக்கும் சமமாகவே செய்தனராம்.

"அந்தந்த ரகங்களையும் தனியே அறுவடை செய்து அடித்துத் தூற்றி மகசூலைக் கணக்கிட்டு வந்தனராம். அதன்பின் மூன்று ஆண்டுகளிலும் கிடைத்த மகசூலின் சராசரியைக் கணக்கிட்டனராம்.

''மூன்று ஆண்டுகளிலும், வைகாசிப் பட்டத்தில் ராகி விதைத்துக் கிடைத்த சராசரி ஏக்கர் மகசூலைக் கணக்கிட்டுப் பார்த்ததில், கோ-7 என்ற ரகம் 1034·5 கிலோவும், கோ-5 என்ற ரகம் 877·6 கிலோவும், பாலூர்-1 என்ற ரகம் 856·3 கிலோவும், கோ-2 என்ற ரகம் 684·7 கிலோவும், கொடுத்துள்ளது தெரியவந்ததுங்களாம்.

"அது போலவே மூன்று ஆண்டுகளிலும் மார்கழிப்பட்டத்தில் ராகி விதைத்து கிடைத்த சராசரி ஏக்கர் மகசூலைக் கணக்கிட்டதில்,

''பாலூர்-1 என்ற ரகம் 1229·8 கிலோவும்,

''கோ-7 என்ற ரகம் 1172·4 கிலோவும்.





''கோ-8 என்ற ரகம் 1096·9 கிலோவும்.

''அனகாபள்ளி-2 என்ற ரகம் 987·2 கிலோவும் கொடுத்துள்ளது புலனாகியதாம்.

''இதனால் வைகாசிப்பட்டத்தில் கோ-7 என்ற ரகமே ஏக்கருக்கு சராசரியாக 1034·5 கிலோ மகசூல் அளித்து முதலிடம் பெறுகிறது என்பதும், மார்கழிப்பட்டத்தில் பாலூர்-1 என்ற ரகமே ஏக்கருக்கு சராசரியாக 1229·8 கிலோ மகசூல் அளித்து முதலிடம் பெறுகிறது என்பதும் தெளிவாகியதாம்.

''எனவே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வைகாசிப்பட்டத்தில் ராகி விதைக்க, கோ-7 என்ற ரகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், மார்கழி பட்டத்தில் ராகி விதைக்க, பாலூர்-1 என்ற ரகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் பாலூரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இச் சோதனைகளை நடத்திய கண்காணிப்பாளர் திரு வே. க. பழனியாண்டி அவர்களும், வேளாண்மை உதவியாளர் திரு வீ. சுப்ரமணியம் அவர்களும் என்னிடம் விளக்கிக் கூறினார்கள்'' என்று கூறினார் பண்ணையார்.

அதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த எம். எல். ஏ. ''ஆராய்ச்சி நிலையத்தில் கிடைத்த மகசூல் உழவர்களுக்கும் கிடைக்கும் என்பதற்கு என்ன உறுதியிருக்குதுங்க?'' என்றார்.

''அவர்கள் கூறிய முறைப்படியே சென்ற ஆண்டு மார்கழிப்பட்டத்தில், நம்ம வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியுடன் பாலூர்-1 என்ற ரகத்தை 3 ஏக்கரில் பயிரிட்டுச் சராசரியாக ஏக்கருக்கு 1,320 கிலோ மகசூல் எடுத்துள்ளேனுங்க. என்னைப் போலவே, எல்லாரும் செய்தால் நிச்சயமாக ஆராய்ச்சி நிலையத்தில் கிடைத்ததைவிட அதிக மகசூல் எடுக்கலாம்'' என்றார் பண்ணையார்.

'' சரி நேரமாகுது. 'ராகி மால்ட்' செய்கிற முறையை மட்டும் கொஞ்சம் சொல்லுங்க. நாங்க புறப்படுகிறோம்'' என்றார் பெருந்தலைவர்.

'' ராகிமால்ட் தயாரிக்க பழுப்பு ரகமுள்ள ராகியைவிட, வெள்ளைரக ராகி மிகவும் சிறந்தது. அதில் சத்தும் அதிகமாக உள்ளது. தூய்மைப்படுத்தப்பட்ட ராகி மணிகளை 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். 4 அல்லது 5 முறை தண்ணீரை மாற்றுவது நல்லது. அதன்பின் தண்ணீரை வடித்துவிட்டு, ஊறிய ராகி மணிகளை ஒரு ஈரத் துணியில் கட்டி முளைக்க வைக்க வேண்டும். துணியில் ஈரம் இருக்குமாறு செய்து வந்தால்தான், சீக்கிரம் முளைவிடும். முளைகள் வந்தவுடனேயே, அவை




களை ஒரு பாயிலோ அல்லது துணியிலோ பரப்பி நிழலில் உலர வைக்க வேண்டும். நன்ருக உலர்ந்த பின்பு, சிறிது தண்ணீர் தெளித்து, இடித்து மேல் தோலேயும், முளேகளேயும், பிரித்து எடுக்க வேண்டும். அதன்பின் தானியத்தை லேசாக வறுத்து எடுத்து திருகைக்கல்லிலோ, மாவு அல்லது காபி அரைக்கும் இயந்திரத்திலோ அரைக்க வேண்டும். அதன்பின் நேர்த்தியான பருத்திநூல் துணியிலிட்டு சலிக்க வேண்டும். சலித்த பின்பு கிடைக்கும் மாவுக்கு ' மால்ட் ' என்று பெயர். இம்மாவை பாலிலோ அல்லது தண்ணீரிலோ கலந்து சுவைக்குத் தக்கபடி சர்க்கரை அல்லது உப்புச் சேர்த்துப் பருகலாம் '' என்ருர்.

'' இன்று உங்களிடமிருந்து நிறையப் பயனுள்ள செய்திகளேத் தெரிந்து கொண்டோம். மிகவும் நன்றிங்க'' என்று கூறிக் கொண்டே பெருந்தலேவர் எழுந்தார்.

'' இன்னும் பதினேந்தாவது நாள் மின்விளக்கு ஏற்றுவிழா என்பதை மறந்து விடாதீர்கள் '' என்று கூறி எம்.எல்.ஏ. வும் எழுந்தார்.

'' அதுபற்றிய கவலேயை விடுங்கள். மிகவும் சிறப்பாக அமைத்து விடுகின்றேன் '' என்ருர் பண்ணேயார்.

எம்.எல்.ஏ.வும், பெருந் தலேவரும் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டனர். பண்ணேயார் ஏகாம்பரம் ராகியின் பெருமையை இரு பெரிய பொறுப்பில் உள்ளவர்களுக்கு உணர்த்திய மன நிறைவுடனும், ஊரை ஒளி மயமாக்கப் போகிருேம் என்ற புதிய தெம்புடனும் ஊராட்சிமன்ற உறுப்பினர்களேக் கூட்டிப் பேசுவதற்காக, ஊராட்சி மன்ற அலுவலகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.



**நீரிழிவு நோய்**
**நீங்கிடக்**
**கேழ்வரகு**
**சாப்பிடுங்கள் !**




கேழ்வரகு உணவுகளேத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நீரிழிவு நோய் (டயாபெட்டீஸ்) வராது. நீரிழிவு நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கேழ்வரகில் செய்யப்பட்ட உணவுகளேத் தொடர்ந்து சாப்பிட ஆரம்பித்தால், நீரிழிவு நோய் நாளடைவில் நீங்கிவிடும்.

கேழ்வரகைக் கொண்டு களி (இட்டு) அல்லது கூழ் தான் செய்யலாம் என்று பலர் நினைக்கிருர்கள். கேழ்வரகிலிருந்து கீழ்க்கண்ட உணவுகளேயும் தயாரித்து உண்ணலாம்.

1. அடை (இனிப்பு அல்லது காரம்).
2. அல்வா.
3. ரொட்டி.
4. தோசை.
5. பிட்டு.
6. பக்கோடா.
7. வடாம்.
8. சீடை.
9. முறுக்கு.
10. கேக்.
11. பூரி.
12. ராகிமால்ட்.

# சிறுசேமிப்புக் குறள்



*புலவர். மு. சிக்கந்தர்*

நாமிருக்கும் காலமெலாம் நன்மைதரத் தக்கசிறு
சேமிப்பில் சேர்த்தல் சிறப்பு.

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்(பு)
என்றுணர்ந்தால் வாழ்வாய் இனிது.

வரவுக்கு மேல்செலவைச் செய்யின் முதுமையில்
உறவுக்குக் கைகொடுப்பார் யார் ?

காசுள்ள காலத்தில் சேர்த்திடுதல் காற்றுவந்து
வீசுங்கால் தூற்றல் நிகர்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் ஏற்புடைய திட்டத்தில்
நாட்டத்தைக் கூட்டுவித்தல் நன்று.

எதிர்கால வாழ்வினை எண்ணாமல் வாழ்ந்தால்
மதிப்பாரோ சான்றோர் மகிழ்ந்து.

சிறுசேமிப் பின்சிறப்பைத் தேர்ந்தறியா ம(า)க்கள்
இறப்பினும் வாழினும் என் ?

குலவிளக்காய்ப் போற்றும் மகன்கல்வி கற்க
நலம்பயக்கும் திட்டத்தை நாடு.

பெருவிளக்காய் எண்ணும் மகள்மணந்து வாழத்
திருவிளக்காம் திட்டத்தை வாழ்த்து.

நட்பைப்போல் நன்மைத்தரும் நல்லசிறு சேமிப்பில்
திட்டங்கள் வெற்றிபெறும் நன்று.

அரசேற்ற திட்டந்தான் ஐயமே வேண்டாம்
வரவேற்று வாழ்வாங்கு வாழ்.

சேமிப்புச் செய்யாமல் சீரற்றுப் போய்விட்டால்
பூமிக்குத் தானே சுமை.

கூட்டுறவு, சேமிப்பு, நல்ல குடும்பநலம்
நாட்டுக்கு வேண்டாதார் யார் ?

வெள்ளநிகர் காலத்தை வெற்றியுடன் நீந்துதற்கே
உள்ளதிட்டம் சேமிப்பென் றுணர்.

மூவகைத் தேவைகளை முன்னறிந்து சேமிப்பில்
ஆவலுடன் சேர்த்தல் உயர்வு.

# வெண்பாப் போட்டி

## 9. நீறிலே பூத்த நெருப்பு

மீண்டுமிவண் சாதிக்கு மேடைகட்டி வைக்காதீர்
மாண்டபடி போகட்டும் மாண்புடையீர்—தீண்டாதீர்
மீறினால் தீமைதான் மேன்மையற்ற சாதியிவண்
நீறிலே பூத்த நெருப்பு.

—கல்லூர் மணியம், திருச்சி.

அடிபட்ட பாம்பும் அணியிழையார் நெஞ்சும்,
மிடிபட்ட மாந்தர்தம் வாழ்வும்—படியின்கண்
ஆறிக் கிடந்தாலும் அச்சோ ! அவைசெயலில்
நீறிலே பூத்த நெருப்பு.

—சுப்பராயலு பி. ஏ., பெரியகுளம்.

ஏழ்மைக் குடியி லெழுந்த வொளியாகும்
சூழிருள் போக்குஞ் சுடராகும்—வாழ்வளிக்கு
மீறிலா நம்கலைஞர் இத்தரையி லென்றுமே
நீறிலே பூத்த நெருப்பு.

—செந்தமிழ்ச் சிற்பி, சென்னை-5.

சோறிலை என்பார் சொகுசாகச் சுற்றிவர
பேறிலை என்றுரைப்பார் பெற்றபின்னும்—ஆறுவாரோ?
வேறிலையே என்றுமனம் வாடுவார் உள்ளமோ
நீறிலே பூத்த நெருப்பு.

—மு. பூங்கோவன், சென்னை-2.

மக்கட் சமுதாயம் மாணலங்கள் பெற்றுவக்கத்
தக்கநிலை செய்யும் தமிழரசு—மிக்கயர்வில்
மாறிலாக் கொள்கை மதுவிலக்கை மேற்கொள்ளல்
நீறிலே பூத்த நெருப்பு.

--மாதையூரான், திருவாமாத்தூர்.

நெஞ்சிலே பூத்த நெருப்பே சினமென்பேன் !
பிஞ்சிற் பழுத்தல் பிழையென்பேன்—நஞ்சுக்கும்
மாறாத நாகரிகர் மாட்டுச் சினப்பொறுமை
நீறிலே பூத்த நெருப்பு.

—சாந்தா வேங்கடேசன், நெய்வேலி--2.

மண்மகள் காணா மலர்வண்ணச் சீரடியாள்
பெண்பெருமை வையம் பிறங்கவைத்த—கண்ணகியின்
மாறாத கற்புநெறி மாண்பியலைக் காட்டுதுகாண்
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

தந்தை தடைவிதித்தார் தாயெனக்குக் காவலுற்றாள்
சிந்தையிலும் உன்நினைவு தீதென்றார்;—சொந்தந்தான்
மாறுமோ இத்தடையால்? மன்னவனே நம்காதல்
நீறிலே பூத்த நெருப்பு.

—குழ. அண்ணாமலை, கோவை.

தூய்தமிழும் நாடும் தனியாட்சிச் சிந்தனையும்
ஓய்வடையா மெய்யுழைப்பும் ஒற்றுமையும்—தாய்
நாட்டின்
பேறின்றி வேறுண்டோ? பன்னாளும் நெஞ்சினிலே
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரி நகர்.

தாழ்வும் உயர்வும் தரம்பிரித்(து) என்காதல்
வாழ்வு கெடுத்தார்; மறப்பேனோ—வேல்விழியை?
சேறிலே பூத்தசெந் தாமரை யாள்நினைவு
நீறிலே பூத்த நெருப்பு.

—மு. சிவலிங்கம், சிவகாசி.

வில்லுழவர் சொல்லுழவர் வேலுழவர் காத்துவந்த
வெல்லத் தமிழழிக்க வேற்றுருவில்—புல்லருமே
நூறுவகைத் தந்திரங்கள் நோற்றாலும் செந்தமிழர்
நீறிலே பூத்த நெருப்பு.

—சத்திரமனை-சித்திரகவி, திருச்சி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. கல்லூர் மணியம்,
கல்லூர் (அஞ்சல்),
(வழி) கிழாநிலை,
திருச்சி மாவட்டம்.

அல்பகலாய்ப் பாடுபடும்; ஆக்கம் பிறர்க்குதவும்
தொல்லை மிகுவாழ்வில் தோய்ந்துவிடும்—நல்லவரின்
சீறும் பசிக்கொடுமை செந்தழலாய்க் கொப்பளிக்கும்
நீறிலே பூத்த நெருப்பு.

—திசு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

செங்குருதி சிந்தியதும் செந்தழலில் மாண்டதுவும்
இங்கதனை யார்மறப்பர் எம்நாட்டில்—இந்திதனை
வேரறுத்து மாய்த்திடுவோம் வேல்மறவர் நாங்களின்று
நீறிலே பூத்த நெருப்பு.

—வீரு. இராசு, சென்னை-19.

கல்லக் குடிகாணக் காளையவ ராரூரார்
கொல்லத் தலைகொடுத்தா ரந்நாளில்—நல்வினையால்
வீறிலே தோய்த்தீந்தார் வெற்றித் தமிழரசாம்
நீறிலே பூத்த நெருப்பு.

—பெ. இராசசுந்தரம், சென்னை-56.

சுயஆட்சி வேண்டுமெனச் சூளுரைத்தோம், டெல்லி
நயமுடன் ஈதலே நன்றும்;—பயமுறுத்தி
தீராத் துயர்தந்தால் திக்கெட்டும் பற்றுதோ
நீறிலே பூத்த நெருப்பு.

—ந. செனர்த்தனன், அரக்கோணம்.

கன்னித் தமிழ்மொழியை கல்லூரிக் குள்வைத்தோம்;
முன்னைச் சிறப்பறுக்கும் மூர்க்கர்கள்—நம்மொழியை
நேரில் எதிர்த்தார்; கண்சிவந்தேன்; அந்நிறம்கண்
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. இராமசாமி, தும்மநாய்க்கன்பட்டி.

நாட்டினர் போற்றிட நல்வாழ்வு வாழ்ந்திடக்
காட்டுவது நல்வழிபோல் காட்சிக்கு—காட்டிடும்
மாறிய நெஞ்சந்தான் மானெஞ்சம் என்றென்றும்
நீறிலே பூத்த நெருப்பு.

—குமார்—கவிதாசன், புதுப்பாளையம்.

பொங்கும் புதுவெள்ளம் போலெழுந்தே எந்தமிழர்
தங்களுயிர் ஈவர் தமிழ்காக்க!—எங்களுளத்(து)
ஊறும் உணர்வழிக்க ஒண்ணுதே! அவ்வுணர்வு
நீறிலே பூத்த நெருப்பு.

—தேவன், பி.ஏ., கீழச்செருவாய்

தமிழினத்தைச் சாய்க்கத் தமிழகத்தில் வாழும்
தமிழ்ப்பகையே! புல்லறிவு மக்காள்!—தமிழினத்துச்
சாறிலே பூத்த தமிழனின் தன்மானம்
நீறிலே பூத்த நெருப்பு.

—குடந்தை வில்லேந்தி, சென்னை-5.

மக்கட்குத் தொண்டாற்றி மாண்புற வாழவைத்து
தக்கதொரு நற்புகழைத் தான்பெறவே—எக்கணமும்
வேறின்றி வென்றுநிற்கும் கட்சியன்றி மற்றயவை
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

இந்தியை ஏற்காத எந்தமிழர் நாட்டின்மேல்
தந்திரச் சேனையொடு தானு(ம்)வந்து—இந்திரனே
வீறிட்டுப் போரிடினும் வீழ்த்தொணுஎம் வீரமின்று
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. தியாகராசன், திருச்சிராப்பள்ளி-11.

நல்லரசை நம்மொழியை நச்சுளத்தால் சாய்க்கவெனும்
புல்லரவர் செல்லரித்துப் போயிடுவார்—நல்லாய்கேள்
வீறுமிகு தென்னகத்து வீரமிகு மக்களுளம்
நீறிலே பூத்த நெருப்பு.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்-2.

ஆயிரந்தான் நற்கருத்தை ஆர்வமுடன் ஊட்டிடினும்
போயிரந்து கூழ்குடிக்கும் புன்மைசேர்—பேயாளர்
வேறெனவே தாங்கருதி வேறுகார் ; அன்னவரே
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் இரெ. சி. பூபதி, இடைப்பாடி.

# பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

இரந்துண்ணும் வாழ்க்கையைப்பற்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளனர். சங்க இலக்கியத்தில் பல செய்திகள் காணக்கிடக்கின்றன. வள்ளுவரும், பிச்சையெடுப்பதைப் பற்றி ‘இரவு’ ‘இரவச்சம்’ என்னும் இரண்டு அதிகாரங்களை வகுத்துள்ளார். ‘‘இரப்பது இழிந்தது, கொடுப்பது உயர்ந்தது’’ என்னும் கருத்துக்களை ஏறக்குறைய எல்லாப் புலவர்களுமே எடுத்துக் கூறியுள்ளனர். ‘‘ஏற்பது இகழ்ச்சி’’ என்று கூறிய ஔவையார் ‘‘ஐயமிட்டு உண்’’ என்றும் கூறியுள்ளார். இக் கருத்தைப்புறநானூற்றுப் பாடல் ஒன்று அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஈயென இரத்தல்
இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல்
அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல்
உயர்ந்தன்று, அதனெதிர்
கொள்ளேன் என்றல்
அதனினும் உயர்ந்தன்று

கழைதின் யானையார் பாடிய இப்பாட்டு மேற்கூறிய கருத்துக்களைத் தெள்ளிதின் விளக்குகின்றது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

என்பது குறள்.

இப்பாவில் புரட்சிக் கருத்தைப் பொலியுமாறு செய்துள்ளார் வான்புகழ் வள்ளுவர். பிச்சையெடுத்துத்தான் வாழவேண்டுமென்றால், இந்த உலகத்தை உண்டாக்கியவன் தொலைந்து போகட்டும் என்று சீற்றமுடன் கூறுகின்றார். தம்மிடம் உள்ளதை ஒளிக்காமல் உதவுகின்ற ஒருவரிடம்தான் பிச்சை கேட்க வேண்டும். ஏனையோரிடம் கேட்கலாகாது என்பதும் வள்ளுவர் கருத்தாகும். இக்கருத்தினை

இரப்பான் இரப்பாரை
எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று

என்னும் குறளில் விளக்குகின்றார். பிச்சைக்காரரிடம் பிச்சை கேட்கின்றார் வள்ளுவர்.

> பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக நம் அரசு, முதல்வர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாளிலிருந்து நிதி திரட்டுகிறது. அண்ணல் காந்தியடிகள் தொழுநோயாளிக்குப் பணிவிடை செய்யும் படமுள்ள அட்டையை நம் அரசு வெளியிட்டுள்ளது. ஐம்பது காசு மதிப்புள்ள இந்த அட்டைகள் முப்பது லட்சம் அடிக்கப்பட்டுள்ளன. இவை மூலம் நிதி திரட்டவும், தனிப்பட்டமுறையில் நிதி திரட்டவும் அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அரசின் ஆக்கப்பூர்வமான முயற்சியைச் சுருக்கமாக விவரிக்கிறது இச்சிறு கட்டுரை.

பிச்சையெடுப்பவர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கின்றார்கள். பிச்சையெடுப்பதை அறவே ஒழித்து விட வேண்டும் என்னும் கருத்து பழங்காலப் புலவர்களுக்கு இல்லை. ஆனால் இன்றைய உலகம் புரட்சிப் பாதையில் நடைபோட்டு வருகின்றது. எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான இன்ப உலகைக் காண எல்லாரும் துடிக்கின்றனர். பிச்சைக்காரர் இல்லாத நாடுதான் நாகரிக நாடு என்னும் கருத்து விரைவாக வளர்ச்சி பெற்று வருகின்றது. ஒவ்வொரு நாட்டினரும் ‘‘எங்கள் நாட்டில் பிச்சைக்காரர் இல்லை’’ என்று பெருமை பேசிக்கொள்ளப் போட்டி போடுகின்றனர். பிச்சையெடுக்கும் வழக்கத்தை விரட்டியடிக்க நம் நாட்டிலும் பல்லாண்டுகளாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 1945-ஆம் ஆண்டில் பிச்சையெடுப்புத்தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பிச்சையெடுப்போர்க்கு உரிய தண்டனைகளும் இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன. பிச்சையெடுப்போர் தண்டனைத்தொகை கட்ட வேண்டும், இல்லாவிட்டால் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. எனினும் காப்பு இல்லங்கள் இருக்கும் இடங்களில் சிறைத் தண்டனைக்குப் பதிலாக அவர்கள் அங்கு அனுமதிக்கப்படுவர். பிச்சையெடுப்புத் தடுப்புச் சட்டத்தைக் காவல் துறையினர் செயல்படுத்தி வருகின்றனர்.

பிச்சைக்காரர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நல்ல உடல் நலம் பெற்றிருந்தும் பிச்சையெடுப்போர். நோயினால் வலிவிழந்து வேலை செய்ய இயலாமல் துன்புறுவோர் என்னும் இரண்டு வகையினரை நாம் அன்றாடம் காண்கின்றோம். தமிழக அரசு பிச்சைக்காரர்களுக்கென இரண்டு காப்பு இல்லங்களை நடத்தி வருகின்றது. சென்னையை அடுத்த மேம்பாக்கத்தில் ஒன்றும், காஞ்சிபுரத்தில் ஒன்றுமாக அவை இயங்கி வருகின்றன. சென்னை நகரிலே ஓட்டேரி என்னும் இடத்தில் ‘‘தயா சதன்’’ என்னும் தனிப்

## இரத்தல் இழிவு ஈயேனெனல் அதனினும் இழிவு

பட்ட நிறுவனத்தார் பிச்சைக்காரர் இல்லம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இதற்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் மாநகராட்சி, தன் செலவிலேயே ஒரு பிச்சைக்காரர் இல்லத்தை நடத்தி வருகின்றது. செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், மதுரை, நாகர்கோயில், சிதம்பரம் முதலிய நகராட்சிகள் பிச்சைக்காரர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இவற்றிற்கு அரசு உதவித் தொகை அளித்து வருகின்றது.

1961-ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ் நாட்டில் 40,000 பிச்சைக்காரர்கள் இருந்தனர். இந்த ஆண்டு அதாவது 1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை விவரம் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் 1961-ஆம் ஆண்டை விட 50 சதவீதம் எண்ணிக்கை அதிகமாகியிருக்கும் என்று கருத இடமுண்டு. எனவே தமிழ் நாட்டில் இன்றைக்கு ஏறக்குறைய 60,000 பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்களெனக் கொள்ளலாம்.

''பிச்சைக்காரர் தொல்லை'' என்று அடிக்கடி பேசுகின்றோம். தொல்லை என்பது உண்மைதான். எனினும் பிச்சைக்காரர்கள் வேண்டுமென்றே நமக்குத் தொல்லை கொடுக்கின்றார்களென்று எண்ணிவிடக் கூடாது. நமக்குத் தொல்லை கொடுப்பது அவர்களுடைய நோக்கமன்று. தீராத நோய்வாய்ப்படும் காரணத்தால் சிலர் உற்றார் உறவினரால் கைவிடப்படுகின்றனர். இத்தகையோரும், சூழ்நிலை காரணமாகப் பிச்சையெடுக்கும் நிலைக்கு விரட்டப்படுகின்றனர். பரம்பரை பரம்பரையாகப் பிச்சையெடுக்கும் தொழிலிலேயே ஈடுபட்டிருப்போரும் உண்டு. தொற்றுநோய் காரணமாகப் பிச்சைக்காரரின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போவதும் உண்டு. எனவே தொல்லை என்று மட்டும் இதனை எடுத்துக் கொள்ளாமல், இது ஒரு சமுதாய நலப்பிரச்சினை என்று கருதி நல்ல முறையில் தீர்த்து வைக்க முயல்வதே அனைவருக்கும் கடனாகும்.

1969-70-ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழு பிச்சைக்காரர்கள் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து அறிக்கை ஒன்று அனுப்பியுள்ளது. பிச்சைக்காரர் தொல்லையை நீக்குவதற்குரிய வழிவகைகளையும் அது எடுத்துக் கூறியுள்ளது. பிச்சைக்காரர்களின் துயரத்தைப் போக்கத் தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றது. 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிச்சைக்காரர் பற்றிய எல்லாச் செய்திகளும், கருத்துக்களும் விவரமாக ஆராயப்பெற்றன. தமிழ் நாட்டின் மாநகரங்களிலும் மற்றைய நகரங்களிலும் பிச்சைக்காரர் தொல்லையைப் படிப்படியாக நீக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. பிச்சைக்காரர்களிலும், நோயுற்றோர்களையே முதலாவதாகக் கவனிக்க வேண்டும். அவர்களிலும், தொழுநோயால் துன்புறுவோரை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு ஏற்ற நல் வாழ்வை அளிக்க ஆவன செய்தாக வேண்டும். எனவே, தொழுநோய் வந்து வருந்துவோர், தங்கி, மருத்துவச்சிகிச்சை பெற்று, மறுவாழ்வு பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஆறு சிறப்பு இல்லங்களைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. மூன்று இல்லங்களைக் கட்டுவதற்கான உத்தரவுகள் ஏற்கனவே வெளியிடப் பெற்றுள்ளன. கீழ்க்கண்ட மூன்று இடங்களில் தொழு நோயாளர் காப்பு இல்லங்கள் உடனடியாக திறக்கப்பெறும்.

(1) சென்னை-செங்கற்பட்டு நெடுஞ்சாலையில் செங்கற்பட்டு அருகிலுள்ள பரனூர் கிராமம்.

(2) தென் பிராந்திய நெடுஞ்சாலையில் உளுந்தூர் பேட்டைக்கு அருகில்.

(3) சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் பரகூர் அருகில்.

ஒவ்வொரு இடத்திலும் கட்டடம் கட்ட ஏழு லட்ச ரூபாய் செலவாகும். இச்செலவிற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

பிச்சைக்காரர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகும். அரசால் மட்டும் அப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை. பொருள் வசதி படைத்தோர் அனைவரும் ஆதரவு காட்ட வேண்டும். பிச்சைக்காரர் நலம் பேணவும், பொது மக்களிடமிருந்து நிதி திரட்ட அரசு முடிவு செய்துள்ளது. இந்நிதிக்கு அரசும் தன் பங்கினைச் செலுத்தும், எனவே பொது மக்கள் உளமகிழ்ந்து இந்த நற்பணிக்கு அள்ளி அள்ளித் தர முன்வர வேண்டும்.

"கரப்பார் இன்றேல் இரப்பார் இல்லை"

"பிச்சையெடுத்தேனும் பிச்சையை நீக்குவோம்"

# செய்திகள்!

# செய்திகள்! செய்திகள்!

## நீந்தும் குழந்தைகள்

தவழும் குழந்தைகளுக்குச் சரியாக நடக்கத் தெரியு முன்பே நீச்சல் சொல்லித் தரப்படுகிறது, ஜெர்மன் நாட்டில்.

இதற்காக 'கோலன்' நகரிலுள்ள உடற் பயிற்சிக் கல்லூரியிலும், ஜெர்மானியக் குடியரசின் பிற பகுதிகளிலுள்ள விளையாட்டு நிறுவனங்களிலும் வசதிகள் உள்ளன.

தாய்மார்கள் அங்குச் சென்று தத்தித் தத்தி நடக்கும் தங்களது குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தருகிறார்கள். குழந்தைகள் உடல் சளியினால் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டுச் சற்று வெதுவெதுப்பான நீரை நீச்சலடிக்கும் தொட்டியில் நிரப்பி வைக்கிறார்கள். அதில் குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தரப்படுகிறது.

## 5 விநாடிக்கு ஒரு
## 12 விநாடிக்கு ஒரு

அமெரிக்காவில் ஒவ்வொரு 12 வினாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. ஆனால், ஐந்து வினாடிக்கு ஒன்று வீதம் கார் உற்பத்தி ஆகிறது.

இங்கிலாந்தில் சுமார் 120 லட்சம் கார்கள் உள்ளன. ஸ்பெயினில் சுமார் 5 லட்சம் கார்கள் இருக்கின்றன. இந்தியாவில் 10 லட்சம் மோட்டார் வண்டிகள் உள்ளன. மாஸ்கோவின் அகன்ற தெருக்களைக் கார் அடைத்துக் கொண்டு விடுகிறது. அவ்வளவு கார்கள் அங்கே. 1969 கணக்குப்படி, ரஷ்யாவில் 16,000 மக்கள் கார் விபத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். மேற்கு நாடுகளில் அதே ஆண்டில் மொத்தம் 17 லட்சம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து நாடு 1969-ல் நூறு கோடி பவுன்கள் மதிப்புக்கு மோட்டார் கார் ஏற்றுமதி செய்திருக்கிறது.

## நிலத்துக்குள் கடல்

நமது தமிழகத்தில் நிலத்துக்கு அடியிலுள்ள நீரை வெளிக்கொணர்ந்து பாசனத்திற்குப் பயன்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறதல்லவா ?

ரஷ்ய நாட்டிலும் இந்த நிலத்தடி நீரில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. கழகஸ்தான் என்ற பகுதியில் பாலைவனம் போன்ற பகுதிகளில் நிலத்திற்கடியில் 70 இடங்களில் கடல் போல் வற்றாத நீரூற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் சதுர கிலோ மீட்டர் நிலத்தில் இந்த நீரூற்றுக்கள் உள்ளன.

இந்த நீரூற்றுக்களிலிருந்து வினாடிக்கு 3,900 கனமீட்டர் நீர் கிடைக்கும். அதைக் கொண்டு ஏறத்தாழ 15 கோடி ஹெக்டேர் நிலத்திற்கும், 40 லட்சம் ஹெக்டேர் மேய்ச்சல் தரைக்கும் பாசன வசதி செய்ய முடியுமெனக் கணக்கிட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே சுமார் 35 நகரங்களுக்கும் பல கிராமங்களுக்கும் இந்த நீர் பயன்படுத்தப்படுகின்றது.


## 1500 அழகிகள்

ஜெர்மனி நாட்டில் மூனிக் நகரில் 1972-ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளைக் காண உலகெங்குமிருந்து வரும் ரசிகர்களுக்கு வழிகாட்டிகளாக வரவேற்பாளர்களாகப் பணியாற்ற 1,500 அழகு மங்கையரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றனர். இதற்காக ஏற்கனவே எட்டுப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு மூனிக் நகருக்கு வந்துவிட்டனர். வந்தவர்களில் ஒருவர் இந்தியப் பெண்மணி. பெயர் ரவிபாலா. பிரேசில், கானா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்தும் இந்த வரவேற்பாளர்கள் வந்துள்ளனர்.

மூனிக் நகரில் ஒலிம்பிக் அரங்கத்தில் போடப்படும் கூரைதான் உலகத்திலேயே மிகப் பெரிய கூரையாகும். 80 ஆயிரம் சதுர மீட்டர் அளவுள்ள இந்தக் கூரை சிறுசிறு இரும்புத் தகடுகளைக் கொண்டு இணைக்கப்பட்டதாகும்.

ஒலிம்பிக் விளையாட்டினையொட்டி ஜெர்மனியில் பரிசுச் சீட்டு ஒன்றும் நடத்தப்படுகிறது. அதில் 5 கோடி பரிசுச் சீட்டுகள் விற்கத் திட்டமிட்டுள்ளனர். அதிலிருந்து கிடைக்கும் நிதி விளையாட்டுக்கள் அமைப்புக் குழுவிற்குத் தரப்படும்.


அண்ணாவின் வழியில் வந்த அறிவிப்புகள்
வெயிலுக் கேற்ற நிழலுண்டு...
முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளையொட்டிச் சென்னை நகரில் 48 இடங்களில் சீரணியினர் 'நிழற்கொட்டை' வழங்குகின்றனர்.
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரே நாளில் நிலமற்ற 42000 - ஏழை எளியவர்களுக்கு நிலப்பட்டா - மனைப் பட்டாக்கள் வழங்கப் பெற்றன.
தமிழ்நாடு உணவு விடுதி
சென்னையில் சிற்றுண்டிகளின் விலைகளைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
தமிழ்நாடு உணவு விடுதி
விலை விவரம்
தோசை
25 காசு
வடை
12 காசு


தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை
பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிக்க 2 ஹெலிகாப்டர் விமானம் வாங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. 10 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு இந்த விமானங்கள் பயன் படும்.
கும்மிடிப்பூண்டியில் நடமாடும் மருத்துவ மனை துவக்கப்பட்டது. தமிழகமெங்கும் கிராமங்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.
நடமாடும் மருத்துவமனை
பெண்கள் பகுதி.
ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது!
பிச்சைக்காரர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பிச்சைக் காரர் மறுவாழ்வு நிதி திரட்டுகிறார் கலைஞர்!
கோபன்...
பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

# பார்த்தோம் படித்தோம்

**அறிவுப் பயணம்**

'தமிழரசு' கைத்தறி இருவார விழா மலர் என் மனத்தைக் கவர்ந்தது.

அட்டைப் படம் ஓவியக் கலையின் கோபுரமாயிருந்தது. மலர்களையும்—சின்னக் குழந்தைகளையும் அட்டையில் இதே அழகோடு வெளியிட்டால் நல்லது.

''ஈசன் விறகு விற்றான்; அண்ணா கைத்தறித் துணி விற்றார்'' என்கிற பாசொலியின் கற்பனை உருக்கமானது.

மார்டின் லூத்தரைப் பற்றிய செய்திகள், பயணக் கட்டுரை படிக்கிறேனா இல்லை நான் அறிவுப் பயணம் செய்கிறேனா என்கிற திகைப்பினை என்னில் உருவாக்கின.

—நா. காமராசன், சென்னை-14.

**வாழ்க வட ஆர்க்காடு**

இலண்டன் நகரத்துப் போக்குவரத்தினை ஒரு தமிழர்—அதுவும் எங்கள் மாவட்டத்துக்காரர் திறம்பட நிருவகிக்கிறார் என்பதை அறிந்து பெருமகிழ்வு எய்துகிறேன்! வாழ்க அவர்!

—கே. எஸ். மணி, வேலூர்.

**குறள் வாழ்க !**

குற்றவாளிகளைத் திருத்துவதற்கு அருமையான அறிவுரைகளைக் கூறியிருக்கும் சீதாபதியைப் பாராட்டுகிறோம். வள்ளுவரின் 'இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால்' என்ற குறள் இடமறிந்து பயன்படுத்தியிருப்பது போற்றலுக்குரியது.

—ஏ. கே. ராமன், தஞ்சை.

**தக்க தலைவருண்டு—பயமில்லை மனமே !**

ஏழை-நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்கு அருமையான திட்டங்கள் உருவாகியிருக்கின்றன. வளமான வாழ்வு—அமைதியான வாழ்வு அவர்களை நாடி வருகிறது—என்பதைத் தெளிவாக்கியுள்ளது, 'வீடு உண்டு; வேறு என்ன வேண்டும் ?' என்ற கட்டுரை. தமிழக அரசின் புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வைக்க, தகுந்த குடிசை மாற்று வாரியத் தலைவர் கிடைத்து விட்டார்; ஏழைகளுக்கு இனிக் கவலையே இல்லை !

—என். ஆர் சந்திரன், கோவை-9

**கவர்ந்த கைத்தறி !**

கைத்தறி விழா மலரில் கருத்துக்குகந்த கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறீர்கள். கைத்தறி மாளிகை, திசையெட்டும் எழில் பரப்பும்தென்னாட்டுக் கைத்தறித் தொழில், கைத்தறிக் கண்காட்சியில் கண்டதும் கேட்டதும் ஆகிய கட்டுரைகள் என்னைக் கவர்ந்தன.

—எச். கமலவல்லி, முகவை.

**பயனுள்ள கட்டுரை**

கற்பது எப்படி—பயனுள்ள கட்டுரை. கற்றலின் முப்பெரும் பிரிவைத் தெளிவுற எடுத்துக் காட்டிய கட்டுரை ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

—கோ. மீனமணாளன், சேலம்-5.

## வெண்பாப் போட்டி-11

ஈற்றடி **இரந்தும் ஒழிப்போம் இரப்பு**

முடிவு நாள் : 15—6—1971

பரிசு ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—


ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

தமிழ் நாட்டுக்கு


# மாநிலத் திட்டக்குழு



நம் நல்வாழ்வுக்காக நம் தேவைகளை உணர்ந்து, உணர்த்திட இந்தியாவிலேயே முதன்முறையாக மாநிலத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆக்கப் பணிகளின் முழு வெற்றிக்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டாமா?

**நம் ஒத்துழைப்பைக் காட்டும் ஒரேவழி-**



# திட்டமிட்ட அளவான குடும்பம்

அதுவே

நாட்டுக்கும் நல்லது!
வீட்டுக்கும் நல்லது!!



வெளியீடு:
இயக்குநர்: சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து


பதிவு எண். M 8657



பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்

# பிச்சைக்காரர்

## மறுவாழ்வு நிதிக்காக



**தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும் ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை:**

**38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்**

ஜூன் 3ல் முதல்வர் பிறந்த நாளில் 33-வது குலுக்கல் துவக்கம்

சிறப்புப் பரிசுகள்: ஒரு முதற் பரிசு **10** லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய் • ஒரு மூன்றுவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்

100 பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் **5000** ரூபாய்
100 பேருக்கு ஆறுவது பரிசுகள் ஒவ்வொன்றும் **3000** ரூபாய்
100 பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் **2000** ரூபாய்
1000 பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் **1000** ரூபாய்
2000 பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் **100** ரூபாய்

**துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-1971**

***இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 245***

**வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியீட்டுக்குட்பட்டது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2.



10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்



வரவோ பல லட்ச ரூபாய்